




# தமிழரசு

1-4-1987 ரூ. 1



ஸ்ரீஹரிகோட்டாவிற்குச் செல்லும் வழியில் சென்னைக்கு 23.3.87 அன்று வருகை புரிந்த மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம் ஜி ஆர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.



## தமிழ் நாடு அரசின்

# 1987-88 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1987-88ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்ற அவைமுன் வைத்து, 1987ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2018, அட்சய, பங்குனித் திங்கள் 6ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே!

1986–87ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1987–88ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த அவையின் ஒப்புதலைப் பெறவேண்டி, அவையின்முன் வைக்கும் கடமையை நிறைவேற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் பொன்மொழியாகும். கொடை வழங்குதல், அருள்புரிதல், செங்கோல்முறை பேணுதல், குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு பண்புகளையும் உடைய அரசு, அரசு இனத்திற்குள்ளேயே ஒளிபொருந்திய ஒன்றாகும் என்பது அதன் சிறப்பான பொருள். இத்தகைய நல்ல பண்புகளை உள்ளடக்கிய ஒரு நல்லரசைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய கொள்கை வழியிலும், செயல்முறையிலும் நின்று நல்லறிஞர் பெருமக்கள் அனைவரின் உதவியோடும், ஒத்துழைப்போடும் நடத்திச் செல்லவே, இன்றைய தமிழக அரசு பெரிதும் முயன்று வருகிறது.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2018
அட்சய - பங்குனி 18
மலர்: 17 இதழ்: 19
1-4-1987

2. தமிழக அரசு இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் இன்னல்களையும், செயற்கைச் சூழ்நிலைகளால் ஏற்படுத்தப்படும் இடுக்கண்களையும் சமாளித்து, வரும் ஆண்டில் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பணிகளிலும், மாநிலத்தை மேம்படுத்தும் செயல்களிலும் ஈடுபாடு கொள்ள வேண்டிய இன்றியமையாக் கடமையைக் கொண்டிருக்கிறது.

3. இந்தியா முழுவதையும் பாதிக்கக்கூடிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பொருளாதாரம், அதனால் காரணமாக ஏற்படும் பணவீக்கம், கட்டுக்கடங்காமல் அகில இந்திய அளவில் ஏறிக்கொண்டே வரும் விலைவாசி ஏற்றம், கடன்பளு, உயர்ந்து கொண்டேவரும் வட்டிவிகித அளவு முதலியவை தமிழக் அரசின் பொருளாதாரக் கட்டுக்கோப்பையும், தமிழக மக்களின் பொருளாதார வாழ்வையும் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன. என்றாலும், திட்டங்களை இலக்குக்குமேல் நிறைவேற்றுவதிலும், வளர்ச்சித் திட்டங்களை முடித்து வைப்பதிலும், நலிந்தோர்க்கான நல்வாழ்வுத் திட்டங்களை பலவகைகளிலும் நிறைவேற்றுவதிலும், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே தொல்லையுறுவோர்க்கு உதவித் தொகை வழங்கும் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு பெரும் பொறுப்பு ஏற்று, கடமைகளை முறைப்படி ஆற்றி வருகின்றது.

4. இயற்கை இடர்ப்பாட்டால் ஏற்பட்டுள்ள வறட்சியின் கொடுமை ஒரு பக்கம் தமிழக மக்களை வாட்டிக் கொண்டிருக்கும்போது, செயற்கைச் செய்வினையின் காரணமாக அரியலூருக்கு அருகில், மருதையாற்றுப் பாலத்தில், மனிதத் தன்மையற்ற, கயமைப்பண்பு படைத்த வீணர்கள் வைத்த வெடிகுண்டு காரணமாக இரயில் கவிழ்க்கப்பட்டு, ஒரு குற்றமும் செய்யாத பயணிகளில் சுமார் 25 பேருக்குமேல் உயிரிழந்தார்கள் என்றும் சுமார் 120-க்கு மேற்பட்டவர்கள் படுகாயமுற்றனர் என்றும் வெளிவந்த செய்தி நாட்டின் நலனில் அக்கறை கொண்ட எல்லோருக்கும் அதிர்ச்சியையும் துயரத்தையும் அளிக்கக்கூடிய ஒன்றாகும். உயிரிழந்தவர்கள் அனைவரின் குடும்பத்தினர்க்கும் இந்த அவையினரின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயமுற்றவர்கள் அனைவர்க்கும் அவர்கள் விரைவில் நலம்பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்ற இந்த அவையினரின் நல்ல எண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. வெடிகுண்டு வெடித்து இரயில் கவிழ்ந்த செய்தியைக் கேள்வியுற்றதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடி நிவாரணப் பணிகளுக்குரிய அதிகாரிகள், பணியாளர்கள் அனைவரையும் முடுக்கி விட்டு, நிவாரணப் பணிகளில் மிகத் தீவிரமாக, இடைவிடாமல் இறங்கிப் பணியாற்றும்படி பணித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அலுவலர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொதுப்பணித் துறை அலுவலர்கள், உயர்மட்ட அதிகாரிகள் உள்பட காவல் துறையைச் சார்ந்தவர்கள், மருத்துவ வல்லுநர்கள் போன்ற பலரும் விரைந்துசென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். மாண்புமிகு மாநில அமைச்சர்களும், மத்திய அமைச்சர்களும் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கே சென்றனர். நிவாரண நடவடிக்கைகளும், மருத்துவப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளும், இருப்புப் பாதையைச் செம்மைப் படுத்தும் நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

6. இந்த வெடிகுண்டு வைப்பு நிகழ்ச்சி கயவர்களால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட நாசவேலைதான் என்பதை எல்லாச் செய்தி நிறுவனங்களும் ஐயப்பாட்டிற்கு இடமின்றி அறிவித்துள்ளன. வெடிகுண்டு வைத்தவர்களைக் கண்டு பிடிக்கத் தனிக் காவல்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட இடத்தில், சிவப்பு மையினால் எழுதப்பட்ட சுவரொட்டி "பாலஸ்தீனத்தைப் போல தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும். தென்னாப்பிரிக்காவைப் போன்று இலங்கையுடனும் உறவுகளைத் துண்டிக்க வேண்டும். தமிழ்ப் போராளிகளைக் கைது செய்யாதே. போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைத் திருப்பிக் கொடு" என்றும், அரியலூரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் "இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு தனியாகப் பிரியாதவரை, இந்தித் திணிப்பைத் தடுக்க முடியாது; காவிரிப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது. பஞ்சாபிலிருந்து இராணுவத்தை வெளியேற்று" என்றும் வாசகங்கள் எழுதப்பட்டு, 'தமிழ்நாடு விடுதலைப்படை' சார்பில் ஒட்டப்பட்டிருக்கின்றன. எப்படிப்பட்ட மனப்போக்குக் கொண்டவர்கள் இப்படிப்பட்ட நாசவேலையைச் செய்திருக்கின்றனர் என்பது ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். புலனாய்வின் மூலம் உண்மைகள் புலப்படக்கூடும், உண்மையான குற்றவாளிகள் பிடிபடக்கூடும்.



7. தமிழக மாநில மக்களின் சிக்கல்களை யெல்லாம் செம்மையான முறையில் தீர்த்துவைப்பது என்பது, முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை. நமது பொருளாதாரம் எந்த எந்த வழிகளில், எந்த எந்த வகைகளில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று வரையறுக்கும் உரிமைகளையும், அவற்றிற்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் நமது அரசமைப்புச் சட்டப்படி மத்திய அரசே பெற்றிருக்கிறது. மக்களின் நலன் கருதி இந்த அரசு முக்கியம் என்று கருதுகிற திட்டங்களுக்கு, மத்திய அரசு ஆதரவு தந்து, அவற்றை ஆய்ந்து பார்த்து ஏற்று, வரையறுக்கப்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகளின் வாயிலாக ஆதரவு அளித்தாக வேண்டும். மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் பணி மத்திய-மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகும் என்பதும், இதில் மிகப் பெரிய பங்கினை மத்திய அரசும், மிகச் சிறிய பங்கினை மாநில அரசும் கொண்டிருக்கின்றன.

8. மத்திய-மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பு சிறப்பாகவும், செம்மையாகவும் நடந்தேற வேண்டுமானால், உறவு முறையிலும் உரிமைப் பரிமாற்றங்களிலும் சீரான—தேவையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் வளமான மாநிலங்களைக் கொண்ட வலுவான இந்தியா அமையும்.

"இந்தியா உண்மையான கூட்டாட்சி நாடாகத் திகழ வேண்டும்; மாநிலங்கள் உரிமையோடு கூடிய கூடுதல் அதிகாரங்களைப் பெற்ற தன்னாட்சிப் பகுதிகளாக விளங்க வேண்டும்" என்ற கருத்தைத்தான் மீண்டும் இவ்வுரையில் வலியுறுத்த விரும்புகிறேன்.

9. பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967இல் இந்த அவையில் "மாநிலங்களுக்கு வளமான வருவாய், ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட முறையின் அடிப்படையில்தான் கிடைக்கும். அதற்கான முறையில் திட்ட நிதியை ஒதுக்கிக் கொடுத்து, அதனைச் செலவிடும் வகைபற்றிய உரிமையை மாநிலங்களுக்கு அளிப்பது ஆகியவை மூலம் மாநிலங்களின் பொருளாதார வலிவு செம்மைப் பட்டால் ஒழிய, பெருகிவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, அவர்களுக்குப் புதுவாழ்வு தேடித்தரும் பொறுப்பினை மாநில அரசுகள் செம்மையான முறையிலே செய்திட இயலாது" என்று குறிப்பிட்டது கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

10. 1987–88ஆம் நிதியாண்டு, நாம் சிறந்த பணிகளைச் செம்மையாக நிறைவேற்றுவதற்குத் துணை நிற்குமாக! மத்திய—மாநில அரசுகளின் உறவு எப்பொழுதும்போல் நல்லபடியாகவே நிலவட்டும்! மத்திய அரசு வலிவு பெறத்தக்க அளவுக்கு மாநில அரசு வளம் பெறட்டும்!

**இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை**

11. இலங்கையிலுள்ள யாழ்ப்பாணப் பகுதியில் தமிழர்கள்மீது வன்முறைகள் தொடர்ந்து கண்மூடித் தனமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் படுகொலை செய்து வருகின்றனர். இலங்கை அரசு அதன் மக்கள்மீது விதித்துள்ள தடைகள்

காரணமாகத் தமிழர்கள் பசி, பட்டினியால் வாடி மரணமடையும் நிலையில் இருக்கின்றனர். இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளும், இலங்கை அரசின் போக்கும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கனவாகும். இந்த மனிதாபிமானமற்ற செயல்களுக்கு உலகம் முழுவதிலும் உள்ள பெருவாரியான மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இப் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு வரவேற்று அவற்றிற்கு ஆதரவு அளித்து வருகிறது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் படும் வேதனை பெருகிக் கொண்டே போகிறது. அவர்கள் நிலைமை இன்னும் மோசமாவதற்கு முன்னர், அதைத் தடுக்க உடனடியாக, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனவே, இதை உடன் கவனித்து, இந்த இக்கட்டான தருணத்தில், நிலைமையை மேலும் மோசமடையாமல் தடுக்க, மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதுடன், இலங்கை அரசை இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி விட்டு இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, பேச்சு வார்த்தையைத் தொடங்கும்படி பல வகையிலும் வற்புறுத்த வேண்டும்.

### பெரும் வீட்டு வசதித் திட்டம்

**12.** இந்த அரசு பரிசீலித்தும் நிறைவேற்றியும் வருகின்ற முக்கியமான பணிகளையும் செயல் திட்டங்களையும் ஆளுநர் அவர்கள் அண்மையில் ஆற்றிய பேருரையில் குறிப்பிட்டிருந்தார்கள். இப் பணித் திட்டங்களுக்கு விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப் பணித் திட்டங்களுள் சிலவற்றை மட்டும் இங்கு விரிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பெரும் வீட்டு வசதித் திட்டத்திற்கு இந்த அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள அணுகு முறை பற்றி குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. முப்பது இலட்சம் குடும்பத்தினருக்கு வீட்டு வசதி அளிக்கவேண்டுமென்ற நம்முடைய குறிக்கோளை எய்த, பரந்த அளவில் வலுவான அடிப்படை வசதியை உருவாக்குவதுடன், இருக்கக்கூடிய அனைத்து வழிகளிலிருந்தும் பெருமளவு நிதியைத் திரட்ட வேண்டியதும் அவசியமாகும். இந்த அடிப்படையில்தான் வட்ட அளவிலும், வட்டார அளவிலும் தனித்தியங்கக்கூடிய நிலையில், செங்கல், ஓடு முதலிய கட்டுமானப் பொருட்கள் உற்பத்திச் சங்கங்களை அமைக்கத் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. இதனால், இச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தங்கள் மேற்பார்வையின்கீழ் வருகின்ற வீடுகளுக்கு வேண்டிய கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்க முடியும். இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசு ஒதுக்கியுள்ள நிதியும், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழும், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழும் வீட்டு வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியும் இச் சங்கங்களுக்கு அடிப்படை மூலதனமாக அமையும். இச் சங்கங்கள் இவ்வாறு அளிக்கப்படுகின்ற மூலதனத்தைக் கொண்டு வெளியில் கடன் வாங்கவும் முடியும். இந்த அணுகுமுறையினால் ஆண்டொன்றுக்கு மொத்தம் சுமார் ரூ. 250 கோடி முதல் ரூ. 300 கோடி வரை நிதியுதவி கிடைக்கும். புதிதாகக் கட்டப்படும் வீடுகளுக்கும் ஏற்கெனவே இருக்கின்ற வீடுகளை மேம்படுத்துவதற்கும் வேண்டிய கட்டுமானப் பொருட்களை உற்பத்திசெய்து வழங்கி ஆண்டுதோறும் பெருவாரியான அளவுக்கு வீடுகள் உருவாக இந்த நிதி போதுமானதாக இருக்கும். இரும்பு




உத்தரங்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்ற தொழில் பிரிவுகளுக்கும் இதுபோன்ற அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்கப்படும். இவ்வாறு அமைக்கப்படவிருக்கும் வீடுகளுக்கு உரிய தேவைகளைக் கண்டறிந்து அடிப்படைக் கட்டுமானப் பொருட்களைப் பொறுத்த வரையில், ஒரே மாதிரியான வரையறைகளையும் நிர்ணயிக்கலாம். 'இந்திரா ஆவாஸ் யோஜனா' திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்கும் கொள்கையை மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளதால், நாம் தெரிவித்திருக்கும் இப் புதிய அணுகுமுறையை, மத்திய அரசு ஏற்று, மைய அரசின் நிதி உதவிகளை அடிப்படை மூலதனமாக அளித்தும், குறைந்த வட்டி வீதத்தில் கடன் தொகைகளை நிதியுதவி நிறுவனங்களிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் பெற்றுத் தந்தும், நமக்கு ஆதரவு அளிக்கும் என்று நாம் நம்புகிறோம். 'அனைத்து நாடுகள் வீட்டுவசதி ஆண்டாகக்' கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் அதிகமான குடும்பத்தினருக்கு வீட்டுவசதி அளிக்க நாடு முழுவதிலும் இந்த அணுகுமுறையை நன்கு பின்பற்றலாம் என்று நாம் உறுதி கொள்ளலாம்.

**13.** தேசிய வீட்டு வசதி வங்கி ஒன்றை அமைக்கப் போவதாக மத்திய அரசு அறிவித்திருப்பதை நாம் மனதார வரவேற்கிறோம். வீட்டு வசதிப் பணிக்கு வேண்டிய நிதி உதவியை அளிக்க, இப்பணியில் வல்லமை பெற்ற அமைப்பாக இந்த வங்கி இருக்கும் என நம்புகிறேன். வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் நிறைவேற்றி வருகின்ற விரிவாக்கப் பணிகளுக்கு வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் பெருமளவிற்கு நிதியுதவியை நாம் ஏற்கெனவே பெற்றுள்ளோம் என்பதை, உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1985–86ஆம் ஆண்டில், இந்த அமைப்புகளிடமிருந்து ரூ. 26.23 கோடியை நாம் பெற்றிருக்க, 1986–87ஆம் ஆண்டில், ரூ. 46.36 கோடியைப் பெற்றுள்ளோம்.

### ஒருங்கிணைந்த குழந்தை நல-சத்துணவுத் திட்டம்

**14.** முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தையும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின்கீழ் தற்போது அளிக்கப்படுகிற சுகாதார வசதிகளையும் ஒருங்கு சேர்க்கும் செயற்குறிப்பை வகுத்து நிதியுதவிக்காக உலக வங்கி முன் அதனை வைக்க



இருப்பதாக ஆளுநர் அவர்கள் தன்னுடைய பேருரையில் குறிப்பிட்டிருந்தார்கள். 2 முதல் 5 வயதுத் தொகுதியிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவளிக்க சமூக நலத் துறை நடத்தும் 28,125 குழந்தை நல நிலையங்கள் இப்போது உள்ளன. தொகுதிக்கு 5,000 மக்கள் தொகை கொண்ட பல தொகுதிகளுக்கு சுகாதார வசதி அளிக்க பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்களுடன் 7,200 சுகாதார துணை நிலையங்களை இதுநாள் வரை நாம் அமைத்துள்ளோம். 1987–88ஆம் ஆண்டில் மத்திய அரசு இசைவுடன் இதவன 7,700 ஆகப் பெருக்கி, சுகாதாரத் துணை நிலையத் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதிலும் உள்ள மக்களுக்கு சுகாதார வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்று 698 தொடக்கச் சுகாதார நிலையங்கள் இருக்க, 1987–88ஆம் ஆண்டில், மேலும் 140 தொடக்கச் சுகாதார நிலையங்களை அமைக்க முடிவு செய்துள்ளோம். இதனால், இந்த ஆண்டு இறுதிக்குள் தோராயமாக 58,000 மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்கின்ற இலக்கினை நாம் எய்திவிடுவோம். இந்த அளவிற்கு பரந்த அளவிலும், வலுவான நிலையிலும், அடிப்படை வசதிகளைப் பெற்றிருக்கும் தனித்தன்மையின் காரணமாக, உலக வங்கியிடம் நம்பிக்கையுடன் நிதியுதவி கேட்க நம்மால் முடிகின்றது. அனுமதிக்கக்கூடிய நிதியுதவியைப் பெறுவதற்கு முன்னர், அந்த வங்கி கூறுகின்ற பொறுப்புகள் அனைத்தையும் நிறைவு செய்ய அவகாசம் தேவைப்படுகின்ற நிலைமை மற்ற மாநிலங்களுக்கு இருக்கலாம்; ஆனால், நமக்கு இல்லை. 5 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்துணவு அளித்து, பாலர் பள்ளிக் கல்வி புகட்டி, முத்தடுப்பு ஊசி போட்டு, ஏனைய சுகாதார வசதிகளை அளிக்கும் ஒரு மைய அமைப்பாக குழந்தை நல நிலையம் ஒவ்வொன்றும் செயல்படும். கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நோய்த் தடுப்பு மருந்துகளை கொடுப்பதுடன் தக்க சிகிச்சையையும் இந்த நிலையம் அளிக்கும். இத் திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கவும், சுகாதார வசதி அளிக்கவும், சுமார் ரூ. 300 கோடிக்கு நிதியுதவி அளிக்க அரசு ஏற்கெனவே பொறுப்பு ஏற்றிருக்கிறது. இந்த நிலையத்திற்கு நிலையான கட்டிடங்கள், சாதனங்கள், மருந்துகள், பயிற்சி வசதிகள் மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகள் போன்ற அடிப்படை வசதிகளை நாம் உலக வங்கியிடமிருந்து கோருகின்றோம். இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 400 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

### காலணி வழங்கும் திட்டம்

**15.** குழந்தைகளுக்கும், கிராமப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகள் வழங்கப்படும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்டது. இது, நாம் இவர்களுக்கு ஏற்கெனவே அளித்து வருகிற பல்வேறுவகையான உதவிகளுக்குத் துணை சேர்க்கும் மற்றோர் உதவியாக இருக்குமென உறுதியாக நம்புகிறோம். ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரைசெல்லும் பள்ளிச் சிறார்களுக்கு இன்று சீருடைகளும், பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1987--88ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் இலவசக் காலணிகளையும் பெறுவர். மேலும், கிராமப் புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களும் இலவசமாகக் காலணிகளைப் பெறுவர். குழந்தை நல நிலையங்களே பொறுப்பேற்று இவர்களுக்கு இலவசமாகக் காலணிகளை வழங்கும். இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்படுகிறது. இத் திட்டத்தினால் கிடைக்கும் மற்றொரு பயன், நொடித்துப்போன காலணி தயாரிப்போர் சங்கங்கள் புத்துயிர் பெறுவதோடு, மாநிலம் முழுவதும் பரவலாகப் புதிய சங்கங்களும் உருவாகும். அதன் மூலம் காலணி தைப்போர் ஆயிரக் கணக்கான பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கும்.

### நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்

**16.** உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறும் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிற வேறு இரு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டமும், நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து சென்னை மாநகருக்கு அதிக நீர் வழங்கும் சிறப்புத் திட்டமும் ஆகும். ரூ. 150 கோடி செலவிலான இந்த நீர் வழங்குத் திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கு முன்னர் உலக வங்கியுடனாவ பேச்சு வார்த்தை விரைவில் நடக்க இருக்கின்றது. ரூ. 428 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் பற்றி உலக வங்கியின் பரிசீலனையும் முடிவுற்றுள்ளது. இவ்விரு திட்டங்களை மேற்கொள்வதன் வாயிலாக நம்முடைய நகர்ப்பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி, வீட்டு வசதி, குடிநீர் வழங்கு வசதி ஆகிய நீண்டகாலத் தேவையை நிச்சயமாக நம்மால் நிறைவு செய்ய முடியும்.

### முக்கியமான துறைகளுக்கு ஒதுக்கீடு

**17.** பல்வேறு முக்கியமான துறைகளுக்கான ஒதுக்கீட்டையும் அரசு கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. கல்விக்காக, நடப்பாண்டில் ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, 1987–88இல் ஒதுக்கீடு ரூ. 597 கோடியாகும். வேளாண்மைக்காக 1986–87இல் ரூ. 118 கோடி ஒதுக்கப்பட்டிருக்க 1987–88இல் ஒதுக்கீடு ரூ. 141 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக 1986–87இல் ஒதுக்கப்பட்ட ரூ. 177 கோடி, 1987–88இல் ரூ. 193 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. சமூக நலனுக்காக 1986–87இல் ஒதுக்கப்பட்ட ரூ. 76 கோடி, 1987–88இல் ரூ. 92 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது போலவே, பாசனத்திற்கும் 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 129 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 142 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிருஷ்ணா நதி நீர் வழங்குத் திட்டம்

**18.** கிருஷ்ணா நதி நீர் வழங்குத் திட்டம் நிறைவேறி வருவது குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவலை தெரிவித்திருந்தனர். ஆளுநர் அவர்களின் பேருரைக்கு பதிலளிக்கின்றபோது இத் திட்டம் பற்றிய நம்முடைய நிலைமையை நான் ஏற்கெனவே உங்களிடத்தில் விளக்கிக் கூறியுள்ளேன். முக்கியமான இத் திட்டத்திற்கு மத்திய அரசு விரைவில் இசைவளிக்கும் என்று நம்புகிறோம். தமிழ்நாட்டிற்கு நீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையெனத் தெரியவருகிற முக்கியமான பணிகள் சிலவற்றைக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நிறைவேற்றும்படி ஆந்திர மாநில அரசையும் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். இவ்வாறு, இன்றியமையாத இனங்களை மட்டும் கொண்ட சுருக்கப்பட்ட திட்டத்திற்குக்கூட 1985–86ஆம் ஆண்டு மதிப்பீடுகளின்படி சுமார் ரூ. 600 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அதாவது, மூன்றாண்டுக் கால அளவில் இப் பணிகளை முடிக்க ஆண்டுதோறும் சுமார் ரூ. 200 கோடி முதலீடு செய்ய வேண்டிவரும். இந்த அளவிற்கு முதலீடு செய்யும் பொறுப்பை இரு மாநில அரசுகளும் ஏற்கவேண்டியுள்ளது. இக்கால அளவில் இத் திட்டத்தின்கீழ் நாம் கொடுக்க வேண்டிய பங்குத் தொகை முழுவதையும் கொடுக்க நாம் ஏற்கெனவே ஒப்புதலைத் தெரிவித்துள்ளோம். ஒவ்வொரு பணிக்கும் ஆகக்கூடிய செலவை பங்கிட்டுக் கொள்வது குறித்த வீதாச்சார அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் ஆந்திர மாநில அரசு எவ்வளவு தொகை ஒதுக்குகிறதோ அந்த அடிப்படையில் நம்முடைய பங்குக்குரிய தொகையைக் கொடுப்பதற்கு நம்முடைய ஒப்புதலை ஆந்திர மாநில அரசிடம் தெரிவித்து உள்ளோம்.

### தொலைக்காட்சி பெட்டியும் தகவல் தொடர்பு நிலையமும்

**19.** கிராமப் பகுதிகளில் தகவல் தொடர்பு வசதிகளைப் பெருக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, தொலைக் காட்சியின் மூலம் வெகு தொலைவிலுள்ள மக்களும் தகவல் அறிந்து கொள்ளும் நிலைமை உருவாகியிருக்கும் சூழ்நிலையில், மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்கு தகவல் தொடர்பு வசதிகள் முக்கியத் தேவையாகும். 1984ஆம் ஆண்டு சுதந்திரத் தினத்தன்று, முதலமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து, ஒவ்வோர் ஊராட்சிக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. ஊராட்சிகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவுவதென அண்மையில் முடிவு செய்துள்ளோம். தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின்கீழ் ரூ. 87 இலட்சம் செலவில் மையத் தகவல் தொடர்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. சத்துணவு, வேளாண்மை, சுகாதாரம் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறவும், முதியோர் கல்விக்காகவும் வீடியோ கேசட்டுகளைத் தயாரித்து வழங்க இந்த நிலையம் முன்னோடி நிலையமாக இருக்கும். ஒவ்வோர் ஊராட்சிக்கும் வீடியோ கேசட் பிளேயர் வழங்கும் திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்து வருவதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இந்த வீடியோ கேசட் பிளேயரைக் கொண்டு, தொலைக்காட்சிப் பெட்டிகளில் இந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப முடியும்.

### வறட்சி நிவாரணம்

**20.** பருவ மழைகள் பெருமளவுக்குப் பொய்த்துவிட்டதனால், அநேகமாக மாநிலத்தின் பெரும் பகுதியில் வறட்சி நிலவுகிறது. இந்த நிலையைச் சமாளிக்க இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளைப்பற்றி, ஆளுநர் அவர்கள் தன்னுடைய பேருரையில் குறிப்பிட்டிருந்தார்கள். ரூ. 347 கோடிக்கு நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளோம். 8,625 துளைக் கிணறுகள் தோண்ட ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை மாதங்களில் 1,233 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 28 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது தவிர, வேலைவாய்ப்பை உருவாக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ. 5 கோடிக்கும், திறந்த வெளிக் கிணறுகள் வெட்ட ரூ. 1 கோடிக்கும், தண்ணீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளில் லாரிகள் மூலம் நீர் வழங்க ரூ. 15 இலட்சத்திற்கும் அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது. அரசுப் பணியாளர் அனைவரும் முழுமூச்சுடன் இப் பணியில் ஈடுபட்டு வறட்சி நிலையைச் சமாளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் சாவியாகிவிட்ட பகுதிகளில் உள்ள உழவர்களுக்கு நிலவரியைத் தள்ளுபடி செய்ய ஏற்கெனவே உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

### அரசுப் பணியாளர்களுக்கான நலன்

**21.** அரசுப் பணியாளர்களுக்கு இவ்வரசு பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் பேரில், ஏற்கெனவே உள்ள தேர்வு நிலைப் பதவிகளுடன், பல சிறப்பு நிலைப் பதவிகளையும் பல வகையினருக்கு அரசு அண்மையில் ஏற்படுத்தியுள்ளது. தேர்வு நிலைப் பதவியில் 10 ஆண்டு காலம் பணியாற்றியிருப்பவர்களுக்கு இந்த சிறப்பு நிலைப் பதவிகள் வழக்கமாக அளிக்கப்படும். பத்து ஆண்டு காலப் பணியை முடித்தவர்களுக்கு இந்த தேர்வு நிலை அளிக்கப்படுகிறது. பல முறையீடுகள் வரப்பெற்றதைக் கருத்தில் கொண்டு, தேர்வு நிலைப் பதவியில் பத்து ஆண்டு காலப் பணியை முடிக்காமலிருந்தால் கூட, ஒரு பதவியில் குறைந்தது இருபது ஆண்டு காலப் பணியை முடித்து தகுதி பெற்றிருப்பவர்களுக்கு மேலே கூறிய சிறப்பு நிலையை அளிக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது. பதவி



உயர்வுக்குப் போதிய வாய்ப்பு இல்லாத துறைகளில் பெரும்பாலான அரசுப் பணியாளர்களுக்கு இச்சலுகை பயன் அளிக்கும்.

### பொதுவான நிதி நிலைமை

**22.** மாநிலத்தின் பொதுவான நிதி நிலைமையை நான் இப்பொழுது குறிப்பிட விழைகிறேன். மத்திய அரசு அறிமுகப்படுத்திய புதிய கணக்கு வகைப்பாடு முறையைப் பின்பற்றி 1987—88ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட வெளியீடுகளும், 1986—87ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளும் தயாரிக்கப் பட்டிருப்பதை, இங்கே குறிப்பிடுவது சாலப் பொருத்த மாகும். எனவே, வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள மதிப்பீடுகள், பழைய வகைப்பாட்டையும், அதற்கு நிகராக உள்ள புதிய வகைப்பாட்டையும் காட்டு கின்றன. அரசு மேற்கொண்டுள்ள முக்கியமான பணிகளையும், செயல்களையும், எடுத்துக் காட்டவே இப் புதிய வகைப்பாடு பின்பற்றப்படுகிறது. திட்டம் மற்றும் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு ஒரு தொடர்பு இருக்க இது பெரிதும் உதவுகிறது.

**23.** ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 3,150 கோடி நிதி ஒதுக்கீடு பெற்றிருந்தோம். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 5,750 கோடி அதிகரித்த ஒதுக்கீட்டினைத் தமிழகம் பெற்றிருப்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். திட்டத்தின் முதலாம் ஆண்டில், அதாவது 1985—86இல், திட்டப் பணிகளுக்கு ரூ. 960 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, ரூ. 1,012 கோடி வரை நாம் செலவிட்டிருந்தோம். 1986—87ஆம் ஆண்டில், ரூ. 1,153 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, ரூ. 1,200 கோடி அளவிற்கு நாம் செலவிடக்கூடும். 1987—88ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 1,250 கோடி யாகும். ஆனால், வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 1,341 கோடிக்குத் திட்டப் பணிகளை நாம் வகுத்துள்ளோம். மாநில அரசு மேற்கொண்டுள்ள பெருவாரியான நலப் பணிகளுக்குப் பாதகம் ஏற்படாமல், திட்டப் பணி களுக்குத் தொடர்ந்து கூடுதல் தொகையைச் செலவிட்டு வருவது உவகையும், பெருமையும் அளிப்பதாகும்.

**24.** 1986—87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இறுதிப் பற்றாக்குறை ரூ. 12.24 கோடியாக இருக்குமென்று எதிர்பார்த்தோம்; திருத்த மதிப்பீட்டில் இப் பற்றாக்குறை சற்றே உயர்ந்து ரூ. 26.11 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வறட்சி



காரணமாக ஆண்டு மத்தியில் பெருவாரியான பணி களுக்கு அனுமதி வழங்கியும், கூட்டுறவுக் கடன்கள் தொடர்பாக உழவர்கள் செலுத்த வேண்டிய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்தும், மத்திய அரசு வழங்கும் அகவிலைப் படிக்கு நிகராக நம்முடைய அரசுப் பணியாளர் களுக்கு அகவிலைப்படி வழங்கியும், அரசுப் பணி யாளர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசு கொடுத்தும், இப்படிப் பலவாறாக செலவிட்டிருந்த போதிலும், செம்மையான நிருவாகத்தையும், சீரான சிக்கன நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டதால் நிதிப் பற்றாக்குறை அதிக அளவில் அதிகரிக்காமல் தடுக்க நம்மால் முடிந்துள்ளது. உழவர்களுக்கு இலவச மின்சக்தி அளித்தல், கைத்தறி நெசவாளர்கள் கைத்தறித் துணிகளை விற்பதற்குத் தள்ளுபடி வழங்குதல், பொது விநியோக முறையில் அரிசி வழங்கு வதிலும் உழவர்களுக்குக் கொள்முதல் விலைக்குமேல் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்குவதிலும் உள்ள இழப்பு போன்றவற்றால், அரசுக்குள்ள செலவுப் பொறுப்புக்கள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. மின்சக்தி உற்பத்தியும் விநியோகமும் கணிசமாக அதிகரித்திருந்தபோதிலும் மின்சார வாரியத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 300 கோடி ஒதுக்கப் பட்டிருக்க, தேவையின் அடிப்படையில் ரூ. 330 கோடி கொடுக்க நேரிட்டது. இது போலவே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் தொடக்கச் சங்கங்களுக்கும் தள்ளுபடி வகையில் அளிக்கக்கூடிய உதவித் தொகைக்காக, வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 10 கோடி ஒதுக்கப் பட்டிருக்க, அவற்றிற்குக் கொடுக்க நேரிட்ட தள்ளுபடி தொகையோ ரூ. 37 கோடியாகும். உழவர்களுக்கு அவர்களுடைய கொள்முதல் விலைக்குமேல் உற்பத்தி ஊக்கத் தொகையாக ரூ. 20 கோடிக்குமேல் அரசு வழங்க வேண்டியிருந்தது. சாராயம், கள் ஆகிய வற்றின் விற்பனையிலிருந்து ஆயத் தீர்வையாகவும், விற்பனை வரியாகவும் கிடைத்து வந்த வருவாய் 1986-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் உடன் நின்றுவிட்டதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர்.

**25.** திட்டத்தில் சேராத பணிகளுக்கான செலவில் கண்டிப்பாகச் சிக்கனத்தைப் பின்பற்றுவதன் மூலமும், மாநிலத்தின் வருவாய் ஆதாரங்களில் காணப்படுகின்ற தெம்பின் காரணமாகவும், திட்டப் பணிகளுக்குக் கூடுதலாகச் செலவு செய்கின்ற அதே நேரத்தில், இக் கூடுதல் பொறுப்பினையும் நம்மால் ஏற்று நடத்த முடிகின்றது.

**26.** மதுவிலக்கைக் கொண்டு வந்ததன் விளைவாக 1987—88ஆம் ஆண்டு நம்முடைய வருவாய் பெரிதும் குறைந்துவிடும். இந்த வகையில் சுமார் ரூ. 250 கோடி இழப்பினை நாம் எதிர்பார்ப்பதாகக் கடந்த ஆண்டு என்னுடைய உரையில் குறிப்பிட்டு, மத்திய அரசு அறிவித்துள்ள கொள்கைக்கு ஏற்ப இந்த வருவாய் இழப்பில் 50 சதவீதத்தையாவது ஈடுசெய்யும்படி மத்திய அரசுக்கு விண்ணப்பித் திருந்தோம். மதுவிலக்கைக் கொண்டு வந்ததனால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பைக் கணக்கிடுவதற்கு மத்திய அரசு 1977—78ஆம் ஆண்டை அடிப்படை யாக எடுத்துக் கொள்கிறது. இது பற்றி, மது விலக்கைக் கொண்டு வருவதற்கு முந்தைய ஆண்டில் மாநிலத்திற்கு கிடைத்து வந்த வருவாயைக் கொண்டு தான், இந்த இழப்பைக் கணக்கிட வேண்டுமென, மைய அரசிடம் நாம் சுட்டிக்காட்டி உள்ளோம். இந்தக் கோரிக்கைக்கு அவ்வரசிடமிருந்து நமக்கு

இதுவரை எந்தவிதப் பதிலும் வரவில்லை ; அவ்வாறு தகவல் வராததால், மத்திய நிதியுதவி வகையில் இத்தலைப்பின்கீழ் எத்தொகையையும் வரவாக நான் காட்டவில்லை. இதனால், மாநிலத்திற்கு முக்கியமாக வருவாய் தேடித்தரும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பெருக்க முயற்சிகள் எடுத்துள்ளபோதிலும், அடுத்த ஆண்டு நம்முடைய வருவாயைக் காட்டிலும் செலவு அதிகமாகும். 1987–88ஆம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப் படும் வருவாய்க் கணக்கில் வரவு, செலவு முறையே ரூ. 2,779.15 கோடி, ரூ. 2,874.00 கோடி ஆகும். ஆகவே, 1987–88-ல் நிகர வருவாய் பற்றாக்குறை ரூ. 94.85 கோடியாக இருக்கும். இது போலவே, மூலதனக் கணக்கில், எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 657.98 கோடியாகும். கடன்கள், முன்பணங்கள் உட்பட மூலதனக் கணக்கில் எதிர்பார்க்கப்படும் நிகரச் செலவு ரூ. 780.95 கோடியாகும். இதனால், மூலதனக் கணக்கில் எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறை ரூ. 122.97 கோடியாகும். வருவாய்க் கணக்கிலும் மூலதனக் கணக்கிலும் எதிர்பார்க்கப்படும் பற்றாக் குறையைக் கணக்கில் கொண்டால், தொகு நிதியின்கீழ் மொத்தப் பற்றாக்குறை ரூ. 217.82 கோடியாக இருக்கும். ஆயினும், பொதுக் கணக்கின்கீழ் ரூ. 37.24 கோடி உபரியாக இருக்கும் என எதிர் பார்க்கையில், 1987–88இல் மொத்த நிகரப் பற்று வரவுகளில் ரூ. 180.58 கோடி பற்றாக்குறை இருக்கும். 1987–88ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ரூ. 26.11 கோடி பற்றாக்குறை இருக்கும் போது அந்த ஆண்டு இறுதியில் ரூ. 2८6.69 கோடி பற்றாக்குறை இருக்கும். இச் சூழ்நிலையில் நம்முடைய வளர்ச்சிப் பணிகளையும், நலப் பணிகளையும் தொடர்ந்து முழுமூச்சுடன் செயற்படுத்த, கூடுதலாக வருவாய் திரட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

**27.** 1986–87ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 1987–88ஆம் ஆண்டில் மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் மொத்த நிதி ஒதுக்கீடு 16.62 சதவீதம் அதிகரித்திருப்பதையும், அதே சமயம், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 1987–88ஆம் ஆண்டில் 7.54 சதவீதம் மட்டுமே அதிகரித்திருப்பதையும் மத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நாம் காணலாம். திட்டத்திற்கு முன்கூட்டியே அளிக்கப்படும் சிறப்பு உதவியாக ரூ. 86 கோடியை நமக்கு அளிக்கும்படி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியத் திட்டக் குழுவிடமும் பிரதமரிடமும் வலியுறுத்திக் கேட்டிருந்தார்கள். திட்ட ஒதுக்கீட்டை நிறைவு செய்ய, நம்முடைய வருவாயில் இந்த அளவிற்குப் பற்றாக்குறை இருப்பதை, மையத் திட்டக் குழுவும் ஏற்றுக் கொண்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையினால் வருவாய் பெரிதும் பாதிக்கப் படுவதுடன், வறட்சி காரணமாகப் பெருந்தொகையைச் செலவிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதால் 1987–88இல் அரசுக்கு நிதிப் பற்றாக்குறை அதிக மாகின்ற காரணத்தினால்தான், இந்த சிறப்பு நிதி யுதவியை நாம் கேட்டுள்ளோம். இந்த இக்கட்டான தருணத்தில், மத்திய அரசு, நிதியுதவி அளிக்குமே யானால் அது, ஒரே ஆண்டில் பெருவாரியாக வருவாய் திரட்டும் முயற்சியில் நம்மை ஈடுபடுத்தாமல், நம்முடைய பற்றாக்குறையை ஈடுசெய்யப்



பேருதவியாக இருக்குமென்பதை, நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தோம். மத்திய அரசு, இந்த நியாயமான வேண்டுகோளைக் கனிவோடு பரிசீலித்து, நிதியுதவி அளிப்பார்களேயானால், அந்த அளவிற்கு நம்முடைய இறுதிப் பற்றாக்குறை, குறையும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**28.** ஒவ்வொரு ஆண்டும் இவ்வரசு புதிய வரிகளை விதிக்க நேர்ந்தபோது அவ்வாறான வரி விதிப்பு நடவடிக்கை எதனாலும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படாத வகையிலும், பொருளாதார வளர்ச்சியும் அதன் வேகமும் தடைபடாத வகையிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதே அடிப்படையில் தான் இவ்வாண்டும் புதிய நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சிகள் அணுகப்பட்டிருக்கின்றன. மாநில அரசு விதிக்கும் விற்பனை வரிகளில் பல்வேறு சலுகைகளை அளிக்கும்படி கேட்டு தொழிலதிபர் களிடமிருந்தும், வர்த்தகர்களிடமிருந்தும், ஏனைய நுகர்வோர் சங்கங்களிடமிருந்தும் கோரிக்கைகள் அரசுக்கு வந்திருந்தன. அவற்றைப் பரிசீலிக்கவும் நமது வணிக வரி அமைப்பை, அடுத்துள்ள மாநிலங்களிலும், தொழில் துறையில் முன்னேறி இருக்கும் மகாராட்டிரம், குஜராத் போன்ற மாநிலங் களிலும் இருக்கின்ற விற்பனை வரி வீதங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யவும் குழு ஒன்றை இந்த அரசு நியமித்திருந்தது. ஈடுசெய்ய முடியாத நிதிப் பற்றாக்குறை காரணமாக ஓரளவு புது வரிகளை விதிப்பது அவசியமும் அரசின் கடமையும் ஆகின்றது. எனினும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான இடர்பாடுகளைக் களையவும், அவ்வளர்ச்சியின் வேகத்தை துரிதப்படுத்தவும் எங்கெங்கு வரிச் சலுகைகளோ அல்லது வரிச் சீரமைப்புகளோ தேவை யெனக் காணப்பட்டதோ அவற்றைத் தற்போது இவ்வரசு அறிவிக்கக் கருதியுள்ளது. இதனை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஏற்று, பாராட்டுவதுடன் தொழிலதிபர்களும், வர்த்தகர்களும், பொதுமக்களும் பொறுப்புணர்ச்சியோடு வரவேற்பர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**29.** தொழில் துறையினரும், வர்த்தகர்களும், உழவர்களும், பொது மக்களும் பயனுறும் வகையிலும், மகிழும் முறையிலும் விற்பனை வரியில் அரசு அளிக்கக் கருதியுள்ள பல சலுகைகளையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**30.** நமது பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்தவும் இதர மாநிலங்களில் அளிக்கப்படும்

சலுகைகள் போன்று நம் மாநிலத்திலும் அளிப்பதற்காகவும், இம் மாநிலத்திலுள்ள தொழில் மற்றும் வாணிபத்தின் பிரதிநிதிகளாகவுள்ள பல அமைப்புகள் இவ்வரசிடம் கோரிக்கைகளை வைத்துள்ளன. இவர்களது வேண்டுகோளில் உள்ள முக்கியமான நியாயத்தையும் தமிழக அரசின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு, வரிகளில் சலுகை மற்றும் வரிகளை நெறிமுறைப்படுத்தும் வழிவகைகளை அரசு தீட்டி உள்ளது.

(1) மின் அணுப் பொருட்கள்

சென்ற ஆண்டு இவ்வரசு இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் அணுப் பொருட்களின் மீதான விற்பனை வரியை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைத்தது. மேலும் இவ்வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும். இது இம் மாநிலத்தில் வளர்ந்து வரும் இத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அமையும் என நான் நம்புகிறேன்.

(2) சென்னை ஏற்றுமதி மண்டலத்திலுள்ள தொழிற்சாலைகள் வாங்கும் மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் மீதான விற்பனை வரிச் சலுகைகள் :

சென்னை மீனம்பாக்கத்திற்கு அருகில் உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருட்களையும் ஏற்றுமதி செய்யும் 100 சதவீத ஏற்றுமதி தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக ஒரு ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மண்டலத்தில் ஏற்கெனவே 74 தொழிற்சாலைகளை நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கும் பொருட்டு இவை வாங்கும் மூலதன மற்றும் மூலப் பொருட்களின் மீதான விற்பனை வரியைத் தொழிற்சாலைகளுக்குத் திருப்பி அளிக்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இச் சலுகை முதன் முதலில் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.

(3) அரசு மற்றும் அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் வாங்கும் பொருட்களின் மீதான விற்பனை வரிச் சலுகை:

ஏற்கெனவே, மாநில அரசு, மத்திய அரசு துறைகள் மற்றும் இந்திய இரயில்வே துறை வாங்கும் முதல் அட்டவணையின் கீழ் உள்ள பெரும்பான்மையான பொருட்கள் மீது சலுகை விற்பனை வரியான 4 சதவீதம் வரி விதித்து அரசு செயல்படுத்தி வருகிறது. இச் சலுகை வரி வீதம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள, பிற மாநிலங்களின் அரசுத் துறைகளுக்கும், நெய்வேலி லிக்னைட் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்படும். இந்நிறுவனங்கள் தங்களது தேவைகளை இந்த சலுகையினால் உள்ளூரிலேயே வாங்க இயலும் என்று நம்புகிறேன்.

(4) மோட்டார் ஊர்திகள், இரண்டு சக்கர ஊர்திகள் :

தற்போது மோட்டார் ஊர்திகள், இரண்டு சக்கர ஊர்திகள் மீது முறையே 9 சதவீதம், 15 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்பட்டுவருகிறது. நம் மாநிலத்திலுள்ள வணிகம் பிற மாநிலங்களுக்குச் செல்வதனால் ஏற்படும் வரி வருவாய் இழப்பைத் தடுக்கும் பொருட்டு, மோட்டார் ஊர்திகளின் மீதான வரி 5 சதவீத விற்பனை வரியாகக் குறைக்கப்படும். மேலும் இம் மாநிலத்தில் தயாராகும் 50 க.செ. கொள்ளளவு உள்ள இன்ஜினைக் கொண்ட இரண்டு சக்கர ஊர்திகள், மோப்பட் ஆகியவற்றின் மீதான தற்போதுள்ள 15 சதவீத



வரி 4 சதவீதமாகவும் இதர இரு சக்கர ஊர்திகள் மீதான வரி 8 சதவீதமாகவும் குறைக்கப்படும்.

(5) ஒப்பந்த வேலைகள் :

இம் மாநிலத்தில் ஒப்பந்த வேலைகள் மீதான விற்பனை வரி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களின் மீதான குறைந்த அளவு வரி 5 சதவீதமாகவும், குறிப்பிடப்படாத இனங்களின்மீது 10 சதவீதமாகவும் இருந்து வருகிறது. தொழில் மற்றும் வணிகர்கள் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பிடப்படாத இனங்களின் மீதான வரி 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

(6) குறிப்பிட்ட தொழில் பொருட்கள் மீதான விற்பனை வரிச் சலுகைகள் :

கீழ்க்கண்ட பொருட்கள் மீதான விற்பனை வரி விகிதம் குறைக்கப்படும்:—

(அ) ஜெனரேட்டர் உறுப்புகள் :

12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக.

(ஆ) விசைக் கலப்பைகள் (Power Tillers) :

8 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக.

(இ) நாப்தால்ஸ் (ஒரு சாயப் பொருள்) Naphthols :

5 சதவீதத்தை 4 சதவீதமாக.

(ஈ) குறிப்பிட்ட பிளாஸ்டிக் மூலப் பொருட்கள் :

5 சதவீதத்தை 4 சதவீதமாக.

(உ) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை அடைக்கப் பயன்படும் பொருட்கள் :

ஏற்றுமதிக்கு முந்தைய கடைசி விற்பனை முனையிலுள்ள வரி மீது விலக்கு.

(ஊ) மோட்டார் ஊர்திகள், இழுவை ஊர்திகள் இணைப்பு மற்றும் உதிரி பாகங்கள் :

15 சதவீதத்தை 12 சதவீதமாக.

(எ) குறிப்பிடப்பட்ட சாயப் பொருட்கள் :

5 சதவீத பல முனை வரியிலிருந்து
5 சதவீத ஒரு முனை வரியாக

(தொடர்ச்சி 35 ஆம் பக்கம்)

திருமாலை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் வைணவர்கள் திருமாவின் மீது தீவிரப்பற்று கொண்டு பாடிய பாடல்களில் இடம்பெறும் திருத்தலங்கள் திவ்ய பிரதேசங்கள் எனப்படு கின்றன. இத்திருத்தலங்கள் மொத்தம் 108 ஆகும். அவற்றில் ஒன்றுதான் பூலோக வைகுண்டம் என்றழைக்கப்படும் திருவரங்க மாகும்.

காவிரியும் கொள்ளிடமும் இரு புறமும் கைகோத்த நிலையில் உள்ள இத்திருவரங்கம் மேலும் ஒரு சிறப்பைப் பெற்றுள்ளது. அதுதான் ஆசியாவிலேயே உயர்ந்த கோபுரம் கொண்ட ஆல யம் இங்குதான் உள்ளது என்ற சிறப்பாகும்.

திருவரங்கத்தின் தெற்கு வாயில் கோபுரம் விஜய நகர மன்னர் அச்சுத தேவராயர் காலத்தில் கட்டத் தொடங்கப் பட்டது. ஏதோ சில காரணங்க ளால் முற்றுப்பெறாமலிருந்த இக்கோபுரம், அப்போதிருந்து மொட்டைக் கோபுரம் என அழைக்கப்பட்டு வந்தது.

முதல் அட்டை சொல்லும் செய்தி:



# ஆசியாவிலேயே உயரமான திருவரங்கத் திருக்கோபுரம்- குடமுழுக்குத் திருவிழா!



காஞ்சி காமகோடி பீட ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியின்படி, 400 ஆண்டுக் காலமாக முற்றுப் பெறாமலி ருந்த இந்தமொட்டைக்கோபுரத் திற்குப் புத்துயிர் கிடைத்தது. தென் இந்தியாவின்பழம்பெருமை வாய்ந்த வைணவ மடங்களில் ஒன்றான ஸ்ரீ அகோபில மடத் தின் 44வது பீடாதிபதியான ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவா மிகள், தாமே கோபுரத்தைக் கட்டி முடிப்பதாக உறுதி பூண்டு கடந்த 20.5.1979 அன்று இத் திருப்பணியைத் துவக்கினார்கள்.

ஜீயர் சுவாமிகளின் அயராத உழைப்பால் 7 ஆண்டுகள் 9 மாதங்களின் முடிவில் கோபுரம் முழுவடிவம் பெற்றது. சுமார் ரூ.1 கோடியே 60 இலட்சம் செல

வில் 236 அடி உயரத்திற்குக் கட்டப்பட்ட இந்த இராஜ கோபுரத்தின் குடமுழுக்கு 25.3.87 அன்று திருவரங்கத்தில் நடைபெற்றது.

குடமுழுக்கினை யொட்டி 21.3.87 அன்று முதல் திருவரங்கம் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் யாகசாலை பூசைகள் நடைபெற்றன. ஸ்ரீமத் அஹோபிலமடம் ஜீயர் சுவாமிகள் முன்னிலையில் சுமார் 1000 வேத விற்பன்னர்கள். இந்தப் பூசையை நடத்தினர். யாகபூசையை யொட்டிக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து ஒரு தங்கக்குடம் மற்றும் 24 வெள்ளிக்குடங்களில் வேத விற்பன்னர்கள் புனித நீர் எடுத்து வந்தனர். தங்கக்குடம் யானை மீது ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

இராஜகோபுர குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் 25.3.87 அன்று காலையில் துவங்கின. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடமுழுக்கினைக் கண்டு தரிசிக்க திருவரங்கம் வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும், அவர்தம் துணைவியார் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களும், அவர்தம் துணைவியார் அவர்களும் இராஜகோபுரத்தின் முன்புறமுள்ள 16 கால் மண்டபத்தின் மேல்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த, விசேட மேடைக்கு காலை சுமார் 9.30 மணி அளவில் வந்து அமர்ந்தனர்.

மேடையில் ஜீயர் சுவாமிகளும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன், மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஏ. அருணாசலம் ஆகியோரும் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

இதற்கிடையே காலை 7.30 மணிக்கு யாகசாலை பூசைகள் முடிவுற்றதும், புனிதநீர் அடங்கிய தங்கக்குடமும், வெள்ளிக் குடங்களும் அருள்மிகு ரெங்கநாதர் மூலஸ்தானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூசைகள் நடைபெற்றன். பின்னர் வேத மந்திரங்கள் முழங்க, நாதஸ்வர இன்னிசை ஒலிக்க வேத விற்பன்னர்





## கோபுர வடிவமைப்பு

இராஜகோபுரத்தின் முதல் நிலை 164 அடி நீளத்திலும் 97 அடி அகலத்திலும் 20 அடி உயரத்திலும் கட்டப்பட்டுள்ளது. இங்கு 7750 சதுரஅடி பரப்பில் விசாலமான அறை உண்டு. இதன் மத்தியில், கருவறையில் ரெங்கநாதர் எந்த நிலையில் பள்ளி கொண்டிருப்பாரோ அதே வடிவிலான சிலை அமைக்கப்பட்டுள்ளது. எதிர்த் திசையில் கிழக்கு நோக்கி தாயார் அம்மன் சிலை அமைக்கப்பட்டுள்ளது. முதல் நிலையின் தென் புறத்தில் துவார பாலகர்கள், கருடாழ்வார் இடம் பெற்றுள்ளனர்.

அதையடுத்த 2-வது நிலை முதல் நிலையை விடச் சற்று அளவில் சிறியது. அதேபோல் உள்ளே அறை வசதி உள்ளது. முகப்பில் ரெங்கநாதர் சயனத்துடன் உற்சவர், உபயநாச்சியார் திருவுருவங்கள் உள்ளன. வடபுறத்தின் முகப்பில் கஜலெட்சுமி இடம் பெற்றுள்ளார்.

இதே போன்று ஒன்றையொன்று அளவு குறைந்ததாக 13 நிலைகளும் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன.

7வது நிலையில் 2500 சதுரஅடி பரப்பிலும் 13வது நிலையில் 1100 சதுரஅடி பரப்பிலும் அறைகள் உள்ளன. இவற்றில், தொல்பொருள் காட்சியகம், நூலகம் போன்றவை எதிர்காலத்தில் அமைக்கப்பட உள்ளன.

13வது நிலை, பொதுமக்கள் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியான அளவில் வடிவமைக்கப் பட்டுள்ளது. சுற்றிவர நாலாப்பக்கமும் குறுகிய பாதை உள்ளது. இங்கிருந்து திருவரங்கம், திருச்சி மற்றும் காவிரிக் கரையின் எழில் தோற்றத்தைக் காணலாம். இந்நிலைக்கு மேல் உள்ள 15 படிகளைக் கடந்தால் கலசங்கள் உள்ள இடத்தை அடையலாம்.

கீழிருந்து 13வது நிலையின் அடிப்பகுதி வரை 'லிப்ட்' வசதி செய்யப்பட்டுள்ளது. இதைத்தவிர மேலே ஏறுவதற்காகக் கோபுரத்தின் வலது இடது பக்கங்களில் படிகள் உள்ளன. மொத்தம் 439 படிகள் உள்ளன.

கள் இப்புனித நீர்க் குடங்களைத் தோளில் தாங்கிக் கொண்டு இராஜகோபுரத்துத் திருவீதி வழியே வலம் வந்து 13 நிலைகளின் படிகளிலே ஏறி அதன் உச்சியை அடைந்தனர்.

இராஜகோபுரத்தின் 13 கலசங்களின் முன்பாக 26 வேத விற்பன்னர்கள் நின்று கொண்டு அவற்றிற்குப் பட்டுத்துணியிலான பரிவட்டங்கள் கட்டி மாலைகள் அணிவித்தனர். சரியாகக் காலை 10.14 மணிக்கு மக்கள் காணவும், வணங்கவும் வசதியாகச் சங்கொலி முழங்கப்பட்டது.

மக்களின் மகிழ்ச்சி ஆரவார ஒலியும், மங்கள ஓசையும், மந்திர முழக்கமும் விண்ணைப் பிளக்க, குடங்களிலிருந்து புனித நீர் கலசங்களின் மீது தெளிக்கப்பட்டது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாது மணிக்கணக்கில் காத்திருந்த இலட்சக் கணக்கான மக்கள் பக்திப் பரவசத்தால் 'ரெங்கா, ரெங்கா' என்று குரல் எழுப்பிக் கரங் குவித்து வணங்கினர். பின்னர் ஒவ்வொரு கலசத்திற்கும் கற்பூரதீப ஆராதனை காட்டப்பட்டது.

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், முக்கியப் பிரமுகர்களும் இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு தரிசித்தனர்.

மன்னர் ஆட்சியில் முடிக்கப் பெறாதிருந்த அரிய செயல், மக்களாட்சியில் நிறைவு பெற்றதை எண்ணி மக்கள் மனம் மகிழ்ந்தனர்.

முன்னதாக விசேட மேடைக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி உற்சாக முழக்கங்கள் எழுப்பி வரவேற்றார்கள். மக்களின் வரவேற்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருகரம் கூப்பியும், கைகளை அசைத்தும் ஏற்றுக் கொண்டார். மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அவ்வப்போது தொலைநோக்கி மூலம் குடமுழுக்கு நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற வண்ணம் இருந்தனர்.

குடமுழுக்கு நிகழ்வுற்றதும் மேதகு குடியரசுத் துணைத்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள் பட்டாடைகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜீயர் சுவாமிகளுக்கு வெள்ளி மற்றும் நெட்டியில் செய்யப்பட்ட உருவச்சிலைகளை வழங்கி, பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

திட்டமிட்டபடி, குறிப்பிட்ட நாளில் குடமுழுக்கு நடைபெறப் பணித்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஜீயர் சுவாமிகள் நன்றி தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, தற்போது காவிரியை எதிர்நோக்கிக் கட்டப்பட்டுள்ள இராஜகோபுரத்தைப் போல தாயார் ரெங்கநாயகி அம்மன் சந்நிதி அருகே வடகாவிரி என்றழைக்கப்படும் கொள்ளிடத்தை எதிர்நோக்கி இருக்கும்படி இராஜகோபுரம் அமைக்க வேண்டி உள்ளது என்றும், இதற்கான முதல் நிலையை ரூ.15 இலட்சம் செலவில் தாமே அமைப்பதாகவும் ஜீயர் சுவாமிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதற்கான அனுமதியை ஜீயர் சுவாமிகள் அவர்களிடம் அளித்தார்கள் என்று தெரிவித்தார்.

## கட்டடக் கலையின் சிறப்பு

கட்டடக்கலைக்குப் புகழ் பெற்ற தமிழகத்தில் இன்னும் அக்கலை அழிந்துபடவில்லை, இன்றும் அக்கலையின் சிறப்பை உணர்த்தத் தெரிந்த கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதற்கோர் எடுத்துக் காட்டு, இந்த இராஜகோபுரத்தை வடிவமைத்துக் கட்டிய தலைமை ஸ்தபதி திரு எம். எஸ். சிவப்பிரகாசம் ஆவார்.

மேலும் கோபுரத்தின் சிறப்பை மக்கள் அறியும் வகையில் நிரந்தர லிப்ட் வசதி செய்து தரப்படும் என்றும் அமைச்சர்அவர்கள் தெரிவித்தார்.

குடமுழுக்கு விழாவையொட்டி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், கோபுரத் திருப்பணி தொடங்கி முடிவுற்று குடமுழுக்கு நடக்க இருப்பதை எனது ஆட்சிக்காலத்



தில் நிகழ்ந்த கலாச்சாரச் சாதனையாகக் கருதி மிகவும் பெருமிதம் அடைகிறேன். தவத்திரு அகோபிலமடம் ஜீயர் அவர்களுடைய தவ வாழ்வில் இந்த ஒரு அரும்பணி அவர்களுடைய அருளாட்சியின் மணிமகுடமாகத் திகழும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அவருக்கு என் மரியாதை கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறியிருந்தார்.

குடமுழுக்கினையொட்டி இந்திய அஞ்சல்துறை, சிறப்பு அஞ்சல் முத்திரையை வெளியிட்டது.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் குடும்பம் குடும்பமாக ஏறத்தாழ 10 இலட்சம் பேர் திரண்ட இந்த நிகழ்ச்சிக்குத் தமிழக அரசு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

காவிரி ஆறு, கொள்ளிடம் ஆறு மற்றும் உய்யக்கொண்டான் வாய்க்கால், திருவானைக்காவல் இராஜவாய்க்கால் ஆகியவற்றில் தண்ணீர் மிக அதிக அளவில் திறந்து விடப்பட்டது.

குடமுழுக்கு நாளன்று திருச்சி மாவட்டத்தின் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் உள்ளூர் விடுமுறை விடப்பட்டது.

## அகோபில மடம் ஜீயர் சுவாமிகள்

முழுக்க முழுக்க கோபுரத்தைக் கட்டப்பாடுபட்டவர் ஜீயர் சுவாமிகள். அகோபில மடத்தின் 44வது பட்டம் ஏற்றுத் துறவு பூண்டவர். வடார்க்காடு மாவட்டம் முக்கூரில் 1895ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் பிறந்த சுவாமிகள் ஆற்றிய அரும்பணிகள் பல. அகோபில மடம் கட்டினார். பம்பாய் செம்பூரில் ஒரு மடமும், வானமாமலையில் ஒரு மடமும், காஞ்சீபுரத்தில் நம்மாழ்வார் சந்நிதியும் இவர் கட்டியவை. ஈரோட்டில் இராமர் கோயில் ஒன்றும் கட்டியுள்ளார். தற்போது இராஜகோபுரத்தை முற்றுப் பெறச் செய்துள்ளார்.

இரவுபகல் எந்நேரமும் சிறப்புப் பேருந்து வசதி, சிறப்பு ரெயில் போக்குவரத்து, குடிநீர், கழிவறை, மருத்துவம், சுகாதாரம் மற்றும் தங்குமிட வசதிகள் பரந்த அளவில் செய்யப்பட்டிருந்தன. மக்களுக்குத் தட்டுப்பாடின்றிப் பால் கிடைக்க சிறப்புப் பால் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் பணியில் ஏறத்தாழ 6,000 காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மொத்தத்தில் எவ்விதச் சிரமமுமின்றி மக்கள் நிகழ்ச்சியினைக் காண அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டிருந்தன.

இருபதாம் நூற்றாண்டில் கோயில் கட்டுமானக் கலையின் உன்னதச் சின்னமான இந்த இராஜகோபுரம்; தமிழ்நாட்டில் பார்க்கப்பட வேண்டிய, தரிசிக்கப்படவேண்டிய திருத்தலங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்றால் அது மிகையல்ல!

நிகழ்ச்சித் தொகுப்பு,
**வி. இராவணன்**



# படமும் செய்தியும்



திருச்சி தேசியக் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் திருவுருவச் சிலையை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் திறந்து வைத்தார். (25.3.87)



உலக வனவள நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவையொட்டி, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் 23.3.87 அன்று ராஜ்பவன் வளாகத்தில் மரக்கன்று நட்டார்.

சென்னைக்கு 26-3-87ல் வருகை புரிந்த தாய்லாந்து இளவரசி மகா சக்ரி சிரிந்தார்ன் அவர்களை சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வரவேற்றனர்.





ஊனமுற்றோர் உலகநாள் விழா 22.3.87 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள், மாநில நிம்கர் விருதுகளையும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஊனமுற்றோர்க்குப் பயன்படும் கருவிகளையும் வழங்கினர்.



ஊனமுற்றோர் உலக நாளையொட்டி 21.3.87 அன்று சென்னை இராசரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் மாநாடு 24.3.87 அன்று சென்னை கிண்டி ராஜ்பவனில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும் இதில் கலந்து கொண்டனர்.





# தோல் கழிவுநீர் சுத்திகரிப்புத் தளம்

அண்ணா மாவட்டத்தின் தலைநகராம், திண்டுக்கல் நகரையும் சுற்றுப்புறத்தையும் கடுமையாகப் பாதித்துவரும் பிரச்சினையாகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம். மாதவன் நம்பியார், இ.ஆ.ப. அவர்களின் உத்தரவின் பேரில் பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் நகரிலுள்ள சுமார் 35 தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், வாய்க்கால்கள் மூலமாகப் பெரும்பாலும் செங்குளத்திற்குள் விடப்பட்டு வந்தது. இதனால் சுற்றுப்புறக் கிராமங்களான கொட்டப்பட்டி, பள்ளப்பட்டி போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதுடன் விவசாய நிலமும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

தோல் தொழில உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரையில் தற்காலிகமாக தொழிற்சாலையிலிருந்துவரும் கழிவு நீரை அவர்கள் நிலத்துக்குள்ளேயே பாய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டிருந்தது.

பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் உள்ளுக்குள்ளேயே பெரிய குழிகளை வெட்டி, கழிவு நீரை அதனுள் செலுத்தி, சூரிய வெப்பத்தினால் உலர்ந்து போகச் செய்துள்ளனர். சிறு தொழிற்சாலைகளில் இப்பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை கழிவு நீரால் நிரம்பி வந்த செங்குளத்துக்குள், காலத்தே எடுத்த நடவடிக்கையால், தற்போது கழிவு நீர் செலுத்தப்படாமல் வறண்டு காணப்படுகிறது. குழிகளில் கழிவுநீர் தேக்கப்படுவதால் முன்பிருந்ததை விடத் தற்போது பாதிப்பு வெகுவாகக் குறைந்திருக்கிறது.

தற்போது காணப்படும் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் கெட்டுப் போகாமல் தடுக்கும் பொருட்டும் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ.2 கோடி செலவில் பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்புத் தளம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையில் 15 சதவிகிதத்தினைத் தோல் தொழிற்சாலை உரிமையாளர்கள் செலுத்த வேண்டும். 45 சதவிகிதத்தினைத் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக்கழகம் தோல் தொழிற்சாலை உரிமையாளர்களுக்குக் கடனாகப்பெற்றுத்தரும். 20 சதவிகிதம் மத்திய அரசும், 20 சதவிகிதம் மாநில அரசும் மானியமாக அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமைக்கப்படவிருக்கும் இத்தளங்கள் மதுரை சாலை, வத்தலக்குண்டு சாலைகளிலுள்ள 35 தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுநீரைப் பொது இடத்தில் சுத்திகரிக்க முடிவு செய்யப்பட்டது. திருச்சி சாலையில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவு நீரை அப்பகுதி பொது இடத்தில் தளம் அமைத்துச் சுத்திகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோல் தொழிற்சாலை உரிமையாளர்கள் தமது பங்கான ரூ.30 இலட்சத்தில் முதல் தவணையாக ரூ.5 இலட்சம் ஏற்கெனவே செலுத்திவிட்டனர். மீதித் தொகையைஏப்ரல்மாதம்30-ஆம் தேதிக்குள் செலுத்திவிட ஒப்புக் கொண்டுள்ளனர். மேற்கண்ட திட்டப்படி அனைத்துப் பணிகளும் நடைபெற்றால் 1988-க்குள் இத்திட்டம் நிறைவேறி, நிரந்தரத் தீர்வு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

லாபநோக்கோடு மட்டுமின்றி, சமுதாய நன்மைக்காகவும், பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்ட சிலர் தங்களது தொழிற்சாலையில் சொந்தச் செலவில் சுத்திகரிப்புச் செய்து வருகின்றனர்.

**வி. ஜி. பிரசாத்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**அண்ணா மாவட்டம்,**
**திண்டுக்கல்.**

## அண்ணா மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

அண்ணா மாவட்டத்திலுள்ள வடமதுரை, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, குஜிலியம்பாறை, வேடசந்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது வறட்சிக்காக வடமதுரை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 35 கைப் பம்புகளும், 1 விசைப் பம்பும் போடப்பட்டுள்ளன. இந்த ஒன்றியத்தில் இதுவரை மொத்தம் 220 கைப் பம்புகளும், 60 விசைப் பம்புகளும் பொருத்தப்பட்டுள்ளன.

வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வறட்சியை நீக்கிட 33 கைப் பம்புகளும், 2 விசைப் பம்புகளும் போடப்பட்டுள்ளன. இதுவரை இந்த ஒன்றியத்தில் மொத்தம் 345 கைப் பம்புகளும், 66 விசைப்பம்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆழ் குழாய்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது.



# கருமாரியம்மன் ஆலய குடமுழுக்கு விழா

சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் உள்ளது அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில். நாள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் - குறிப்பாக ஞாயிற்றுக் கிழமையில் 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கருமாரியைத் தரிசனம் செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் அபிஷேகங்கள், அனுமதிச் சீட்டுகள் ஆகியவற்றுன் விற்பனை ரூ. 65 லட்சத்தை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் நகைகள், பணம், மற்றும் காணிக்கைப் பொருட்கள் ஆகியவற்றின்மூலம் ரூ. 1 கோடி வருமானம் வந்துள்ளது.

இந்த ஆலயத்தின் குடமுழுக்கு வருகிற ஜூலை (1987) மாதம் 13-ஆம் தேதியன்று நடைபெறவுள்ளது. இந்த ஆலயத்தின் முதல் குடமுழுக்கு விழா 1969-ஆம் ஆண்டிலும், இரண்டாவது குடமுழுக்கு விழா 1975-ஆம் ஆண்டிலும் நடைபெற்றிருக்கின்றன.

குடமுழுக்கை ஒட்டி, பல்வேறு திருப்பணிகளும் நடைபெற உள்ளன. நீராழி மண்டபம், வசந்த மண்டபம், 64 கால் மண்டபம், திருக்குளத்தின் ஒரு புறத்தில் விநாயகர் சந்நிதி, ஒருபுறத்தில் முருகன் சந்நிதி ஆகியவை உருவாக்குதல், யாகசாலைகள் அமைத்தல், பிராகாரங்களில் உள்ள சுற்றுச் சுவர்கள், இரும்புக் கதவுகள், வாகனங்கள் போன்றவற்றிற்கு வண்ணம் தீட்டுதல்- என ஏராளமான திருப்பணிகள் ரூ. 59 லட்சத்து 45 ஆயிரம் செலவில் நிறைவேற்றப்பட உள்ளன.

முன்பெல்லாம் பக்தர்கள் பேருந்தின் மூலம் வேலப்பன் சாவடியை அடைந்து பின்னர் அங்கிருந்து 1 கிலோ மீட்டர் நடந்துதான் இந்த ஆலயத்திற்கு வரவேண்டும். 1956-ல் தான் ஆலயத்திற்குப் பேருந்து விடப்பட்டது.

தற்போது வேலப்பன் சாவடியிலிருந்து திருக்கோயிலுக்குச் செல்லும் பாதையில் வளைவுகள் அதிகம் இருப்பதால்போக்குவரத்தின் போது விபத்துக்கள் ஏற்பட ஏதுவாகின்றன. அதனால் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து ஆலயத்திற்கு 1 கிலோ மீட்டர் தொலைவுள்ள நேர்பாதை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

பாதை வசதி செய்வதற்காக ஆலயம் 7 லட்ச ரூபாயை அளித்துள்ளது. தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறையிடம் இந்தப் பணி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஆலயத்தில் தங்கத்தேர் இருக்கிறது. பொதுமக்கள் அளித்த நன்கொடைத் தங்கத்தினால் உருவாக்கப்பட்டது இது.

பொது மக்களிடமிருந்தும், இறை அன்பர்களிடமிருந்தும் பெறப்படும் நன்கொடைத் தொகையிலிருந்துதான் குடமுழுக்கு விழாவை நடத்த வேண்டும் என்பது இந்த ஆலயத்தின் அறங்காவல் குழுவினரின் அசைக்க முடியாத கொள்கை- நம்பிக்கை!

## செயற்கைக்கோளின் பயன்கள்

செயற்கைக்கோளில் சக்தியும் நுட்பமும் வாய்ந்த காமிராக்களை வைத்து அனுப்பி, படம் பிடித்து அனுப்பச் செய்யலாம். இப்படங்களை வைத்துப்பல தகவல்களை அறிய முடியும்.

மேகக் கூட்டங்களின் போக்கை வைத்து வானிலைத் தகவல்களைப் பெறலாம். காற்று மண்டலத்தின் தன்மையை அறியலாம். பூமியைச் சுற்றி உள்ள காந்த மண்டலம் பற்றி அறியலாம். பயிர்கள் எந்த நிலையில் உள்ளன, பனிமூடிய மலைகளாக இருந்தால் பனி உருகும் அளவு, நிலத்திற்கு அடியில் உள்ள கனிவளங்கள் போன்றவற்றை அறியலாம். வனவளம், மலைவளம், புயல் உருவாதல், வெள்ளப் பகுதிகள், முதலான விவரங்கலள அறிய முடியும். தேசப்படங்களைத் தயாரிக்க இவை உதவும். தார் பாலைவனத்தின் பரப்பையும் அதன் அடியிலுள்ள பருவகால நீரோட்டம் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றைக் கண்டறிய முடியும். கடலின்அமைதியான நீர்ப்பரப்பு பற்றியும் அதனுள் வாழும் உயிரினங்கள் மற்றும் மீன்வளம் பற்றியும் அறிய முடியும். நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல்களுக்கு வழி அறிந்து செல்ல உதவ முடியும். நிலப்பரப்பை ஆராய்ந்தறிந்து, எண்ணெய் எரிவாயு, மற்றும் கனிம வளங்களைக் கண்டுபிடிக்கலாம்.

உலகின் பிறநாடுகள் என்ன செய்கின்றன என்று வேவு பார்க்கவும் செய்யலாம்.

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு விண்வெளியில் அமைந்த அஞ்சல் நிலையமாகவும் செயற்கைக்கோள் செயல்படுகிறது.

**பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நிறுவனம்!**

**90 மணி நேரத்தில் அயல் நாட்டினர் அன்னைத் தமிழை அறிந்து கொள்ள வாய்ப்பு!**

**உலகத் தமிழர் பற்றி அறிய ஓர் ஒப்பற்ற நூல் வெளியீட்டுத் திட்டம்!**

**அறிவுச் சுரங்கமாய் விளங்கிடும் அரும்பெரும் நூலகம்!**

# உலகெலாம் தமிழ் பரப்பும் ஒப்பற்ற நிறுவனம்

பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நிறுவனம் என்ற பெருமையோடு தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகையில் ஒப்பற்ற பணியாற்றி வருகின்றது, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

சென்னைத் தரமணியில் அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள இந்நிறுவனம், 1972-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

இந்நிறுவனம் உருவாகக் காரணமாக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1968-ஆம் ஆண்டில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'உயர் நிலைத் தமிழாய்வை மேற்கொள்ள பிரெஞ்சு அகாதெமி போன்ற ஒரு தனி நிறுவனம் தேவை' எனக் கருதினார். அதன் அடிப்படையில் எழுந்ததுதான் இந்த நிறுவனம். பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்தில் இந்த எண்ணம் உதித்தபோது, தமிழகத்தில் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறைகள் இருந்தன. இருப்பினும் பல்கலைக் கழகத்துறைகள் செய்யும் பணிகளின் தன்மை வேறு, இந்நிறுவனம் செய்ய வேண்டிய பணிகளின் தன்மை வேறு என்பதைத் தெளிவாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்திருந்த காரணத்தினால் இந்த நிறுவனத்தைத் தொடங்கினார்.

இந்நிறுவனத்தில் நிறுவப் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வரும் துறைகள்:

1. இலக்கியத்துறை, 2. கலைப் பண்பாட்டுத்துறை, 3. மொழியியல் துறை, 4. பிறமொழி, மொழிபெயர்ப்புத்துறை 5. சமூகவியல் துறை.

இவை 1.11.86 முதல் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப்படுவதற்கு முன்பு வரை, மேலை நாட்டினர் தமிழ்நாட்டில் தமிழ் கற்கப் போதிய வசதி இல்லாமல் இருந்தது. முதன் முதலாக, மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியுடன் மேலை நாட்டினருக்குத் தமிழ் கற்பிக்கும் முயற்சி இந்நிறுவனத்திலேதான் தொடங்கப்பெற்றது.

இதுவரை மேலைநாட்டிலிருந்து தமிழகம் வந்த 125 பேர் இந்நிறுவனத்தில் தமிழ் கற்றுச் சென்றுள்ளனர். அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான், மொரிசியஸ் முதலான நாடுகளிலிருந்து வந்தவர்கள் அவர்கள். தமிழ் கற்பிக்கும் பாட வேளை 90 மணி நேரமாகும். இந்த அளவில் அயல் நாட்டினர் ஓரளவு தமிழைப் படிக்கவும், பேசவும் இயலும். இதற்கான பாடங்கள் பதிவு நாடா முறையில் உள்ளன. முதலில் பேச்சுத் தமிழில் தொடங்கி, பிறகு இலக்கியத் தமிழில் பாடம் போதிக்கப் படுகிறது.

தற்போது, மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும், அமெரிக்காவைச் சேர்ந்த ஆடவர் ஒருவரும் இங்கே தமிழ் பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரல்லாத ஒருவர், இந்நிறுவனத்துக்குவந்து, தமிழ்பயில இயலாதவராக உள்ளார். அவர் தமிழ் பயில முடியுமா? முடியும்!

இவர்கள் தமிழ் கற்றுக் கொள்ளும் வகையில், இசைத்தட்டுகளின் உதவியுடன் 'திட்டமிட்ட சுய பயிற்சிக்கான பணிகள்' இப்போது நிறுவனத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன:

சிறந்த மொழிப் பயிற்சிகளை உருவாக்கும் திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் பல மாணவர்களுக்கு மொழிபெயர்ப்புப் பயிற்சியினை இந்நிறுவனம் அளித்து வருகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சிறந்த முறையில் தமிழ்ப் பணியாற்றிட சென்னை மாநகரமே தக்க இடமாக அமைகிறது. பழம் பெரும் நூலகங்கள், அருங் காட்சியகம், ஆவணக்காப்பகம் போன்றவை சென்னையிலேயே இருப்பதால், உலக அறிஞர்கள் தமிழ் ஆய்வை மேற்கொள்ள இது தக்க இடமாக விளங்குகிறது. பல்வேறு மொழிகளைப் பேசும் பல பண்பாட்டு மக்களும் வசிக்கும் பொது நோக்குப் பெருநகரமாகச் சென்னை விளங்குவதால், ஒப்பியல் ஆய்வுகளுக்கு இந்நகரம் வசதியாக அமைந்திருக்கிறது.




உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

இந்நிறுவனம், உயர் ஆராய்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் வகையில், டாக்டர் பட்டம் பெறும் ஆய்வாளர்கட்கு மிகச் சிறந்த மையமாக விளங்கி வருகின்றது. இதுவரை முப்பதின்மர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். தற்போது ஐம்பத்து நான்கு பேர் டாக்டர் பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை மறைமலை அடிகள் நூலகத்தையடுத்து, மிகச் சிறந்த அரிய நூல்களின் அறிவுச் சுரங்கமாக இந்நிறுவன நூலகம் விளங்குகின்றது. இந்நூலகத்தில் 26,791 நூல்களும், 500 சுவடிகளும் உள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலையாய பணியாக விளங்குவது, மிகச் சிறந்த நூல்களை வெளியிடுவதாகும். இதுவரை இந்நிறுவனம் 128 நூல்களை வெளியிட்டுள்ளது. மேலும் 30 நூல்களை வெளியிட முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

இலக்கியங்களை அணுகுமுறை அடிப்படையில் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்கள் வெள்ளிக்கிழமை தோறும் நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது. இவ்வாண்டு 'கலைச் செல்வங்கள்' என்னும் வரிசையில் ஒவ்வொரு மாத இரண்டாவது திங்கட்கிழமையில் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டடத்தில் கூட்டம் நடைபெறுகின்றது.

நிறுவன ஆய்வாளர்களால், 'ஆய்வு மன்றம்' ஒன்றும் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆய்வு மன்றத்திலும் மூன்று அல்லது நான்கு கட்டுரைகள் வாசிக்கப் பட்டுக் கலந்துரையாடல் நடைபெறுகிறது. இந்தக் கருத்தரங்கம் ஒவ்வொரு மாத முதல் வெள்ளிக்கிழமையன்று நடைபெறுகிறது.

இந்நிறுவனத்தில் 15 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர் பற்றியும், அவர்களது நிலை பற்றியும் நூலாக வெளியிட நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதற்கான கட்டுரைகள் கோரப் பட்டுள்ளன. இது தொடர்பாக 55 நாடுகளை இந்நிறுவனம் அணுகியுள்ளது. 'பாரெல்லாம் பரந்த தமிழர்' என்னும் தலைப்பில் இந் நூல் வெளிவரும். அந்தமான், மொரிசியஸ், இலங்கை, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஹவாய் ஆகிய நாடுகளிலிருந்து கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன. இதேபோல இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களைப் பற்றிய தகவல்களும் தொகுக்கப்படுகின்றன.

அயல் நாட்டினர் அன்னைத் தமிழைப் பயில்கின்றனர்



மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்பில் தற்போது ஐந்து பேர் பயில்கிறார்கள். நிறுவனத்தில், ரஷ்ய மொழி வகுப்பு ஒன்றும் நடக்கின்றது. அதில் நிறுவன அலுவலர்கள் பங்கு பெற்று வருகிறார்கள்.

நிறுவனத்தின் சார்பில் 'தமிழியல்' என்னும் இதழொன்று 1972 லிருந்து வெளிவருகின்றது. ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் இவ்விதழில், இலக்கியம், மொழியியல், நாட்டுப் புறப்பாடல்கள், சுவடி, கல்வெட்டு முதலான



நிறுவன வெளியீடுகள்

துறைகள் பற்றிய அரிய கட்டுரைகள் வெளிவருகின்றன.

புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?

இது குறித்து, நிறுவன இயக்குநர் டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்களைக் கேட்ட போது அவர் கூறினார்:

''பல்கலைக் கழக மானியக்குழுவின் ஒப்புதல் கிடைத்தால், அதன் துணைகொண்டு, தேசிய அளவிலும், உலக அளவிலும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டம் உள்ளது.

''நம்முடைய பண்பாடு பற்றி உலக மக்களுக்கு அறிவிக்கவும் நிறுவனம் விரும்புகிறது. உலகெங்கும் உள்ள தமிழ் இடப்பெயர்களைத் தெரிந்து கொள்வதற்கு 40 அறிஞர்களுக்கு இது பற்றிய குறிப்புகள் கேட்டு எழுதி அனுப்பியுள்ளோம். இது பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் இப்பணி முடிவடையும்.

''நமது தெருக் கூத்திற்கும், ஜப்பானிய 'நோ' நாடகத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இது பற்றித் தகவல்கள் திரட்ட ஜப்பானிலுள்ள சில அறிஞர்களோடு கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

''அயல் நாட்டு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எளிய முறையில் தமிழ் இலக்கியப் பாடத்திட்டமொன்றைத் தயார் செய்துள்ளோம். வேற்று மொழியினருக்கு அடிப்படை நிலைத் தமிழைச் சொல்லிக் கொடுக்க ஒரு மாத காலப் பயிற்சி வகுப்பு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்''.

இவ்வாறு, அன்னைத் தமிழின் அருமை பெருமைகளையெல்லாம் அகில உலகமும் அறிந்து கொள்ளும் வகையில், நாளும் நற்பணியாற்றி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஒளி விளக்காய்த் திகழ்ந்து வருகிறது.

—பி.வி. கிரி



அறிவு வளர, ஆர்வம் பிறக்க, மகிழ்ச்சி தோன்ற மக்களை நன்னெறியிலே புகவைக்க, நற்பண்புகள் உள்ளத்திலே குடிபுக-இப்படிப்பட்ட நற்காரியங்களுக்கு, முத்தமிழ் அதிலும் முக்கியமாக நாடகம், பயன்படல் வேண்டும் என்பது அடிப்படை உண்மை.

இயல், இசை, நாடகம், மக்கட்கு அறிவு வளர ஆர்வமூட்ட அக மகிழ்ச்சி பிறக்க, நன்னெறியைக் காட்டப் பயன்பட வேண்டும்.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

சென்னை-600005

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப் பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 செண்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 செண்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக $+91\%\ CaCO_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | $+99.8\%\ SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | $+12\%\ K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | : | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | $+99.7\%\ SiO_2$ |
| 7. | வெப்பந்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு $32.1\%\ Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCO_3$ + 94% |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD HOUSE, 31, காமராஜர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண்: 848932
டெலக்ஸ்-41 6081 TNML IN

தொழிற்சாலை:
டாமின் கிரானைட்ஸ்,
மணலி — பொன்னேரி ரோடு,
மணலி,
சென்னை-600 068

தந்தி - MINESALITE

DIPR/2623I/363/86-27/SAS




தமிழ்நாடு மீன்துறையில் மீனவச் சமுதாயத்தின் ஒருமித்த முன்னேற்றத்திற்காக மீனவ மகளிர் விரிவாக்கப் பணி என்ற சிறப்புத் திட்டம் 1981 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மீனவ மகளிரது சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தையும், கல்வித் தரத்தையும் உயர்த்தவும், பொது அறிவை வளர்த்து அவர்கள் மேம்பாடடையவும் பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

இதில் கடலோரக் குப்பங்களில் வாழும் மீனவ மகளிரை ஒருமுகப் படுத்தி மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதன் வழியே அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் யாவும் அவர்களை வந்தடைய வழிசெய்யப்படுகிறது.



மீனவ மகளிர் பொதுவாகக் கரைக்குக் கொணரப்பட்ட மீன்களை ஏலமிடுவது, விற்பது முதலிய பணிகளைச் செய்வதுடன், மீதமான மீன்களைப் பதப்படுத்துதல், வலை பொத்துதல், புது வலை பின்னுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வரினும் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வகையின்றி, வாழ்கிறார்கள்.

இவர்களுக்குத் துணை வருமானம் தரத்தக்க வகையில் மீன்களை உலர்த்தி நவீனமுறையில் பதப்படுத்தல் போன்ற பணிகளில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி முதலில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பழவேற்காட்டுப் பகுதியில் ஏரியின் அக்கரைக்குப்பங்களிலுள்ள மீனவ ம்களிருக்கு "மீன்களைப் பதப்படுத்துவதில் நவீனமுறைகள்" என்ற பொருளில் 5 நாள்பயிற்சியளிக்கப்பட்டது. இங்குள்ள 10 குப்பங்களில் இருந்து குப்பத்துக்கு இருவர் வீதம் இந்தப் பயிற்சிக்கு 20 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இப்பயிற்சியின்போது மீன் மற்றும் இறால் ஊறுகாய் தயாரிக்கும் முறைகளைப் பயிற்றுவித்ததுடன், அவர்களே இதனைச் செய்யவும் வாய்ப்பளிக்கப்பட்டது. இதைத்தவிர மீன்களை உலர்த்துதலிலும், உப்பிட்டுப் பதப்படுத்துதலிலும், பனிக்கட்டியில் வைத்துப் பாதுகாத்தலிலும் மீன் கேக்குகள், மீன்மாவு முதலியன தயாரிப்பதிலும் உள்ள நவீன முறைகள் பயிற்சியாளர்களுக்குச் சொல்லித்தரப்பட்டன.

இப்பயிற்சியில்கலந்துகொண்ட மீனவ மகளிர், ஊறுகாய் தயாரிக்கும் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு, இறால் மீன் ஊறுகாய்கள் தயாரித்து விற்பனை செய்ய முனைந்துள்ளனர். இத்தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பும் உள்ளது. இன்னும் பலர் இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமாக உள்ளதால் மேலும் 20 பெண்களுக்குப் பயிற்சியளிக்கவும் இவர்களின் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை நல்ல முறையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் விற்பனை செய்து லாபம் ஈட்டித்தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக மீனவ மகளிர் விரிவாக்கப்பணியின் மூலம் வங்கியிலிருந்து இம் மீனவமகளிருக்கு மூலதனக்கடன் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீனவமகளிர் இதன் மூலம் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவிடவும் அதனால் தங்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றமடையவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்ஊறுகாய்ப் பொருட்கள் அயலிடச் சந்தையில்போட்டியிட்டு நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் உறுதுணையாகும் நாள் அதிக தூரத்தில் இல்லை எனலாம்.

லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
ஆரோக்கியம் இருக்குமிடம்!




லைப்பாய்
அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM



### 40 ஆயிரம் பேர் பங்கு பெற்ற

# இராஜசேகரன் நினைவு ஓட்டம்

தமிழ்நாட்டில் நலிவுற்ற விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்கவும், விளையாட்டு வீரர்கள் ஆடுகளத்தில் விளையாடும் போது அடி பட்டு மேற்கொண்டு வழியில்லாமல் இருப்பவர்களுக்கு நிதி உதவி வழங்கிடவும், தமிழ்நாட்டில் இராஜசேகரன் நினைவு ஓட்டம் மூலம் நிதி சேர்க்கப்படுகிறது.

கனடா நாட்டைச் சார்ந்த டெரிபாக்ஸ் என்பவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட போது அவர், நாட்டின் நலன் கருதியும், நலிவுற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நிதி திரட்டவும் ஓடினார். அதேபோல் நம் நாட்டிலுள்ள நலிவுற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம் வழங்க, நிதி திரட்ட புதுடில்லி, தேசிய விளையாட்டுக் குழாம், தமிழ்நாடு இளைஞர் பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகியவை இணைந்து இராஜசேகரன் நினைவு ஓட்டத்தைத் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்துகின்றன.

மறைந்த திரு இராஜசேகரன் தஞ்சாவூர் மாவட்டம் வடுவூர் கிராமத்தைச் சேர்ந்தவர், இவர் தேசிய மட்டத்தில் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் பங்கேற்று முதலிடம் வகித்தவர். உலக ரயில்வே போட்டிகளில் நம் நாட்டின் சார்பாக 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொண்டு பதக்கம் பெற்றவர். இவர் இரயில்வேத் துறையில் நல அலுவலராகப் பணி புரிந்து தடகளப் பயிற்றுநராக என்.ஐ.எஸ். பாடியாலாவில் டிம்பளமோ பட்டம் பெற்றவர். ரயில்வே குழுவுக்குப் பயிற்றுநராகப் பணிபுரிந்துவிட்டு சென்னை திரும்பிய உடன் மாரடைப்பால் அகால மரணம் அடைந்தார். அவர் நினைவாக, தமிழ்நாட்டில் நடத்தும் இந்த ஓட்டம் இராஜசேகரன் நினைவு ஓட்டப் பந்தயம் என்றழைக்கப்படுகிறது.

இந்த ஓட்டம் முதன் முதலில் சென்னையிலும், பின்பு மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டது. இறுதியாக 6 வது இடமாக வேலூர் தேர்ந்தெடுக்கப்பட்டு நினைவு ஓட்டம் நடைபெற்றது. இந்த ஓட்டம் சரித்திரப் புகழ் பெற்ற வேலூர் கோட்டையில் துவங்கி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக 5.5 கி.மீ. தூரம் ஓடி நேராக அரசு விளையாட்டரங்கை அடைந்தது. இந்த ஓட்டத்தில் பங்கேற்றவர்கள் ஒரு ரூபாய் பங்கேற்புக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இதில் 7 வயது முதல் 70 வயதுவரை உள்ளவர்கள் ஓடலாம்.

இந்த ஓட்டம் விரைவாகவோ, மெதுவாகவோ, நடந்தோ முடிக்கலாம்.

22.2.'87 அன்று நடைபெற்ற இந்த நினைவு ஓட்டம் அதிகாலை 7 மணிக்கு வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எஸ். மாலதி இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் வெள்ளைக் கொடியினை அசைக்கத் தொடங்கி வைக்கப்பட்டது.

ஏஷியன், அகில இந்திய மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற டோக்கியோ ரங்கநாதன், தமிழரசன், அகிலன் உட்பட வட ஆர்க்காடு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் முன்னே ஓட, பள்ளி, கல்லூரி, காவலர் பயிற்சிப் பள்ளியைச் சார்ந்தவர்கள் மாணவர்-மாணவியர் ஆகியோர் உற்சாகத்துடன் ஓடிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.மாலதி இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.ஏ. இராமையா, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகப் பொது மேலாளர் திருமதி பியுலா மோசஸ், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு இரா. பா.கார்மேகம் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் முதலானோர் விரைவு நடைமூலம் நினைவு ஓட்டத்தில் பங்கேற்றனர்.

40 ஆயிரம் பேர்கள் ஓடிய இந்நின்னவு ஓட்டத்தின் மூலம் மாவட்டம் முழுவதும் ரூ.60 ஆயிரத்திற்கு டிக்கட் விற்பனையாகியுள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று நம் நாட்டின் புகழை ஓங்கச்செய்து, பின்பு, நலிவுற்றோ, காயமுற்றோ வாழ்வில் நொந்து தவிக்கும் வீரர்களுக்கு இத்தொகையின் மூலம் உதவிகள் வழங்கப்படும்.

தொகுப்பு:

**மா. கலைமணி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர், வ. ஆ. மாவட்டம்.**



# செங்கை மாவட்டத்தில் வளர்ச்சித்திட்டங்கள்



செங்கற்பட்டு மாவட்டம் பல் துறை வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடக்க விழாவும், செங்கற் பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திட்டப் பணிகள் தொடக்க விழாவும் கடந்த மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாள் பல்லவபுரம் நக ராட்சியைச் சார்ந்த குரோம் பேட்டையில் நடைபெற்றன.

எல்லாருக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குதலைக் குறிக்கோளாகக் கொண்ட நமது அரசு 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஆலந்தூர்-பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியுள் ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள் 9, முதல மைச்சர் சத்துணவு மையக் கட்டடங்கள் 65, கிடங்குகள் 5, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 3, தொலைக்காட்சிப் பெட்டி அறைகள் 3, பெண் ஆசிரியர் குடியிருப்பு 1, ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகள் 45, ஆதிதிராவிடர் அரசினர் தொடக்கப்பள்ளி 1, நடுநிலைப் பள்ளி 1, நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் 6, பேரூராட்சி குடிநீர்த் திட்டங்கள் 4, விதவை மகள் திருமண உதவி, தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல் போன்ற பணிகள் - ரூபாய் ஒரு



கோடியே ஒரு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரம் மதிப்பீட்டில் தொடங்கி வைக்கப்பட்டன.

இப்பணிகள் அனைத்தையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பி.பாண்டியன் இ.ஆ.ப. வரவேற்றார். விழாவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் - வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி,மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் ஜெகதீசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஏ. அருணாசலம்,மாண்புமிகு வேளாண்மை உயர்மட்டக்குழுத் தலைவர் திரு முனுஆதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ். டி. உக்கம் சந்த், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. வி. ஆர். மணிமாறன், கதர் கிராமக் கைத்தொழில் வாரியத் துணைத் தலைவர் கவிஞர் நா. காமராசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு மோகனரங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ். ஜெகத்ரட்சகன், சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு எல்ல. ராஜமாணிக்கம், திரு ஆர். எஸ். முனிரத்தினம், திரு க. நரசிம்ம பல்லவன், திரு அனந்த கிருஷ்ணன், திரு குறளரசு ஜெயபாரதி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

குடிநீர்த் திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், நலிந்தோர்க்கு நல்வாழ்வு அளிக்கும் வகையில் செங்கற்பட்டு விவசாயிகளுக்கும், சுயமாகத் தொழில் தொடங்க விருக்கும் ஏழைகளுக்கும் மூன்றில் ஒரு பங்கு மானியத்தில் ரூபாய் கோடியே 32 இலட்சம் கடன் வழங்க ஆணை பிறப்பித்தார்.

இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வரிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:—

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே! இன்று இந்த விழாவில் கலந்து கொண்டு பேசுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

''என்னுடைய ஆட்சியில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் குடிதண்ணீர்த் திட்டத்துக்கு இது வரையில் ரூ. 394 கோடி செலவு செய்து இருக்கின்றனர்.

இதற்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் மொத்தம் ரூ. 47 கோடிதான் குடிநீருக்காகச் செலவு செய்து இருக்கின்றனர். தொடர்ந்து பருவமழை தவறியதால் இந்த ஆண்டு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

''உடனடி நடவடிக்கையாக ரூ. 28 கோடி செலவில் கிராமம் தோறும் புதிய கிணறுகள் வெட்டுவதற்கு உத்தரவு போட்டு இருக்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் ரூ. 347 கோடி உதவி கேட்கப்பட்டிருக்கிறது.

''தமிழகத்தில் எல்லாக் கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வகையில் திட்டங்கள் தீட்டிச்செயல்படுத்தி வருகிறோம்.

''ஆலந்தூர், பல்லவபுரம், பம்மல், சிட்டலப்பாக்கம், அனகாபுத்தூர், தாம்பரம் விமானப்படைத்தளம், வண்டலூர் பூங்கா, பரங்கிமலை, கண்டோன்மென்ட் ஆகிய பகுதிகளில் சுமார் 2 இலட்சத்துக்கு அதிகமான மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும்.

''வீடு இல்லாமல் அவதிப்படும் மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பல இலட்சம் ஏழைமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

''ஏழைத் தாய்மார்களுக்கும், பள்ளிச்சிறார்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்தால் 60 இலட்சம் தாய்மார்களும் 60 இலட்சம் சிறார்களும் பயன் அடைவார்கள்.

''காலணி அணிவது சுகாதார முறைப்படி நல்லது. கொக்கிப் புழுவால் வரும் ரத்த சோகை நோய் தடுக்கப்படும்.

''இந்தத் திட்டத்தால் ஆயிரக்கணக்கான ஏழை செருப்புத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்.

''அண்ணா நாமம் வாழ்க!
நன்றி வணக்கம்!''

செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் முன்னோடியாகத் தமிழகம் விளங்கிடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

—நமது செய்தியாளர்



# புதிய கம்பள இன ஆடு சாண்டினோ

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 7770 செம்மறி ஆடுகள் உள்ளன. இவை நீலகிரி என்று கூறப்படும் மென்மைக் கம்பள இனத்தைச் சார்ந்தவை. விவசாயிகள் இவ்வாடுகளை 50 முதல் 150 ஆடுகள் கொண்ட மந்தைகளாக மலைப்பிரதேசப் புல்வெளிகளில் வளர்க்கிறார்கள். இவ்வாடுகள் ஆண்டிற்குச் சுமார் ஒரு கிலோ எடையுள்ள மென்மைக் கம்பளத்தைக் கொடுக்கின்றன. இக்கம்பளம் உயர்ரகக் கம்பள ஆடைகள் நெய்யப் பயன்படுகின்றது.

ஊட்டி அருகே உள்ள சாண்டிநல்லாவில் ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இங்கு நீலகிரி ஆட்டினத்தை மேலும் அபிவிருத்தி செய்வது சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. முக்கியமாக நீலகிரி ஆட்டினத்தின் கம்பள அளவு, உடல் எடை இவற்றை அதிகரிக்க, மெரினோ என்ற மேனாட்டுச் செம்மறி ஆட்டினத்துடன் கலப்பினச் சேர்க்கை ஆராய்ச்சி சென்ற 15 ஆண்டுகளுக்கு மேல் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சியின் மூலம் நீலகிரி இனத்தின் மென்மைக் கம்பளத் தன்மை குறையாது, கம்பள அளவும் உடல் எடையும் கூடும் என எதிர்பார்க்கப்பட்டு, அதற்கான கலப்பினச் சேர்க்கை ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன்படி ஐம்பது, எழுபத்தி ஐந்து, அறுபத்தி இரண்டரை சதவிகித மெரினோ வம்சாவளி கொண்ட மெரினோ-நீலகிரி கலப்பின ஆடுகள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்குள்ளேயே உள் இனச் சேர்க்கையும் ( Interse Mating ) செய்யப்பட்டு பல்வேறு குணங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மெரினோ, நீலகிரி இவற்றின் பல்வேறு கலப்பினங்கள், இவற்றின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணங்கள் ஒப்பிடுதலும் செய்யப்பட்டன.

கம்பள அளவு கம்பளத் தன்மைகள், இனவிருத்தித் தன்மைகள், வாழும் திறன் இவற்றை ஒப்பிடும்பொழுது, நீலகிரி மாவட்ட தட்ப-வெப்ப நிலையில் அறுபத்திரண்டரைச் சதவிகிதம் மெரினோ வம்சாவளி கொண்ட மெரினோ நீலகிரி கலப்பின ஆடுகள் மிகவும் ஏற்றதாகவும், விவசாயிகளுக்கு அதிக லாபம் தரக்கூடியதாகவும் உள்ளன. இக்கலப்பினம் நீலகிரி இனத்துடன் ஒப்பிடும்பொழுது எவ்வளவு உயர்வுள்ளது என்பதைப் பின்கண்ட அட்டவணையின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

62.5 சதவிகித வம்சாவளி மெரினோ நீலகிரிக் கலப்பின ஆடுகள் கம்பள உற்பத்தியில் நீலகிரி இனத்தைவிட இரண்டரை மடங்குக்கும் மேலாக உள்ளன. கம்பளத் தன்மையும், வாழும் திறனும் கொண்டவைகள். ஆதலால் கம்பள உற்பத்தி மூலம் ஒவ்வொரு ஆட்டிற்கும் ஆண்டிற்கு ரூபாய் ஐம்பதுக்கும் குறையாத அதிக வருவாய் கிடைக்கும், உடல் எடை அதிகம் இருப்பதால் வேண்டாத ஆடுகளை விற்பனை செய்வதன் மூலம் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. பராமரிப்புச் செலவுகளில் எந்த வித்தியாசமும் இல்லை.

இந்த அறுபத்தைந்தரை சதவிகித மெரினோ வம்சாவளி உள்ள மெரினோ நீலகிரி கலப்பினத்தை 'சாண்டினோ' என்ற பெயரில் அழைக்கிறோம். (சாண்டிநல்லாவில் உருவாக்கப்பட்ட மெரினோ வம்சாவளி உள்ள கலப்பினம்) இதனை வளர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது. பிரத்தியேகப் பராமரிப்புச் செலவு ஒன்றும் இல்லை. ஆனால் நீலகிரி போன்ற குளிர்ப் பிரதேசங்களில் மட்டும் வளர்க்க இவ்வினம் ஏற்றது.

---

டாக்டர் ந. நடராஜன்
பேராசிரியர் - தலைவர்,
ஆட்டின விருத்தி ஆராய்ச்சி நிலையம்,
நீலகிரி மாவட்டம்.

# எண்ணெய் வளம் சேர்க்கும் நிலக்கடலை ரகங்கள்

நிலக்கடலை, தென் அமெரிக்காவில் உள்ள பிரேஸில் நாட்டிலிருந்து 26-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய பாதிரிகளால் கேரளா கடற்கரைக்குக்கொண்டு வரப்பட்டு, பிறகு அங்கிருந்து இந்தியாவின் கிழக்குக் கடற்கரைக்கும் மற்ற மாநிலங்களுக்கும் பரவியது.

முதலில் தமிழ்நாட்டில் தென் ஆர்க்காட்டிலும், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் சுமார் நாலாயிரம் ஏககரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்று இந்தப் பயிர் தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களிலும், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கும் பரவியுள்ளது.

தமிழ்நாட்டில் நிலக்கடலை சுமார் 10 இலட்சம் எக்டர்களில் பயிரிடப்பட்டு 9 இலட்சம் டன் கடலை உற்பத்தியாகிறது. சராசரி ஒரு எக்டர் மகசூல் மானாவாரியில் 720 கிலோவும், இறவையில் 1600 கிலோவும் உள்ளது.

நம் நாட்டில் உற்பத்தியாகும் நிலக்கடலை எண்ணெய் நம் தேவைக்கு மிகவும் பற்றாக் குறையாகவே இருக்கிறது. இப்பொழுது இருப்பதைவிட அதிகமான நிலங்களில் சாகுபடி செய்யும் வாய்ப்புக் குறைவு. ஆகையால் அதிக மகசூலும், தொலிப்புத் திறனும், எண்ணெய்ச் சத்தும் கொண்ட உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டுச் சிறந்த சாகுபடி முறைகளைக் கையாளுவதுதான் நிலக்கடலை எண்ணெய்யின் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கான வழி.

பொதுவாக, சாகுபடி செய்யப்படும் நிலக்கடலை ரகங்களை அவற்றின் வளரும் இயல்பிற்கு ஏற்றவாறு கொத்து, அடர் கொத்து, கொடி என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். கொத்து ரகங்கள் 100-லிருந்து 105 நாட்களும், அடர் கொத்து 120-லிருந்து 125 நாட்களும், கொடி ரகங்கள் 135-லிருந்து 140 நாட்களும் வயதுடையவை. அடர் கொத்து மற்றும் கொடி வகைகள், கொத்து ரகங்களை விட வறட்சியையும், நோய்களையும் தாங்கக் கூடியது. எனவே, இவை, மானாவாரிப் பட்டத்தில் பயிரிட ஏற்ற ரகங்களாகப் பரிந்துரைக்கப்படுகின்றன.




எண்ணெய் வித்து ஆராய்ச்சிப் பிரிவில் ஐம்பது ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சிகளின் பலனாக தமிழ்நாட்டில் டி.எம்.வி. 2, 5, 7, 9, 11, 12, கோ. 1, கோ. 2, பொள்ளாச்சி-1, பொள்ளாச்சி-2 என 10 கொத்து இரகங்களும், டி.எம்.வி. 6, 8, 10 என்ற மூன்று அடர் கொத்து இரகங்களும், டி.எம்.வி. 1, 3, 4 என்ற மூன்று கொடி இரகங்களும் சாகுபாடிக்கு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் சமீபத்தில் வி. ஆர். ஐ. 1 என்ற வீரியக்கொத்து நிலக்கடலை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் முக்கியமான இரகங்களைப் பற்றியும், சாகுபடிப் பருவம், மற்றும் சாகுபடி செய்யும் பகுதிகளுக்கு ஏற்ற இரகங்கள் பற்றியும் கவனிப்போம்.

டி.எம்.வி. 1, 3 இவை மேற்கு ஆப்பிரிக்கா இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டவை. கொடி ரகங்களில் டி.எம்.வி. 1, டி.எம்.வி. 3, தென் ஆர்க்காடு, மதுரை, சேலம், திருச்சி, கோயம்புத்தூர், தருமபுரி மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன. இவைகளின் சிறப்புஅம்சம் வறட்சி தாங்கக் கூடிய சக்தி மற்றும் 'டிக்கா' இலைப்புள்ளி நோயைத் தாங்கக் கூடிய திறன் ஆகும். டி.எம்.வி. 1-ஐ விட டி.எம்.வி. 3-ல் காய்கள் சற்று உருண்டையாகவும், விழுதுகள் அதிக ஆழத்தில் செல்லாமல், மண்ணின் சற்று அடிப்பாகத்தில் காய்கள் முதிர்ச்சி பெறுவதால் அறுவடை சுலபமாகவும் எளிதாகவும் உள்ளது. டி.எம்.வி. 3-ல் காய்களுக்கு மூக்கு இல்லாமல் மழமழ என்று இருக்கும். தொலிப்புச் சதமும் டி.எம்.வி. 1-ஐ விட 3-ல் அதிகம். டி.எம்.வி 4 கரோலினா என்ற வட அமெரிக்க ரகத்திலிருந்து நேர் வழித் தேர்வு மூலம் உருவாக்கப்பட்டது. மூன்று பருப்புள்ள காய்கள் இதில் அதிகமாக உள்ளன.

டி.எம்.வி. 6 வர்ஜீனியா அடர் கொத்து ரகம். டி.எம்.வி. 6 என்ற ரகம் குறைந்த எண்ணெய்ச்சத்து (44 சதம்) மற்றும் அதிகச் சர்க்கரைச் சத்து (2.5 சதம்) உள்ளதாகவும் பருமனான பருப்புடையதாகவும் இருப்பதால் இது மிட்டாய் வகை செய்வதற்கு உகந்தது. மற்ற ரகங்களில் 1.5 சதம் சர்க்கரைச் சத்து உள்ளது. அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் இத்தகைய நிலக்கடலை ரகங்களை விரும்பி உண்பதற்கு உபயோகிக்கிறார்கள். எனவே இந்த ரகம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கேற்ற ரகமாகும். ஆனால் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தகுந்த ஒரு நிறுவனம் செயல்படாததால், நம் நாட்டில் இத்தகைய ரகங்களுக்கு வரவேற்பு இல்லை. அதனால் இந்த ரகம் விவசாயிகளால் பரவலாகப் பயிர் செய்யப்படவில்லை.

டி. எம். வி. 8 என்ற இரகம் மதுரை மாவட்டத்தில் கம்பம், போடிநாயக்கனூர், தேனீ போன்ற இடங்களில் பயிர் செய்யப்படுகிறது. டி.எம்.வி. 10

என்ற ரகம் அர்ஜெண்டைனா நாட்டு இரகத்திலிருந்து இயல்பான சடுதி மாற்றம் மூலம் உருவாக்கப்பட்டது. இதன் பருப்பு சிவப்பும், வெள்ளையும் கலந்திருப்பதால் 'கருடன்கொட்டை' என்றும் சொல்வார்கள். இந்த இரகத்தில் எண்ணெய் சதம் 54.5. மிக அதிக அளவு எண்ணெய்ச் சத்துள்ள இரகம் இதுதான். இதற்கு விதை மந்தகாலம் 50-60 நாட்கள் இருப்பதால் இதை மானாவாரியில் மட்டும் சாகுபடி செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது.

டி. எம். வி. 10-ல் மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், இது வறட்சியைத் தாங்குவது மட்டுமல்லாமல், அதிக மழை பெய்து தாழ்வான பகுதியில் நீர் பிடிப்பு ஏற்பட்டாலும் மகசூல் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இந்த இரகம் இறவைப் பயிருக்கு ஏற்றதல்ல. ஏனென்றால் இறவைப் பயிரில் கிடைக்கும் விதைகள் விதை மந்த காலம் இருப்பதால் அதற்கு அடுத்த மானாவாரிப் பயிருக்கு உபயோகிக்க முடியாது. மாறாக அடுத்த இறவைப் பயிருக்கும் மேற்படி விதைகளைப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் அதன் முளைப்புத் திறன் வெகுவாகக் குறைந்து விடும். இந்த இரகம் துரு நோய் மற்றும் நச்சுரி (வைரஸ்) நோய்களினால் பாதிக்கப்படுகிறது. எனவே, அவற்றிற்கான பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

வறட்சி தாங்கக் கூடிய தன்மை 'டிக்கா' இலைப் புள்ளிநோயைத் தாங்கக் கூடிய சக்தி இவை இருந்தும் கொடி ரகங்கள் மற்றும் அடர் கொத்து ரகங்கள் அதிக அளவு பரவலாகப் பயிரிடப்படவில்லை. இதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

கொடி ரகங்களும், அடர் கொத்து ரகங்களும் முறையே நீண்ட நாட்கள் மற்றும் மத்திய நீண்ட நாட்கள் வயதுள்ளவை.

அறுவடை சமயத்தில் மழைத் தட்டுப்பாடு ஏற்பட்டால் மண் வெட்டி உபயோகித்து அறுவடை செய்வதால் அறுவடைச் செலவு மிகவும் அதிகமாகிறது. பொதுவாக இவ்விரு ரகங்களும் மண்வெட்டி இல்லாமல் அறுவடை செய்ய முடியாது.

குறைந்த வயதுள்ள கொத்து ரகங்களை விடக் கூடுதல் மகசூல் கிடைப்பதில்லை.

எனவே, தற்போது கொடி மற்றும் அடர் கொத்து இரகங்களின் சாகுபடி மிகவும் குறைந்து கொத்து இரகங்களின் பரப்பளவு வெகுவாக அதிகரித்துள்ளது.

கொத்து இரகங்களில் டிஎம்வி-2 தமிழ்நாட்டில் பெருவாரியாகப் பயிரிடப்படும் பழைய கொத்து இரகம். எல்லா மாவட்டங்களிலும் பயிரிடக் கூடியது என்பது இதன் சிறப்பு. இது அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாவட்டங்களுக்கும் பரவி, குஜராத் மாநிலத்திலும் சில பகுதிகளில் பயிரிடப்படுகிறது. ஆனால் இதற்கு விதை மந்த காலமே இல்லாததால், காய் முதிர்ச்சி பெறும் தறுவாயில் மழை பெய்தால் காய்கள் மண்ணிலேயே முளைத்து விடுகின்றன. இதனால் பெருத்த மகசூல் இழப்பு ஏற்படுகிறது. தவிர இந்த இரகத்தில் அறுவடைக்கு முன்பாகவே இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்து, அவ்வளவும் கொட்டி விடுகின்றன. செடிகளும் காய்ந்து விடும். அறுவடை செய்வது தாமதித்தால் காய்ந்த செடிகள் அத்தனையும் பொடிப் பொடியாகிவிடும். பிறகு மண்ணில் களைக் கொத்துக்கொண்டு தோண்டிக் காய்களை எடுக்க வேண்டும்.

டி. எம். வி. 7 இரகம் வட அமெரிக்காவில் உள்ள 'டென்னஸி' என்ற இரகத்திலிருந்து நேர் வழித் தேர்வு மூலம் உருவாக்கப்பட்டது. பருப்புகள் உருண்டையாகவும், பெரியதாகவும் உள்ளன. காய்களின் விழுதுகள் கெட்டியாக இருப்பதால், மண்ணில் காய்கள் இத்துப் போவதில்லை. செடிகளும் அறுவடை செய்வது தாமதமானாலும் பசுமையாக இலைகள் காய்ந்து உதிராமல் இருக்கும். விதை மந்த காலம் 10 நாட்கள் வரை இருப்பதால் மழை பெய்தால் காய்கள் மண்ணிலே முளைப்பதில்லை. இதில் எண்ணெய் சதமும் டி.எம்.வி. 2-ஐ விடக் கூடுதல். இது தமிழ்நாட்டில் தற்போது 30 சதம் வரை சாகுபடி செய்யப்படுகிறது.

டி. எம். வி. 9 ரகம் கலப்பினத் தேர்வின் மூலம் வெளியிடப்பட்டது. இதற்கு 15 நாட்கள் விதை மந்த காலம் உண்டு. இது 'டிக்கா' இலைப் புள்ளி நோய்த் தாக்குதலை எதிர்க்கும் சக்தி உள்ளது. இது நன்றாக வறட்சியைத் தாங்கக் கூடியது. இதில் குறைந்த பூக்கள் உற்பத்தியானாலும், பூக்களில் அதிக அளவு காய்களாக மாறும் ஒரு விசேடத் தன்மையுண்டு. உகாண்டா நாட்டு இரகத்திலிருந்து நேர் வழித் தேர்வின் மூலம் வெளியிடப்பட்டது டி. எம். வி. 12. டி.எம்.வி. 12 காய்கள் பருமனாக உள்ளன. காய்களின் தொலிப்புத் திறன் அதிகம். கணிசமான மகசூல் கொடுக்க வல்லது.

திண்டிவனம் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட மற்றொரு கலப்பின ரகம் கோ. 1 என்ற பெயரில் கோயம்புத்தூரில் வெளியிடப்பட்டது. இது கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் பயிராகின்றது. இது அதிக விளைச்சலும், அதிக தொலிப்புச் சதம், எண்ணெய்ச் சதமும் கொண்டது. இதற்கு 15 நாட்கள் விதை மந்தகாலம் உண்டு. இது இறவையிலும் மானாவாரியிலும் நல்ல மகசூல் கொடுக்கவல்லது. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் தரிசில் பயிரிட ஏற்ற இரகம்.

கோ. 2 இரகம் பொள்ளாச்சி-1 இரகத்திலிருந்து சடுதி மாற்றம்

## சோவியத் பொறியாளர்களில் பாதிப்பேர் பெண்கள்

சோவியத் நாட்டில், இன்று பெண்கள் பணி புரியாத துறைகளே இல்லை எனலாம். தகுதி பெற்ற ஊழியர்களில் 59 சதவீதம்பேர் பெண்கள், சோவியத் யூனியனில் உள்ள ஆராய்ச்சித் துறை ஊழியர்களில் 40 சதவீதமும், தொழில் துறைப் பொறியாளர்களில் 50 சதவீதமும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதல்லாமல், வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக சோவியத் யூனியனில் 1 கோடியே 70 இலட்சம் பகல் நேரக் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. இந்தக் காப்பகங்களில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான செலவில் 80 சதவீதத்தை சோவியத் அரசே ஏற்றுக் கொள்கிறது.

மூலம் உருவாக்கப்பட்ட கொத்து இரகம். மானாவாரியிலும், இறவையிலும் அதிக விளைச்சல் தரக் கூடியது. பருமனான பருப்புடையது. செடியில் அடிப்பாகத்திலேயே பெரும்பான்மையான காய்கள் இருக்கும். எல்லாப் பருவங்களுக்கும் ஏற்றது. கோ. 1 கோ. 2 இவை வட ஆர்க்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலைப் பகுதியில் கார்த்திகைப் பட்டத்தில் விதைப்பதற்கு ஏற்றவை.

பொள்ளாச்சி, கம்பம், தென்காசி முதலிய பகுதிகளில் கோடை மழையைப் பயன்படுத்திச் சித்திரை மாதத்தில் மானாவாரியாகவே நிலக்கடலை விதைக்கப்படுகிறது. இந்தக் கோடைப் பயிரின் வளர்ச்சிக் காலத்தில் தென்மேற்குப் பருவ மழையும் கிடைப்பதால் இது சிறப்புப் பருவம் ஆகும்.

பொள்ளாச்சியில் ஒரு நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வந்தது. அந்த நிலையத்தில் பொள்ளாச்சி-1 என்ற கொத்து இரகம் முதலில் வெளியிடப்பட்டது. ஒரு காலத்தில் இந்தப் பகுதியில் மகசூல் குறைவாக இருந்த 'பொள்ளாச்சி சிவப்பு' என்ற இரகத்தை சாகுபடியிலிருந்து அகற்றப் பொள்ளாச்சி-1 வெளியிடப்பட்டது. பொள்ளாச்சி-1 இரகம் பருப்பு, பருமனாக உள்ள உயர் விளைச்சல் இரகம். இது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் காய்கள் நீண்ட விழுதுகளில் உள்ளதும், விழுதுகள் மெலிந்திருப்பதும், இதன் குறைபாடுகள் ஆகும். பொள்ளாச்சி-2 இரகம். இதன் பருப்புகள் சிறியவை. அதிக எண்ணெய்ச் சத்துள்ள இந்த இரகத்திற்கு ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் விதை அளவு பொள்ளாச்சி-1 இரகத்தை விட, 10 கிலோ குறைவு.

இவற்றைத் தவிர வெளி மாநிலங்களில் உருவாக்கப்பட்டு, நமது மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட இரகம் ஜே.எஸ். 24 என்ற கொத்து இரகம். இது ஜல்கான் என்ற மகாராஷ்டிர மாநிலத்தின் ஆராய்ச்சி நிலையத்தில் வெளியிடப்பட்ட இரகம். இது வறட்சி தாங்கக்கூடிய சிறப்பு அம்சம் கொண்டது. மானாவாரிப் பயிருக்கு மிகவும் சிறந்தது. சமீப காலத்தில் இந்த இரகம் பரவலாகப் பயிரிடப்படுகிறது. ஆனால் இது குறைந்த தொலிப்பு சதம் உள்ளது. மேலும் இலைச் சுருட்டுப் புழுவால் இந்த இரகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஆனி, ஆடி மற்றும் ஆவணி மாதங்களிலும் பருவ மழை தாமதமானாலும் பின் தள்ளி விதைத்தாலும் மகசூல் குறையாமல் உள்ள இரகம் இதுதான்.

அடுத்தபடியாக பயிரிடுவதற்கு ஏற்ற பருவ காலங்களைப் பற்றியும் பயிரிடக் கூடிய பகுதிகளைப் பற்றியும் காண்போம்.

ஆனிப்பட்டம் : (ஜூன்-ஜூலை): செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, பெரியார் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இப்பருவத்தில் விதைக்கப்படுகிறது. ஏற்ற இரகங்கள் டி.எம்.வி. 7, டி.எம்.வி 12, கோ. 1, கோ. 2, ஜே.எல். 24 மற்றும் டி.எம். வி. 10.

ஆடிப்பட்டம் : (ஜூலை - ஆகஸ்டு): தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இப்பருவத்தில் விதைக்கப்படுகிறது. ஏற்ற ரகங்கள் டி. எம். வி. 7, 9, 12, கோ. 1, 3 மற்றும் ஜே .எல். 24, டி.எம்.வி 10 ஆகியவை.

ஐப்பசிப் பட்டம்: அக்டோபர் திருச்சியில் சிலபகுதிகள், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இப்பருவத்தில் நிலக்கடலை விதைக்கப்படுகிறது. ஏற்ற இரகங்கள் டி.எம். வி. 7, கோ. 2, ஜே. எல். 24.

கார்த்திகைப் பட்டம் :(நவம்பர்): வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை வட்டாரங்களில் நிலக்கடலை மானாவாரியில் இரண்டாவது பயிராக விதைக்கப்படுகிறது. ஏற்ற இரகங்கள் டி.எம்.வி. 12, கோ. 1, 2, மற்றும் ஜே.எல். 24.

மார்கழி - தைப் பட்டம்: (டிசம்பர் - ஜனவரி):—இப்பருவத்தில் இறவைப் பயிராக தமிழ்நாட்டில் நிலக்கடலைச் சாகுபடியாகும் மாவட்டங்களான வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் விதைக்கப்படுகிறது. ஏற்ற ரகங்கள் டி. எம். வி. 2, 7, கோ. 1, 2, ஜே.எல். 24.

மாசிப்பட்டம் : (பிப்ரவரி — மார்ச்சு) :—தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள புதிய டெல்டாப் பகுதிகளில் நெல் தரிசில் இப்பட்டத்தில் விதைக்கப்படுகிறது. ஏற்ற இரகங்கள் டி.எம். வி. 2, 7, கோ. 2, ஜே. எல். 24.

சித்திரைப் பட்டம் : (ஏப்ரல்): கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி வட்டம், மதுரை மாவட்டத்தில் கம்பம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிப் பகுதிகளில் கோடை மழையைப் பயன்படுத்திச் சித்திரை மாதத்தில் மானாவாரியாகவே நிலக்கடலை விதைக்கப்படுகிறது. ஏற்ற இரகங்கள் பொள்ளாச்சி-1, 2, டி.எம்.வி. 7, கோ. 1, கோ. 2, ஜே.எல். 24.

இந்த ஆண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்ட, ஏ.எல். ஆர். 1 என்ற இரகம், பொள்ளாச்சி 2 பிபிஜி. 4 கலப்பின இரகமாகும். 120 நாட்கள் வயதுடையது. மானாவாரிக்கேற்ற இரகம். குறிப்பாக, பொள்ளாச்சிப் பகுதியில் பயிரிடச் சிறந்தது.

## லெனின்கிராடு பத்திரிகையில் இராமாயணம்

இந்திய சுதந்திரத்தின் 40-வது ஆண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் 'இந்திய விழா' இந்த ஆண்டு சோவியத் யூனியனில் நடைபெற இருக்கிறது. லெனின்கிராடிலும் இந்த விழா நடைபெறும்.

இந்த விழாவையொட்டி, லெனின்கிராடு பத்திரிகைகள் இந்தியாவைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன.

''ரவீந்திரநாத் தாகூருடன் ஒரு சந்திப்பு'' என்னும் தலைப்பில் இலக்கிய விமர்சகர் இ. பொமராந்சேவா எழுதிய கட்டுரையை 'நெவா' இதழ் வெளியிட்டுள்ளது.

லெனின்கிராடு இளைஞர் ஏடான 'கோஸ்தியார்' அண்மையில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகளைத் தொடராக வெளியிட்டது.

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC-BANK/166

## மாணவர் பக்கம்

## டாக்சி எண் புதிர்

கணித மேதை ராமானுஜன் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் படுத்திருந்த போது, பேராசிரியர் ஜி. எச். ஹார்டி ''1729'' என்ற எண்ணுள்ள டாக்சியில் அங்குச் சென்றார். மருத்துவமனையில் ராமானுஜத்தினிடம் ''நான் வந்த டாக்சி எண் 1729 ஒற்றைப்பகா எண்களான 7x13x19 எனக்கொண்டுள்ளதே'' என்றதற்கு, உடனே ராமானுஜன் ''அப்படி ஒன்றுமில்லையே! அதனை ''$1^3+12^3$'' என்றோ, ''$10^3+9^3$'' என்றோ வெகு எளிதில் பிரிக்கலாமே!'' என்றாராம். அதாவது 1729 என்பதை வழி ருபத்தில்:

1. (1x1x1) + (12x12x12)

   1 + 1728 = 1729

2. (10x10x10) + (9x9x9)

   1000 + 729 = 1729



என விடைவரும்.

ராமானுஜத்தின் அபாரத் திறமையைக் கண்டு ஹார்டி பெரிதும் பாராட்டினார்.

—ரகமி

## கேள்வியும் பதிலும்

◆ இடியோசைக்கு முன்பே மின்னல் தெரிவது ஏன்?
—ஒலியை விட மிக வேகமாக ஒளி பயணம் செய்வதால்.

◆ இரு பொருள்கள் உராயும்பொழுது ஏற்படும் வெப்பம் உராயும் பொழுது செய்யப்படும் வேலைக்கு எவ்விகிதத்தில் இருக்கும்.?
—நேர் விகிதத்தில்.

◆ புகைப்படத் தொழிலில் பயன்படும் நைட்ரேட் எது?
—வெள்ளிய நைட்ரேட்

◆ தரை, தண்ணீர் இரண்டிலும் வசிக்கும் பிராணி எது?
—தவளை.

◆ தாஜ்மகாலின் பெருமைக்கு காரணமென்ன?
—அழகான கட்டடக்கலைச் சின்னம்.

◆ குட்டி ஜப்பான் என்று போற்றப்படும் தமிழகத்தின் ஊரின் பெயரென்ன?
—சிவகாசி.

◆ தியாகிகள் தினம் கொண்டாடப்படும் நாள், மாதம் எது?
—ஜனவரி 30.

## புதிய ஆத்திசூடி !

—புலமைதாசன்

அறிவைப் போற்று!
ஆணவத்தைத் தூற்று!
இயலிசைக் கூத்தை வளர்!
ஈகையோ வாடாத மலர்!
உண்மையே உயர்வுக்கு வழி!
ஊக்கமே ஆக்கத்தின் விழி!
எண்ணத்தின் வண்ணமே வாழ்வு!
ஏக்கமே அனைத்துக்கும் தாழ்வு!
ஐயம் களைந்திட நிதம் நீ படி!
ஒன்றுபட்டு வாழ்ந்தால் உயரும் குடி!
ஓசைப்படாமல் வாழ்ந்து காட்டு!
ஔவியம் பேசுதல் உயர்வுக்கு வேட்டு!
இஃதே உன்னை முன்னேற்றும் பாட்டு!

ஆல்பாட் ரோஸ் என்னும் பறவை உலகத்திலுள்ள எல்லா கடற்பறவைகளை விடவும் பெரியது. இதன் சிறகுகள் 17 அடி நீளமுடையன, நிறை ஒன்பது கிலோ. இது 2 வருடத்திற்கு ஒரு முறைதான் முட்டையே இடும்.



### விளையும் பயிர்

திருச்சி ஸ்ரீரங்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பத்தாவது படிக்கும் ஆர்.சித்ரா, வகுப்பில் முதல் மாணவியாக மட்டு மல்ல, ஓவியம் வரைவதிலும் சிறந்து விளங்குகிறார். ஆறாவது படிக்கும்போது கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார். சாரணப் படையிலும் அங்கம் வகிக்கும் இவர், 'செஸ்' விளையாட்டில் விருப்பம் உள்ளவர். தமிழ்ப் பேச்சுப் போட்டிகளிலும் இவர் முதல் பரிசு பெற்றுள்ளார். இவரது விருப்பம், சிறந்த நிர்வாகியாக வருவது.



பி.பி.சி. அயல்நாட்டு ஒலிபரப்பு மாளிகை 'புஷ் ஹவுஸ்'

# இலண்டனில் 'தமிழோசை'

புகழ்வாய்ந்தது இலண்டன் பி.பி.சி. வானொலி நிலையம்.

இந்நிலையத்தில் தமிழ் நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. 'தமிழோசை' என்னும் தலைப்பில் இந்திய நேரப்படி இரவு 9-45 முதல் 10-15 வரை இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது.

திங்கள் முதல் வெள்ளி வரை தினம் அரைமணிநேரம் மீட்டர் 31, 41, 49 சிற்றலை வரிசையில், நாம் கேட்கலாம்.

உலக நடைமுறைச் செய்திகள், தமிழில் பேட்டிகள், அறிவியல் இலக்கிய நிகழ்ச்சிகள், உங்கள் இதயம், கதம்பமாலை, நாடகங்கள் முதலியன தயாரித்து வழங்கப்படுகின்றன.

பி.பி.சி.யின் தமிழ் நிகழ்ச்சி இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற நேரத்தில் சிங்கப்பூர் பகுதியில் போரில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் ராணுவத்தின் தமிழ் வீரர்களுக்கு - தமிழர்களுக்குச் செய்தி தெரிவிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போதெல்லாம் வியாழக்கிழமைகளில் பதினைந்து நிமிடச் செய்திகளுடன் சரி.

இதற்குத் 'தமிழோசை' என்று 1952-இல் பெயர் சூட்டப்பட்டது. அப்போது வாரத்தில் இரண்டு நாட்கள் ஒலிபரப்பு செய்யப்பட்டது. ஆனால் இப்போது வாரத்தில் ஐந்து நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை ஒலிபரப்பாகிறது.

பி.பி.சி. ஆங்கிலம் தவிர, முப்பத்தாறு மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. இதில் தமிழ், வங்காளி, இந்தி, உருது, நேபாளி, பர்மிய மொழிகளும் சேரும்.

பி.பி.சி. தமிழ் நிகழ்ச்சியின் முதன்மைத் தயாரிப்பாளராக இருப்பவர் எஸ். சங்கரமூர்த்தி. இவரை நேயர்கள் 'சங்கரண்ணா' என்றே அழைக்கிறார்கள். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். பி.பி.சி. யில் முதன்மைத் தயாரிப்பாளராகும் பெருமை ஒரு இந்தியர்-தமிழருக்குக் கிடைத்திருப்பது இதுவே முதல் தடவை என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

தினமும் அன்றைய அரசியல் மற்றும் சூழ்நிலைக்குத் தக்கபடி ஒரு திருக்குறளைச் சொல்லுகிறது பி.பி.சி. தமிழோசை.

இத்தகைய சிறப்புமிக்க இலண்டன் பி.பி.சி. தமிழோசைக்கு, நம்நாட்டு அஞ்சல் கடிதத்திலேயே எழுதலாம். அதன் முகவரி : பி.பி.சி. தமிழோசை, அஞ்சல் பெட்டி எண். 3035, புதுதில்லி - என்று குறிப்பிட்டு எழுதிவிட்டால் போதும், அவை இலண்டன் பி.பி.சிக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

பி.பி.சி. நிகழ்ச்சியை ஒருநாள் கூடத் தவறாமல் கேட்டுவரும் நேயர்கள் பலர் உண்டு. அவர்களில் க.ந. நாகராசன் அவர்களும் ஒருவர். இரண்டு கண்களையும் இழந்த இவர் சென்னையைச் சேர்ந்தவர்.

இவரது குரல் ஒருமுறை பி.பி.சி. யில் ஒலிபரப்பானது. அண்மையில் சென்னைக்கு வந்த பி.பி.சி.சங்கரமூர்த்திக்கு விருந்து உபசரிப்பு தந்தார் இவர்.

— மனசை ப. கீரன்

# வாழ்க்கை நெறி

— எஸ். இரகுநாதன்

நேர்மை மனத்தில் தேக்கி
தூய்மை நெறியில் நின்று
வாய்மை கொண்டே வாழ்ந்தால்
ஏழ்மை விலகிப் போகும்!

கண்ணால் நல்லது கண்டு
வாயால் நல்லது சொன்னால்
புன்மை நீங்கிப் போகும்
புகழும் வந்து சேரும்

துணிவே மனிதரின் கவசம்
பணிவே பண்பின் இணக்கம்
கனிவே வாழ்வின் இன்பம்
கல்வியே செல்வச் சுரங்கம்

மடமைச் சூழல் போக்கி
கடமை ஆற்றிடல் வேண்டும்
உடமையைப் பேணும் தொண்டில்
உறுதி பூண வேண்டும்!



(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஏ) கச்சா மற்றும் பதப்படுத்தப்பட்ட தோல் :

கச்சா தோல் நிலையில் 2 சதவீதம்.
பதப்படுத்தப்பட்ட நிலையில் 2 சதவீதமும் விதிக்கப் படும்.

இச் சலுகைகள், இம் மாநிலத்தில் பெரும் அளவில் இப்பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அமையும் என நான் நம்புகிறேன்.

(7) விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சலுகை :

ஜிப்ஸம்தாது :—இது பருத்தி, கடலை போன்ற பயிர்களின் விவசாயத்திற்குப் பயன் படுகிறது. இதற்கு இதர இரசாயன உரங்களை போன்றே தற்போதுள்ள 5 சதவீத விற்பனை வரி விகிதம் 3½ சதவீதமாகக் குறைக்கப்படும்.

(8) நகைகள் :

தற்போது நகைகளின் மீது 5 சதவீத பல முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர பழைய நகைகளை வாங்கும் வணிகர்கள் 2 சதவீத வாங்கும் வரியும் செலுத்த வேண்டி உள்ளது. பழைய நகைகளை விற்கும் பொது மக்களிடமே இவ் வாங்கும் வரியின் சுமை போய் சேருகிறது. எனவே, பழைய நகை மீது வணிகர்கள் செலுத்தும் வாங்கும் வரி நீக்கப்படும்.

(9) கையினால் செய்யப்பட்ட தீக்குச்சிகள் :

தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 விற்பனை அளவிற்கு மிகாமல் விற்பனை செய்யும் வணிகர்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஏனையோருக்கு 2 சதவீதத்திற்கு வரி விதிக்கப்பட்டு வருகிறது. இத் தொழிலில் ஈடு பட்டுள்ள சிறிய உற்பத்தியாளர்கள், மேலும் பயனடையும் பொருட்டு, இவ் வரி விலக்கு ரூ. 1 இலட்சம் என்ற ஆண்டு விற்பனை அளவிற்கு அளிக்கப்படும். மேலும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 இலட்சத்திற்குமேல் ரூ. 2½ இலட்சம் வரையுள்ள விற்பனை அளவின் மீது 1 சதவீதமாகவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2½ இலட்சத்திற்கு மேல் 5 இலட்சம் வரையிலான விற்பனை அளவின் மீது 2 சதவீத மாகவும், ரூ. 5 இலட்சத்திற்கு மேலாக உள்ள விற்பனை அளவின் மீது 3 சதவீதமாகவும் வரி விதிக்கப்படும்.



31. மேலே அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைத் தவிர, பல நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது ; கீழே குறிப்பிடப் பட்டுள்ள பொருட்களை, ஒருமுனை வரிக்கு உட் படுத்தி, அவற்றின் மீது முதல் விற்பனை முனையில், கீழ்க்கண்டவாறு வரி விதிக்கப்படும்:—

(அ) பனைக் கொழுப்பு அமிலம்—5 சதவீதம்
(ஆ) குறிப்பிடப்பட்ட கிரானா பொருட்கள் (Kirana goods)—8 சதவீதம்.

வரி ஏய்ப்பைத் தடுக்க நடவடிக்கைகள் :

32. வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு ஏலக்காயின் மீதான விற்பனை வரி 5 சதவீத பல முனை வரியாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வெல்லத்தின் மீது 8 சதவீத ஒரு முனை வரி கொண்டு வரப்பட்டது. இந்த ஒரு முனை வரி வெளி மாநிலத்திலிருந்து வாங்கி விற்கப்படும் வெல்லத்தின் மீது முதல் விற்பனை முனையிலும், மாநிலத்திற்குள்ளே வாங்கி விற்கப்படும் வெல்லத்தின் மீது முதல் வாங்கும் முனையிலும் விதிக்கப்படும்.

மீண்டும் இவ்வாறு வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பொருட்களின் மீதான தற்போதைய விற்பனை வரியை இரண்டாகப் பிரித்து முதல் விற்பனை முனையிலும், கடைசி விற்பனை முனையிலும் வரி விதிக்கப்படும்.—

(அ) இரும்பு அலமாரி, பாதுகாப்பு பெட்டகங்கள் முதலியன :

முதல் விற்பனை முனை வரி 10 சதவீதம்.
கடைசி விற்பனை முனை வரி 5 சதவீதம்.

(ஆ) மேலே கூறப்பட்ட இனம் (அ) தவிர, மற்ற அனைத்து வீட்டு, அலுவலக தளவாடங்கள்:

முதல் முனையில் 6 சதவீதம்.
கடைசி முனையில் 4 சதவீதம்

(இ) மோட்டார் ஊர்திகள், இழுவை ஊர்திகள் ஆகியவற்றின் இணைப்பு மற்றும் உதிரி பாகங்கள் :

முதல் விற்பனை முனை—8 சதவீதம்.
கடைசி விற்பனை முனை—4 சதவீதம்.

(ஈ) டயர் மற்றும் டியூப்புகள் :

முதல் முனை—6 சதவீதம்.
கடைசி முனை—3 சதவீதம்.

கேளிக்கை வரிகளை நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் :

33. தற்போது இணக்க வரி நடைமுறையில் இல்லாத இடங்களில் தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டம் 1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் 1961ன் கீழ் திரையரங்கு களில் 6 விதமான வரிகள் வெவ்வேறு வகையில் விதிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு :—

(அ) கேளிக்கை வரி
(ஆ) கேளிக்கை வரி மீதான உபரி வரி
(இ) கேளிக்கை வரி மீதான கூடுதல் உபரி வரி
(ஈ) காட்சி வரி
(உ) காட்சி வரி மீதான உபரி வரி
(ஊ) காட்சி வரி மீதான கூடுதல் உபரி வரி.



இவ்வரிகள் அலைத்தின் மூலம் பெறப்படும் வருவாய் திரை அரங்குகளில் உள்ள மொத்த அனுமதிக் கட்டணத்தில் உயரளவாக 53 சதவீதமாக உள்ளது. ஒவ்வொரு வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் அரசு மற்றும் தல நிறுவனங்களுக்கு வெவ்வேறு வீதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மொத்தத்தில் இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் அரசு மற்றும் தல நிறுவனங்களுக்கு 35 : 65 என்ற விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இவ்வெவ்வேறு வகையான வரிகளை நெறிமுறைப் படுத்தி, ஒரே வரி விகிதமாக விதிக்க வேண்டி பல வேண்டுகோள்கள் அரசுக்கு வந்துள்ளன. எனவே, இணக்க வரி நடைமுறையில் இல்லாத இடங்களில் தனித்தனியாக ஆறு விதமான வரிகளை விதிப்பதற்குப் பதிலாக ஒட்டு மொத்தமாக ஒரே வரியாகத் திரை அரங்கின் மொத்த அனுமதிக் கட்டணத்தில் 55 சதவீதம் என்ற வரி விகிதத்தில் விதிக்கப்படும். மேலும் இவ் வருவாய்களில் உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தற்போது கிடைக்கும் பங்கை அதிகரிக்க அரசு கருதி உள்ளது. இவ் வரியிலிருந்து பெறப்படும் வருவாய், அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 30 : 70 என்ற விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படும்.

**34.** இச் சலுகைகளினால் மொத்தத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 15 கோடி இழப்பு ஏற்படும். பாதிப்பு குறைவாக இருக்கக்கூடியவற்றிலும், கூடுதலாக வருவாய் திரட்ட வளமான வாய்ப்பு திட்டவட்டமாக இருக்கக்கூடியவற்றிலும் மட்டுமே வருவாய் திரட்ட நடவடிக்கை எடுப்பதென நன்கு ஆராய்ந்த பின்னர் அரசு முடிவு செய்துள்ளது.

**கூடுதல் நிதி ஆதாரங்களுக்கான வழி வகைகள் :**

**35.** இப்போது நான் அரசின் கூடுதல் நிதி ஆதாரங்களுக்கான நடவடிக்கைகளைப் பற்றிக் கூற விழைகிறேன்.

**(அ) கூடுதல் விற்பனை வரி :**

1970 முதல் பல்வேறு வகையான வரிக்குட்பட்ட மொத்த விற்பனை மீது கூடுதல் விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், இவ் வரி விதிப்பு மீது சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அவற்றின் மூலமாக ரூ. 10 இலட்சம் வரையுள்ள வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவுக்கு மிகாமல் விற்பனை செய்யும் வணிகர்களின் விற்பனை அளவுக்கு, கூடுதல் விற்பனை வரியிலிருந்து வரி விலக்கு அளிக்கப் பட்டது. மேலும் ஆண்டுக்கு ரூ. 10 இலட்சத்திற்கு மேல் ரூ. 40 இலட்சம் வரையுள்ள வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவின் மீது 1.25 சதவீதம் எனவும், ஆண்டுக்கு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் உள்ள வரிவிதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவின் மீது 1.5 சதவீதம் என்றும் கூடுதல் வரி விதிக்கப் பட்டு வருகிறது. தமிழ்நாடு விற்பனை வரி முதல் அட்டவணையில் உள்ள பொருட்கள் ஒரு முனை வரிக்குட்பட்டவை. இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முனைகள் அல்லாமல் வேறு முனையில் விற்பனையோ அல்லது வாங்குவதோ ஏற்பட்டால், அப் பொருள்களின் மீது வரி விதிக்கப்பட மாட்டாது ; எனவே, அப் பொருட்களின் மீது, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முனையைத் தவிர, ஏனைய முனைகளில் ஈடுபடும் வணிகர்கள் அவர்களது கூடுதல் வரியைக் கணக்கிடும்போது, அப் பொருட்களின் மீதான மொத்த விற்பனையையும் தள்ளுபடி செய்கிறார்கள். ஏனெனில், மேற்குறிப்பட்டவை மற்ற முனைகளில் வரி விதிப்புக்குட்பட்டவை அல்ல. ஆனால், குறிப்பிட்ட முனை தவிர, மற்ற முனைகளில் அப் பொருட் களின் மீதான விற்பனை அளவு கணிசமான அளவு உள்ளது. எனவே, வணிகர்களிடமிருந்தும் குறிப் பிடப்பட்ட முனை தவிர மற்ற முனைகளில் இப் பொருட்களை விற்பவர்களிடமிருந்தும் கூடுதல் விற்பனை வரியை இப் பொருட்களின்பால் உள்ள விற்பனை மதிப்பீட்டில் பெற வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இச் சட்டத்தின் கீழ் 'வரிவிதிப்புக்கு உட்பட்ட விற்பனை' என்ற தொடரைக் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கலாம் எனக் கருதப்பட்டுள்ளது.

மேலே கூறிய வணிகர்களைப் பொறுத்த வரையில் "வரிக்கு உட்படுத்திய விற்பனை" என்ற தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வரி விதிப்புக்கு உட்பட்ட தொகையுடன் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முனையல்லாது, பிற முனைகளில் ஏற்படும் வாணிபத்தின் விற்பனை மதிப்பும் சேர்க்கப்படும். இவ் விற்பனை மதிப்பில் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் பிரிவு 17-ன் கீழ் வரிவிலக்கு அளிக்கப் பட்ட பொருட்களின் மீதான விற்பனை மதிப்பை மட்டும் கழித்துக் கொள்ளலாம்.

எனினும் கூடுதல் விற்பனை வரி மீது சலுகை அளிக்கக் கருதி தற்போது உள்ள வரி விகிதங்களான 1.25 மற்றும் 1.5 சதவீதங்கள் முறையே 1 சதவீதம், 1.25 சதவீதம் என்று குறைக்கப்படும்.

ஆண்டுக்கு ரூ. 10 இலட்சம் வரை விற்பனை அளவுள்ள அனைத்து வணிகர்களை இவ்வரியிலிருந்து விலக்கு அளிக்க கடந்த ஆண்டு அறிவிக்கப் பட்டிருந்தாலும், வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, இவ் வரி விலக்கு வரையறையைக் குறைக்க வேண்டியது இன்றியமையாததாக ஏற்பட்டுள்ளது. எனவே இவ் வரி விலக்கை ஆண்டுக்கு ரூ. 7 இலட்சம் என்ற வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவுக்குக் குறைத்தும் ரூ. 7 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சம் வரையுள்ள வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவின் மீது 0.7 சதவீதம் என்ற அளவில் கூடுதல் விற்பனை வரியை விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) விற்பனை வரி மீதான உபரி வரி :

விற்பனை வரி மீதான உபரி வரி தற்போது சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் இவற்றின் புறநகர்ப் பகுதிகள் மற்றும் 38 நகராட்சிகளில் விதிக்கப்பட்டு வருகிறது. இது தற்போது விற்பனை வரியில் 5 சதவீதமாக உள்ளது. சமன்பாடு கருதி, இது இம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

மேலும், தற்போது சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 32 கி.மீ. புறநகர்ப் பகுதிகளில் கூடுதல் விற்பனை வரி மீதான கூடுதல் உபரி வரி விதிக்கப்பட்டுள்ளது. கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கும் அதனைச் சுற்றியுள்ள 16 கி.மீ. வரையுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் :

**36.** இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் மீது எதிர் ஈடு (set off) மற்றும் கூடுதல் மதிப்பின் மீது வரி விதிப்பு ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கிய பலமுனை வரி விதிப்பு அறிமுகப்படுத்தப்படும். (இந்தியாவில் இறக்குமதி செய்யப்படாத, ஏனைய அருந்தும் மதுவகைகள் அனைத்தும்) வரி வீதம் வரிவிதிப்பு முனை மற்றும் எதிர் ஈடு வகைகள் பின்வருமாறு:—

இம் முறையில், முதல் விற்பனை முனையில் 30 சதவீதமும், முதல் விற்பனை முனை மற்றும் கடைசி விற்பனை முனை தவிர மற்ற எந்த ஒரு விற்பனை முனையிலும், அந்த விற்பனை முனைக்கு உடனடியான முந்தைய விற்பனை முனையில் வரி விதிப்புக்குட்பட்ட விற்பனை தொகையைக் கழித்து, மீதியின் பேரில் 30 சதவீதமும் வரி விதிக்கப்படும்.

உணவு மற்றும் சிற்றுண்டி சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் :

**37.** தற்போது உணவு மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில், விடுதிகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீதான விற்பனைமீது அளிக்கப்பட்டிருக்கும் வரி விலக்கு நீக்கப்படும். எனினும் சிறிய சிற்றுண்டிச் சாலைகள் பயன் பெறும் பொருட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சம் வரை விற்பனை அளவு உள்ள சிற்றுண்டி சாலைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சம் வரை விற்பனை அளவுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் இணக்க வரி முறையில் கீழ்க்கண்டவாறு வரி செலுத்தும் திட்டம் கொண்டுவரப்படும்:—

| | |
|---|---|
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்கு மேல் ரூ. 3 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு .. .. .. .. .. | ரூ. 7,500 |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 4 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு .. .. .. .. .. | ரூ. 11,250 |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சம் வரை உள்ள விற்பனை அளவு .. .. .. .. .. | ரூ. 15,000 |

**38.** கீழ்க்கண்ட இனங்களின் மீதான விற்பனை வரிவீதம் அதிகரிக்கப்படும் :—

(அ) வெல்டிங் கம்பிகள் மற்றும் எலக்ட்ரோடுகள்— 8 சதவீதம் 10 சதவீதமாக.

(ஆ) ஆஸ்பெஸ்டாஸ் —8 சதவீதம் 10 சதவீதமாக.

(இ) செங்கற்கள் —5 சதவீதம் 8 சதவீதமாக.

(ஈ) மரம் —5 சதவீதம் 8 சதவீதமாக.

(உ) விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரி பொருள் :—10 சதவீதத்திலிருந்து 14 சதவீதம் என்று பெட்ரோல், டீசல் மீதான வரி விதிப்புக்குச் சமமாகக் கொண்டு வரப்படும்.

**39.** மைய அரசு சில பொருட்களின் மீது தேசிய அளவில் ஒரே விதமான வரி விதிக்கப்படும் பொருட்டு, குறைந்த பட்சம் வரிவிகிதமான 10 சதவீதம் விதிக்கப்பட மாநில அரசுகளுக்குப் பரிந்துரை வழங்கியுள்ளது. இதனை செயல்படுத்தும் வகையில், கீழ்க்கண்ட பொருட்களின் மீது தற்போதுள்ள வரிகள் 10 சதவீதமாக உயர்த்தப்படும்: —

(அ) விலை மதிப்புள்ள கற்கள்.

(ஆ) குஷன் மற்றும் நுரைப் பொருட்கள்.

(இ) வெற்றிட குடுவைகள். (Vacuum Flasks)

(ஈ) சீனா பாத்திரங்கள்.

(உ) குழந்தைகளை நடத்திச் செல்லும் சக்கர ஊர்திகள்.

(ஊ) தந்தத்தாலான பொருட்கள்.

**40.** இவ்வாறான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளினால் ஆண்டொன்றுக்கு ரூ. 80 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வாகனங்கள் மீதான வரிகள் :

**41.** மோட்டார் ஊர்திகள் மீதான வாகன வரி கீழ்க் கண்டவாறு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது:—

(1) சரக்குகளை வாடகைக்கு அல்லது ஆதாயத்திற்கு கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் ஊர்திகள் (பொதுச் சரக்கு வாகனங்கள்).

சுமையுடன் கூடிய வண்டியின் எடையின் அடிப்படையில் இவ்வினத்தின் கீழ் 8 வகைப் பாடுகள் உள்ளன. இவ்வூர்திகளுக்கான தற் போதைய காலாண்டு வரி விகிதம் ரூ. 350-லிருந்து

நலிந்தோர்க்கு நாம் நல்கும் சிறப்புத் திட்டம்



1979 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குடிசைக் கொரு விளக்கு திட்டத்தின் வாயிலாகப் பயனடைந்தோரின் எண்ணிக்கை 7.4 இலட்சங்களாகும்.

ரூ. 1,300 மற்றும் அதற்கு மேலும் வரை உள்ளது. இவ்வனைத்து வகைப்பாட்டின்கீழ் உள்ள ஊர்திகளின் வாகன வரி வீதத்தை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இதனால், காலாண்டு வரி உயர்வு குறைந்த அளவு ரூ. 50 ஆகவும், உயர் அளவு ரூ. 325 ஆகவும் இருக்கும்.

(2) தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம் 1974-ன்கீழ் உள்ள அட்டவணையில் உள்ள வகைப்பாடு எண் 6, 7 ஆகியவற்றின்கீழ் வராத மற்றும் வாடகை அல்லது ஆதாயத்திற்காக பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் இழுவை ஊர்திகள்.

சுமையுடன் கூடிய வண்டியின் எடையின் அடிப்படையில் இவ்வினத்தின்கீழ் 7 வகைப்பாடுகள் உள்ளன. சுமையுடன் கூடிய வண்டியின் எடையை அடிப்படையாகக் கொண்டு இவ் ஊர்திகளின் தற்போதைய காலாண்டு வரி வீதம் ரூ. 240 முதல் ரூ. 920 மற்றும் அதற்கு மேலும் வரை உள்ளது. தற்போது கருதப்பட்டிருக்கும் வாகன வரி உயர்வால் இவ் ஊர்தியின் மீது குறைந்த அளவு காலாண்டு வரி உயர்வு ரூ. 50 ஆகவும் உயரளவு ரூ. 325 ஆகவும் இருக்கும்.

(3) வாடகை அல்லது ஆதாயம் இல்லாமல் பொருட்களை கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் தனியார் சரக்கு வாகனங்கள்.

இவ்வினத்தின்கீழ் சுமையுடன் கூடிய வண்டியின் எடையை அடிப்படையாகக் கொண்டு 9 வகைப்பாடுகள் உள்ளன. இவ் ஊர்திகளின் தற்போதைய காலாண்டு வரி விகிதம் ரூ. 80 முதல் ரூ. 1,110 மற்றும் அதற்கு மேலும் வரை உள்ளது. தற்போது கருதப்பட்டிருக்கும் வாகன வரி உயர்வால் இவ் ஊர்தியின் மீது குறைந்த அளவு காலாண்டு வரி உயர்வு ரூ. 30 ஆகவும் உயரளவு ரூ. 165 ஆகவும் இருக்கும். எனினும் இவ்வினத்தின் கீழ் உள்ள இழுவை ஊர்திகளுக்கு வரி உயர்வு இல்லை.

(4) சுற்றுலா ஊர்தி, அதாவது வேன் போன்ற அமைப்பில் உள்ள சுற்றுலா ஊர்திகள். (ஓட்டுநரையும் சேர்த்து 7 பேரை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தி).

தற்போதைய காலாண்டு வரி வீதம் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தப்படும்.

(5) வெவ்வேறு இருக்கைக் கொள்ளளவுகளைக் கொண்ட நகர, வெளியூர், விரைவு மற்றும் உதிரிப் பேருந்துகள் ஆகியவை அடங்கிய பயணிப் பேருந்துகள்:—

ஓர் இருக்கை மீதான காலாண்டுக்கான வரி வீதம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படும் :—

(அ) நகரப் பேருந்துகள் (City and Town Services) —ரூ. 180-லிருந்து ரூ. 200 ஆக.

(ஆ) விரைவுப் பேருந்துகள்—ரூ. 200-லிருந்து ரூ. 220 ஆக. ஓர் இருக்கைக்கு தற்போது வசூலிக்கப்படும் காலாண்டு உபரி வரி ரூ. 40 தொடர்ந்து விதிக்கப்படும்.

(இ) வெளியூர் பேருந்துகள்—ரூ. 225-லிருந்து ரூ. 245 ஆக. ஒரு இருக்கைக்கு தற்போது வசூலிக்கப்படும் காலாண்டு உபரி வரி ரூ. 35 தொடர்ந்து வசூலிக்கப்படும்.

(ஈ) உதிரிப் பேருந்துகள்.

மேலே கூறிய வரி உயர்வின் காரணமாக, உதிரிப் பேருந்துகளின் காலாண்டு வரி உயர்வு இருக்கைக்கு ரூ. 15 ஆக இருக்கும். இது மேற்கூறிய இதர இனங்களுக்கான உயர்வில் நான்கில் மூன்று பாகம் என்ற அடிப்படையில் உள்ளது.

**42.** மோட்டார் வாகனங்கள் மீதான இவ் வரி உயர்வுகளால் அரசுக்கு கூடுதல் வரி வருவாயாக ரூ. 10 கோடி அளவிற்கு இருக்கும் என்று கருதப் படுகிறது. இவ்வாறு ஈட்டப்படும் வரி வருவாய், சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிக்கும் பொருட்டு ஏற்படும் செலவினம் மற்றும் புதிய சாலைகள் போடுவதற்கான செலவினம் ஆகியவற்றை மேற்கொள்வதற்குப் பயன்படும். மேலும், இவ் வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களில் உள்ள வரி விகிதங்களைக் கணக்கில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது என்றும் கூற விழைகிறேன். இவ் வரி விகிதங்கள் உயர்த்தப்பட்ட பிறகும் உயர்த்தப்பட்ட வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களில் உள்ள வரி விகிதங்களுக்கு ஒப்பாகவே இருக்கும் எனவும் நான் கூற விரும்புகிறேன்.

**43.** இவ்வாறாக, கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளின் மூலம் ஆண்டொன்றுக்கு கூடுதல் வருவாய் சுமார் ரூ. 90 கோடியாக இருக்கும்.



(இதில் விற்பனை வரி ரூ. 80 கோடியும், மோட்டார் ஊர்தி வரி ரூ. 10 கோடியும் ஆகும்). ஆயினும், தற்போது அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைகளினால் ஏற்படும் வருவாய் இழப்பான சுமார் ரூ. 15 கோடியை கருத்தில் கொண்டால், 1987–88ஆம் ஆண்டில், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் இந்த நடவடிக்கைகளினால் நிகர கூடுதல் வருவாய் சுமார் ரூ. 75 கோடியாக இருக்கும்.

இந்த வகையில் நமக்குக் கிடைக்கிற நிகர வருவாயைக் கணக்கில் கொண்டால், 1987–88ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 131.69 கோடியாக இருக்கும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி மத்திய அரசிடமிருந்து நமக்கு உதவி கிடைக்குமானால் இந்த பற்றாக்குறை மேலும் குறையும். ஆயினும், மேலும் செலவை முறைப்படுத்தி அவசியமாயின், அதனைக் குறைப்பது பற்றி பரிசீலிப்பதற்காக 1987–88ஆம் ஆண்டில் இந்த நிலைமையை மீண்டும் ஆராய வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படலாம். செய்யும் செலவுக்கு உரிய பலன் கிடைக்கும் அடிப்படையில் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் மத்திய அரசு தெரிவித்துள்ள ஆலோசனைகளை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இவ்வாறான, வீணான, அவசியமற்ற செலவைத் தவிர்க்கும் வழிமுறைகளைப் பின்பற்ற இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதனால், இருக்கின்ற நிதி வசதியைக் கொண்டு உரிய பயனை அடைய முடியும்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே !

**44.** இந்த நிதிநிலை அறிக்கையில், நிதிநிலைமையின் தன்மை, ஆட்சியின் கொள்கை— குறிக்கோள், புதிய திட்டங்களின் வகைகள், அடைந்த சாதனைகள், புதிய வரிச் சலுகைகள், வரிச் சீரமைப்புகள், புதிய வரி ஏற்பாடுகள் ஆகியவை விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையில், பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ள பகுதியில், முக்கியத் துறைகள் பற்றிய சில குறிப்புகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைப் படித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்கிறேன்.

**45.** இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற இருக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்ற இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தோடும், தூய நோக்கத்தோடும் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் அரசுக்குப் பெரிதும் உதவியாக அமைய வேண்டும் என்றும், நியாய முறையில் சுட்டிக் காட்டப்படும் குறைகளும், அழுக்காறில்லாமல் நீதியின் அடிப்படையில் எடுத்துக் காட்டப்படும் குற்றங்களும், உரியமுறையில் களையப்பட, அரசுக்கு உதவிகரமாக அமைய வேண்டும் என்றும் விரும்புகிறேன். இந்த அவையின் பெயரும், புகழும் காப்பாற்றப்படவும், கண்ணியமும், கட்டுப்பாடும் பேணப்படவும் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெரிதும் வேண்டுகிறேன். சூடு மறையட்டும், ஒளி நிலவட்டும் !

**46.** இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட, எனக்கு எல்லா வகையிலும், செம்மையான முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் சேர்ந்து இருந்து சிறந்த பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை, பிற துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள் — அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், தொடர்புடைய அனைவர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப்பெருக்குடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**47.** 1987–88ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை உவந்து ஏற்குமாறு அவையினரை அன்புடன் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

சென்னை, இரா. நெடுஞ்செழியன்,
1987ஆம் ஆண்டு, நிதி அமைச்சர்.
மார்ச் திங்கள் 20ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2018, அட்சய,
பங்குனித் திங்கள் 6ஆம் நாள்.

# நிதிநிலை அறிக்கை உரையின் இணைப்பு

### வேளாண்மை

மாநிலத்தில் அடுத்தடுத்த ஆண்டுகளில் பாதகமான பருவநிலை நிலவி வருகின்றது. ஆயினும் அரசு எடுத்த பெரு முயற்சியின் காரணமாக, உற்பத்தி அளவும், உற்பத்தித் திறனும் உரிய அளவில் இருந்து வருகின்றன. 1986–87இல் உற்பத்தி அளவு எக்டேர் ஒன்றுக்கு 2,750 கிலோ கிராமாக எய்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், உற்பத்தியைப் பொறுத்தவரையில், அரிசி 57 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், சிறு தானியங்கள் 20 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பயறு வகைகள் 4.50 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் 15.50 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பருத்தி 5 இலட்சம் பேல்களாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ரகங்களை அறிமுகப்படுத்துவதிலும், நுண்ணுயிர் இரசாயனம் கலந்து விதைகளைப் பக்குவப்படுத்துதல், உயிர்ச் சத்து இரசாயன உரங்களை அதிக அளவில் பயன்படுத்துதல், புன்செய் வேளாண்மையில் நவீன சாகுபடி முறைகளைப் பின்பற்றுதல், சொட்டுநீர் மற்றும் தெளிப்புப் பாசன முறையைப் பலரும் அறியும் வண்ணம் பிரபலப்படுத்துதல், டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தைப் பரந்த அளவில் தெளித்தல், பரந்த அளவில் பயறுவகைச் செடிகளைப் பாதுகாத்தல், நுண்ணுயிர் முறையில் பயிர்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், ஐ.பி.எம். தொழில் நுட்ப

உத்தியைப் பின்பற்றுதல் ஆகியவற்றில் அதிக நாட்டம் செலுத்தக் கருதப்படுகிறது. மண்வள, நீர்வள நிர்வாகம், பண்ணையில் சாகுபடி முறைகளை இயந்திரமயமாக்குதல் போன்ற நில மேம்பாட்டுப் பணிகளைத் தீவிரப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

2. ஆயினும், வேளாண்மைத் துறையில் மரபு வழி முறைகளை மட்டும் பின்பற்றாமல், வேளாண்மைத் தொழில்கள் போன்ற நவீன முறைகளையும் உரு வாக்குவதில், முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருகிறது. வெளி நிறுவன உடனுழைப்புடன் தமிழ்நாடு வேளாண்மைத் துறை நிறுவனத்தின் மூலம் ஜாஸ்மின் கான்கிரிட் தயாரிக்கும் புதிய திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. சத்துணவு துணைத் திட்டத்தின் கீழ் வழங்க ஊட்டச் சத்துணவு தயாரிக்கும் மற்றொரு திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### பாசனம்

3. இம் மாநிலத்தில் பாசன-குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சியில் மேலும் ஒரு நடவடிக்கையாக, மத்திய அரசு அமைத்துள்ள தொழில்நுட்பக் குழு வின் பரிந்துரையைப் பின்பற்றி, கேரளாவில் மேற்கே பாய்கின்ற ஆறுகளில் சிலவற்றிலிருந்து உபரி நீரைத் திருப்பி விடுமாறு கேரள அரசைத் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இது மிகவும் அவசியம் என்பதை 1986 டிசம்பரில் நடைபெற்ற தேசிய நீர் மேம்பாட்டு முகவரமைப்பின் கூட்டத்தில் மாநில அரசு வலியுறுத்திக் கூறியிருப்பதுடன் இப் பிரச்சினையை மேலும் கவனித்து வருகிறது.

4. இம் மாநிலத்திலுள்ள ஏனைய பாசனத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுகின்ற பணியும் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தும் இரண்டாம் கட்டப் பணிக்கு ரூ. 56.86 கோடி செலவிடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணி 1988 ஏப்ரலுக்குள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. அதைப்போலவே, கோயம்புத்தூர்-பெரியார் மாவட்டங்களில் 56,600 எக்டேர் பரப்பு நிலங்கள் பயனடைய ரூ. 18.63 கோடி மதிப்பீட்டுச் செலவில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக் கட்டு விரிவாக்கத் திட்டப்பணி நிறைவேறி வரு கின்றது. ரூ. 7.44 கோடி மதிப்பீட்டுச் செலவில், கூடுதலாக 14,170 எக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிக்க, இத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணியும் நடந்தேறி வருகிறது.

### தோட்டக் கலை

5. பழமையான வேளாண்மைப் பொருள்களுக்குத் துணையாக மாநிலத்தில் தோட்டக் கலை வளர்ச்சிக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தரமான செடிகளையும், காய்கறி விதைகளையும் வழங்குவதற்கான பல திட்டங்கள் மாநிலத்தில் செயற் படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 35 இலட்சம் பதியன்கள், 54 மாநிலத் தோட்டக் கலைப் பண்ணைகளில் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டன. அடுத்த ஆண்டில், இது 40 இலட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. காய்கறி விதைகளுக்குப் பெருகிவரும் தேவையை நிறைவு செய்ய, சுமார் 86 மெட்ரிக் டன் விதைகள் நடப்பாண்டில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன. 1987-88இல், இதனை 90 மெட்ரிக் டன்னாக உயர்த்தத் திட்டமிடப்பட் டிருக்கிறது.

### கால்நடை வளர்ப்பும் பால்பண்ணை வளர்ச்சியும்

6. மாநில கால்நடை வளர்ப்புத் திட்டங்களின் மையங்களாக 7 மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் உள்ளன. டென்மார்க் அரசின் உதவியுடன் ஏற்படுத் தப்பட்ட அயலினக் கால்நடை இனப்பெருக்கப் பண்ணை மாநிலத்திற்குத் தேவையான 'ஜெர்சி' இனக்காளைகளை உற்பத்தி செய்கின்றன. நடப் பாண்டில் 250 மையங்களில் உறைவிந்து சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டதன் வாயிலாக, மாநிலத்தில் மொத்த நிலையங்களின் எண்ணிக்கை 1,294 ஆக அதி கரித்துள்ளது. அடுத்த ஆண்டில் இதுபோன்று மேலும் 125 நிலையங்கள் தொடங்கத் திட்டமிடப் பட்டிருக்கின்றது. புதுக்கோட்டையிலும், உதகமண்ட லத்திலும் உள்ள கிடேரி உற்பத்தி நிலையங்கள் இரண்டும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்புப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் கீழ், உழவர்களுக்குக் கன்றுகளை வழங்க உதவுகின்றன.

7 தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி, மதுரை மாவட்டங்களிலும், அண்ணா, காமராசர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் உள்ள கால்நடைகளுக்கு, வெக்கை நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.

8. மாநிலத்தில் பால் உற்பத்தியும் குறிப்பிடத் தக்க அளவில் அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு 6.78 இலட்சம் லிட்டர் பாலைக் குளிர வைக்கும் திறன் கொண்ட 36 குளிர வைக்கும் நிலையங்கள் மாநிலத்தில் இப்போது செயல்பட்டு வருகின்றன. நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் பால் உற்பத்தி செய்து, பதப்படுத்தி விற்பனை செய்வதற் கான வசதிகளை ஏற்படுத்த, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம், இந்த ஆண்டு, ரூ. 7.05 கோடி அளவிற்கு, நிதியுதவி அளித்துள்ளது. பால் பெருக்கத் திட்டத் தின் மூன்றாம் கட்டப் பணி மாநிலத்தில் தொடங்கப் பட்டுள்ளது.

### தொழில்கள்

9. தொழில் துறையில் முன்னேறியுள்ள மாநிலங் களில், தமிழகம் தொடர்ந்து முன்னணியில் இருந்து





வருகிறது. வழங்கப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், மாநிலம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, அதன் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ், மாநில வாரியாக நிதி உதவி அளித்துள்ள அறிக்கையைப் பார்க்கும்போது, மகாராட்டிர மாநிலத்தை அடுத்து, இரண்டாவது இடத்தில் தமிழகம் இருப்பதைக் காணலாம். புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்கவும், ஏற்கெனவே இருந்துவருகிற சர்க்கரை ஆலைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும், மாநில அரசு 12 விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் விலையுயர்ந்த உலோகங்கள் இருப்பது குறித்து விரிவாக ஆய்வு நடத்தும் திட்டமும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது பற்றி விரிவாக ஆராயும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**10.** 27–2–1987 அன்று சட்டப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரையில், பொதுத் துறை நிறுவனங்கள் பொருளாதார வகையில் தனித்தியங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிடப்பட்டது. அரசு பெருமளவில் முதலீடு செய்துள்ள சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்தது, இப்போது பொருளாதார வகையில் தனித்தியங்கும் நிலையில், வெகு வேகமாக முன்னேறி வருவது பெருமகிழ்ச்சியளிக்கக்கூடியதாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குப் பெரிய அளவிலான 'பக்கெட் வீல்' அகழ்ந்தெடுப்பு இயந்திரங்கள் மூன்றை, மேற்கு ஜெர்மனி நாட்டு நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் தயாரித்து வழங்க, இந்த நிறுவனத்திற்குத் தேவைக் குறிப்பு ஆணைகள் கிடைத்துள்ளன. ஆக்கப் பணியை நிறைவேற்றுவதில், மேலும் ஒரு நடவடிக்கையாக, தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கத்தில் உள்ள உப்புத் தொழிற்சாலையில், மத்திய அரசு மற்றும் 'யுனிசெப்' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், இரும்புச் சத்து கலந்த உப்பு தயாரிக்கும் திட்டத்தை, நிறைவேற்றி வருகிறது. இரும்புச் சத்து கலந்த உப்பு, முதலமைச்சரின் நண்பகல் உணவுத் திட்டத்திற்கு வழங்கப்படும். இதுபோலவே, படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், 1986–87இன் இலக்கான 18,100 பேருக்கு மாறாக, 23,549 பேருக்கு நிதியுதவி அளிக்கும்படி வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**11.** இம் மாநிலத்தில், தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெறத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகிறது. மொத்தம் ரூ. 347 கோடி மூலதனத்துடன், பொதுத் துறையில் ஏழு தொழிற்சாலைகளும், கூட்டுத் துறையில் 26 தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்து வருகின்றன. இத்துடன், மொத்தம் ரூ. 295 கோடி மூலதனத்துடன் பொதுத் துறையில் இரண்டு தொழிற் திட்டங்களும், கூட்டுத் துறையில் பத்துத் தொழிற் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத் தொழிற் திட்டங்கள் அனைத்தும் சுமார் 15,900 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. 'டிட்கோ' நிறுவனத்தின் முக்கியத் தொழிற் திட்டங்களான மெக்னீசியம் உலோகத் தொழிற் திட்டம், வெடிமருந்து மற்றும் வெடிமருந்து திரிகள் தயாரிப்புத் தொழிற் திட்டம் பொதுத் துறையிலும், தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் நிறுவனம், டைட்டான் கைக்கடிகாரங்கள் தயாரிப்புத் தொழிற் திட்டங்கள் கூட்டுத் துறையிலும், ஏனைய சில தொழிற் திட்டங்களுடன் 1987–88ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநிலத்தில், தொழில்களைத் தொடங்குவதில், தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகமும் (சிப்காட்) முக்கியப் பங்காற்றி வருகிறது. மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் மத்திய முதலீட்டு உதவித் தொகையை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதிலிருந்து தொழில் வளர்ச்சிக்கு இந்த நிறுவனம் எந்த அளவிற்குப் பாடுபட்டுள்ளது என்பது தெரியவரும். இதேபோல, 1985–86ஆம் ஆண்டில், ரூ. 195.40 இலட்சம் ஆதாயம் ஈட்டிய தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும், அதனுடைய கடந்தகால சாதனையைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது. 1986–87ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகள், 16,300 பேருக்கு வேலைவாய்ப்பளித்துள்ளன.

### மின்னணுவியல், அறிவியல், தொழில்நுட்பவியல்

**12.** இம் மாநிலத்தில் அறிவியலைப் பிரபலப் படுத்தும் பொருட்டு, அரசு தமிழ்நாடு அறிவியல்-தொழில்நுட்பவியல் மையத்தை அமைத்துள்ளது. இந்த மையம் சென்னையில், பெரியார் அறிவியல்-தொழில்நுட்பவியல் நிலையத்தையும், கோள்நிலை இயக்கங்களைக் காட்டும் காட்சியரங்கத்தையும் அமைத்து வருகிறது. அறிவியல்-தொழில்நுட்பவியல் நிலையத்தின் முதல்கட்டப் பணியும், கோள்நிலை இயக்கங்களைக் காட்டும் காட்சியரங்கமும் 1987-ல் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**13.** காற்றாலை மின்சக்தி, சூரிய வெப்பத்திலிருந்து மின்சக்தி எடுத்தல் போன்ற நவீன மின்சக்தி ஆதாரங்களை மேம்படுத்தும் பணியைத் தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு முகவரமைப்பு மேற்கொண்டிருக்கிறது. அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள தொலை உணர்வு மையம், விண்வெளிக் கோள் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்களைக் கொண்டு அரசுத் துறைகள் பலவற்றிற்கு உதவி வருகிறது. இதற்காக, இம்மையம் சக்திவாய்ந்த கணிப்பொறி ஒன்றை விரைவில் வாங்கவுள்ளது.

**14.** மின்னணுவியல் துறையைப் பொறுத்தமட்டில், அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) 1986–87ஆம்

ஆண்டில், பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் உள்ள அதன் உற்பத்திப் பிரிவுகள் மூலம், ரூ. 13 கோடிக்கு விற்பனை செய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1985–86ஆம் ஆண்டு விற்பனையான ரூ. 8 கோடியைவிட, இது 60 சதவிதம் அதிகமாகும். 1987–88ஆம் ஆண்டு, மொத்த விற்பனை ரூ. 28 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவன நிதி உதவி

**15.** மாநிலத்தில் முன்னுரிமை பெறும் பல்வேறு பணிகளுக்கு போதுமான அளவிற்கு கடன் உதவியை விரைந்து வழங்க அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. தமிழ்நாட்டில் முன்னுரிமை பெறும் துறைகளுக்கு முன்பண உதவி அளிக்கவும் வெவ்வேறு விதத்தில் வட்டி விதிக்கவும் நலிவுற்ற பிரிவினருக்குக் கடன் வழங்கவும், இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள இலக்குகளை நாம் தாண்டியிருப்பது நமக்கு மனநிறைவைத் தருகிறது. 1985–90ஆம் ஆண்டுகளுக்கு வங்கிக் கிளை உரிமம் வழங்கும் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்தது. அதன்படி, 251 வளர்ச்சி வட்டாரங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க 486 இடங்களை மாநில அரசு கண்டறிந்துள்ளது. இந்த வகையில் முதற்படியாக, தருமபுரி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 38 இடங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க கிராம வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

வேலைவாய்ப்புப் பணிகள்

**16.** வேலையற்றோருக்கு நிதி உதவி அளிப்பது ஒரு சமூகநலத் திட்டமாகும். இந்த நிதி உதவி தொடர்ந்து அளிக்கப்பட்டுவருகிறது. நடப்பு நிதியாண்டில் முதல் மூன்று காலாண்டுகளில் வேலையற்றோர் 1,35,038 பேருக்கு ரூ. 7.69 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டின் மீதமுள்ள மூன்று மாதங்களில் மேலும் 8,000 பேருக்கு ரூ. 1.55 கோடி நிதி உதவி அளிக்கப்படும்.

தொழிலாளர் நலன்

**17.** மாநிலத்திலுள்ள தொழிலாளர்களுக்குச் சிறந்த முறையில் பணி நிலைமைகளை உருவாக்கித் தரவும், அவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கவும், அரசு, தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.




1987–88 ஆம் ஆண்டில் மத்திய தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தின் இசைவுடன் சிவகாசி, சேலம் ஆகிய இடங்களில், முறையே 50 படுக்கை வசதி கொண்ட இரு மருத்துவமனைகளைப் பணியாளர் குடியிருப்புகளுடன் அமைக்க, அரசு, அனுமதி வழங்கக் கருதியுள்ளது. பணியாற்றும் சிறார்களின் நிலைமையை மேம்படுத்தவும், அவர்களுக்குச் சத்துணவும், அடிப்படைக் கல்வி வசதியும், சுகாதார வசதியும் அளிக்கவும் முன்னோடித் திட்டம் ஒன்று, மத்திய அரசின் நிதியுதவியுடன் சிவகாசியில் இவ்வாண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 13.89 கோடி செலவில் 3 ஆண்டுக் கால அளவில் செயற்படுத்தப் படும். சிவகாசியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகப் பணியாளர் தொகுதி விபத்து காப்புறுதித் திட்டத்தையும் அரசு கொண்டு வந்தது. இத்திட்டம் மாநிலத்தில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இரசாயனத் தொழிற்சாலைகள் முதலியவற்றில் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் தொழில்கள் குறித்தும், அத் தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் நாளது வரையிலான தகவலைத் தொகுக்க, இந்த அரசு, 1985ஆம் ஆண்டு பணிக் குழு ஒன்றை அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகள் கவனமாகப் பரிசிலிக்கப்பட்டு வருகின்றன.

**18.** அமைப்புரீதியில் இல்லாத தொழில் பிரிவுகளில் காப்புறுதி-ஓய்வு கால நன்மைத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை, அரசு, செயற்படுத்தி வருகிறது.

கைத்தறி-துணித் தொழில், கதர்

**19.** வேளாண்மைத் துறையைப் போன்று, கைத்தறித் துறையும், உழைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பண்டைய துறையாகும். இத்துறையைச் சார்ந்திராத வேறு காரணங்களினால், கைத்தறித் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்கு இடர்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், அரசின் கொள்கை, அவ்வப்போது அரசு அளித்துள்ள ஆதரவு ஆகியவற்றின் பயனாக, நெசவு ஆலைகள், விசைத்தறிகளின் கடும் போட்டிகளுக்கிடையே கைத்தறித் தொழில் நிலைத்து நிற்கிறது. கைத்தறித் துணிகள் விற்பனையை அதிகரிக்க கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி வழங்குகிற தற்போதுள்ள கைத்தறிக் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. நடப்பாண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 10 கோடியாக இருக்க, இத்திட்டத்திற்கு அரசு இதுவரையில் ரூ. 37 கோடி அனுமதித்துள்ளது.

**20.** கதர்-கிராமத் தொழில்களுக்கும் அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கதர்-கிராமத் தொழில் வாரியம், அன்றாட பயனுக்குரிய பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதோடு மட்டுமல்லாது, கிராமப்பகுதிகளில் அதிக அளவுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. உற்பத்திப் பிரிவுகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக் கதர்-கிராமத் தொழிலை மேம்படுத்துவதே அரசின் குறிக்கோளாகும். அருகருகேயுள்ள கிராமங்களில் நலிந்த

பிரிவினருக்கு வேலை வாய்ப்பளிக்கவும், ஓரளவு முதலீட்டுடன் உள்ளூரில் கிடைக்கிற மூலப் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசின் இந்த அணுகுமுறை வகை செய்கிறது. கதர்-கிராமத் தொழில் வாரியம், 1987–88இல் ரூ. 140 கோடி அளவிற்கு மொத்த உற்பத்தியை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மின்சக்தி

**21.** ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், மின்சக்தி வளர்ச்சிக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த நிதி ஒதுக்கீட்டில், 35 சதவீதமான ரூ. 2,000 கோடி, மின்சக்தி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாம் ஆண்டில் (1985–86), ரூ. 301.44 கோடி செலவிடப்பட்டது. 1986–87இல், ரூ. 357.55 கோடி செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1987–88-ல், ரூ. 408.69 கோடி ஒதுக்கப்படுகிறது.

**22.** மின்சக்தி வளர்ச்சிக்குத் திட்ட ஒதுக்கீடு அதிகரித்து இருப்பதை, நடப்பாண்டில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மின்சக்தி உற்பத்தி அதிகரித்திருப்பதில் காணலாம். 1986–87-ல் ஜனவரி மாதம் வரை, 12,333 மில்லியன் யூனிட் மின்சக்தி வழங்கப்பட்டது. இது, கடந்த ஆண்டு இதே கால அளவில் வழங்கப்பட்ட மின்சக்தியைக் காட்டிலும், 12.5 சதவீதம் அதிகமாகும். தமிழ்நாடு மின் வாரியத்தின் அனல்மின் நிலையங்களில் உற்பத்தி அதிகரித்தமையாலும், நெய்வேலியிலுள்ள இரண்டாவது அனல்மின் நிலையத்திலிருந்து கூடுதலாக மின்சக்தி கிடைத்ததாலும், இந்த அளவிற்கு மின்சக்தியை வழங்க முடிந்தது. அனல்மின் நிலையங்களின் மின் சுமைத் திறனும் அதிகரித்து வருகிறது. தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில், 1985–86இல், 65.5 சதவீதம் மின்சுமைத் திறன் இருந்ததற்கு மாறாக, 1986–87இல், 73 சதவீதம் அளவிற்கு, மின்சுமைத் திறன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**23.** கிடைக்கும் மின்சக்தி அதிகரித்திருந்தாலும், தேவை முழுவதையும் நிறைவு செய்ய முடியவில்லை. ஏனெனில், தேவை விரைந்து பெருகி வரும் அதே சமயம், மாநிலத்தில் உள்ள புனல் மின் நிலைய நீர்தேக்கங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளில், தொடர்ந்து பருவ மழையும் பொய்த்துவிட்டது. எனவே, உயரழுத்த மின்சக்தி பயன்படுத்தும் சுமார் 1000 தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டினைக் கொண்டு வருவதைத் தவிர, வேறு வழியில்லாமல் போயிற்று. ஆயினும், மின்சக்தியை செவ்விய முறையில் வழங்கி வந்ததன் காரணமாக, மின்வெட்டின் அளவை எப்போதும் ஒரே அளவில் வைத்திருக்க முடிகிறது. 1987 ஜனவரி மாதம் முதல், 40 சதவீதம் மின்வெட்டு செயலில் இருக்கிறது. இது மேலும் அதிகப் படுத்தப்படமாட்டாது.

**24.** இந்த அளவிற்குப் பெரும் தடைகள் இருந்தபோதிலும், மின்சக்தித் துறையில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலப் பணிகளையும் அரசு நிறைவேற்றி வந்துள்ளது. விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில், 40,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் இலக்கு எய்தப்பட்ட



'குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தை, அரசு 1979ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இப்போது 7.4 இலட்சம் குடிசைவாழ் மக்களுக்கு, மின்சக்தி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றின் கீழ்க் கட்டப்பட்டுள்ள சிறு ஓட்டு வீடுகளுக்கும் இத் திட்டத்தின்கீழ், மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது.

### கல்வி

**25.** வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், கல்விக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. கல்விக்காக 1986–87இல் ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, 1987–88இல் ரூ. 597 கோடி ஒதுக்கப்படும். கடந்த காலத்தைப் போன்றே 1987–88ஆம் ஆண்டிலும், புதிய பள்ளிகள் தொடங்குவது, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது, கூடுதல் ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதி அளிப்பது ஆகியவை தொடரும்.

**26.** புதிய கல்விக் கொள்கைக்கு அரசு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம் மாநிலத்திலுள்ள 1,250-க்கு மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில், தற்போது வாழ்க்கைத் தொழில் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் வாழ்க்கை ஆதாரக் கல்வி திட்டத்தின்படி, பள்ளிக் கல்வி முறையையும், முதல் வகுப்புமுதல் 12ஆம் வகுப்புவரையிலான பாடத் திட்டத்தையும் முழுமையாக மாற்றியமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைக் கேற்ப அமைந்துள்ளது. 31–12–1986 நிலவரப்படி, மொத்தம் 21,995 முதியோர் கல்வி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத் திட்டத்தின்கீழ்க் கல்வி கற்றுவரும் 8.08 இலட்சம் முதியோரில், 6.54 இலட்சம் பேர் மகளிர்; முதியோர் கல்வித் திட்டத்தில் இடம் பெற்றுள்ளவர்களில், 3.56 இலட்சம் ஆதிதிராவிடரும் பழங்குடியினரும் ஆவர்.

**27.** பல்கலைக்கழகக் கல்விக்காகப் புதிய பல்கலைக்கழகங்களை மாநில அரசு தொடங்கி வருகிறது. ஏற்கெனவே உள்ளவற்றைப் போன்று, பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது இதன் நோக்கமல்ல; பொருத்தமான பொருள்கள் குறித்து ஆராய்ச்சியை மேற்கொள்ளும் தனிநோக்கம் கருதிய பல்கலைக்கழகங்கள் அமைய வேண்டும்

என்பதே இதன் கொள்கையாகும். அத்துடன், தேசியக் கல்விக் கொள்கையைச் செயற்படுத்தும் செயல்திட்டத்தின்படி அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி அளிக்க, பல்கலைக்கழகங்களுக்கு மாநில அரசு போதிய ஊக்கமளித்துள்ளது. தமிழ்நாட்டில், தன்னாட்சி உரிமைபெற்ற கல்லூரிகள் 17 உள்ளன ; தன்னாட்சி உரிமைபெற்ற கல்லூரிகள் மிக அதிகமாக இருக்கும் மாநிலம் தமிழகம் ஆகும். பல்கலைக் கழகங்கள், தேர்வுகள் நடத்துவதிலேயே காலத்தை வீணாக்காமல் பட்ட மேற்படிப்புக் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதே, இந்த அணுகுமுறையின் நோக்கமாகும். இம் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தையும், போதிய நிதி வசதி படைத்தவையாக்கும் எண்ணத்தில் அவற்றுக்கான ஒட்டுமொத்த ஆண்டு மானியங்களை உயர்த்துவது பற்றி மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

### தமிழ் வளர்ச்சி - பண்பாடு

**28.** தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் முறையான வளர்ச்சிக்கு மாநில அரசு புதிய முயற்சிகள் பலவற்றை எடுத்து வருகிறது. இந்த ஆண்டு புதுடில்லியில் மகாகவி பாரதியாரின் உருவச் சிலை நிறுவப்பட்டது. டில்லி தமிழ்ச் சங்கம் தன்னுடைய கட்டிடத்தைக் கட்டிக்கொள்ள அதற்கு ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. தஞ்சாவூரில் அமைக்கப் பட்டுள்ள தென்னக பண்பாட்டு மையம் முக்கியமான நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தியுள்ளது. அமெரிக்காவில் உள்ள சுதந்திரச் சிலையைப் போன்று கன்னியாகுமரியில் கடலை நோக்கிய வண்ணம் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரின் நெடிதுயர்ந்த உருவச்சிலையை நிறுவப் போவதாகவும் அரசு அறிவித்துள்ளது,

### விளையாட்டு வளர்ச்சியும் இளைஞர் நலனும்

**29.** விளையாட்டுகளுக்கு ஊக்கமளிக்கவும், தமிழ் நாட்டில் உள்ள இளைஞர்கள் உடல் ஆரோக்கியத் தோடும், திடமான உள்ளத்தோடும் திகழ பல்வேறு விளையாட்டு வளர்ச்சிப் பணிகளை அரசு தொடங்கி யுள்ளது. தேசியப் பணித் திட்டம், நேரு இளைஞர் மையங்களை ஏற்படுத்துதல், கிராம இளைஞர் நற்பணி மன்றங்களை அமைத்தல், கிராம விளையாட்டு மையத்தை ஏற்படுத்துதல், உள்ளூரிலும், தேசிய அளவிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் ஆகியன இப்பணிகளுள் சிலவாகும். 1986-87ஆம் ஆண்டில், திருச்சியில் கிராம விளையாட்டுப் போட்டி ஒன்றை தமிழக அரசு நடத்தியது. கோயம்புத்தூரில் மகளிர் விளையாட்டுப் போட்டிகளை யும், அனைத்திந்திய சிவில் பணியாளர்கள் விளை யாட்டுப் போட்டியையும் அரசு நடத்தியது.

**30.** தமிழ்நாட்டில் விளையாட்டுகளைச் சரியான வழியில் நடத்திச் செல்லவும், மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து ஊக்கமளிக் கவும், தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் தானே பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செயற்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத் திலும் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம், உள் விளையாட்டு அரங்கம் போன்ற விளையாட்டு வசதி களை ஏற்படுத்த இக்கழகம் திட்டங்களை உருவாக்கி யுள்ளது. விளையாட்டுக்கு ஊக்கமளிக்கும் உள்ளூர் அமைப்புகள் மூலமாகவும், தேசிய விளையாட்டு



வளர்ச்சி மன்றம் போன்ற மத்திய அரசு அமைப்புகள் மூலமாகவும் தக்க நிதியுதவியைப் பெறுவதிலும் இக் கழகம் ஈடுபட்டுள்ளது.

### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

**31.** 1982ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத் தினால், இன்று 84 இலட்சம் சிறார்களும், முதியோர் உதவித் தொகைபெறும் 1.98 இலட்சம் பேரும் 66,000 மையங்கள் மூலமாகப் பயன் அடைகின்றனர். 1—1—1984 முதல் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள்/ அவர்களின் விதவையர் ஆகியோர்க்குப் பயன் அளிக்கும் வகையில், இத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. சுமார் 1.99 இலட்சம் பேர் பெரும்பாலும் ஏழ்மை நிலையில் உள்ள, ஆதரவற்ற மகளிர் இத் திட்டத் தினால் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**32.** இத்திட்டத்தின் மூலம், சிறார்கள் நன்கு வளர்ச்சியடைந்து, திடமான உடல் நலத்துடன் இருக்கின்றனர். இதனால், பள்ளி செல்லும் சிறார்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருப்பதோடு, படிப்பைப் பாதியில் விட்டு விடுபவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இத்திட்டத்தைச் சத்துணவு—சுகாதாரத் திட்டமாக விரிவுபடுத்தி, 2 வயதுக்குக் கீழுள்ள சிறார்களுக்கும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களுக்கும் பயன் அளிக்கக் கருதப்படுகிறது. உலக வங்கியை அணுகி இதற்குத் தக்க உதவி கோரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### பாடப் புத்தகங்கள் மற்றும் பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம்

**33.** பள்ளிக் கல்வி இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரின் பொறுப்பிலும், மூன்று மாநகராட்சிகளின் பொறுப்பிலும் உள்ள பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்புவரை பயிலும் சிறார்களுக்கு இலவசமாக சீருடைகளும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுவது இத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். பள்ளிச் சீருடைகளைத் தைப்பதில் சுமார் 40,000 மகளிர் வேலைவாய்ப்பு பெற்றுப் பயனடைந்துள்ளனர். 1987—88ஆம் ஆண்டு ரூ. 11.54 கோடி, பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்திற்கும், ரூ.15.53 கோடி சீருடைகள் வழங்கும் திட்டத்திற்கும் ஒதுக்கப் பட்டுள்ளது.

**34.** கி.பி. 2000ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் சுகாதார வசதி அளிப்பது என்ற அல்மா அட்டா உறுதி மொழியை செயற்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூடுதலாக 3000 சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில், 1985-86, 1986–87ஆம் ஆண்டுகளில் 1340 கூடுதல் துணை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மொத்தத்தில், 31–1–1987ஆம் நாள் நிலவரப்படி, இம் மாநிலத்தில் 7200 சுகாதாரத் துணை நிலையங்கள் செயல்படுகின்றன. 260 சிறிய சுகாதார நிலையங்கள், 274 இயங்கும் சுகாதாரக் குழுக்கள் ஆகியவற்றுடன் தொடக்க சுகாதார நிலையங்கள் மூலம் கிராமப்புறங்களில் சுகாதார வசதி அளிக்கப்பட்டு வருகிறது. 1987–88ஆம் ஆண்டில் கூடுதலாக 140 தொடக்க சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

**35.** சாலை விபத்துகளிலும் தீ விபத்துகளிலும் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கென விபத்து-அவசர சிகிச்சைப் பணிகள் திட்டம் தமிழ்நாட்டில் 1979ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. 1986–87, 1987–88ஆம் ஆண்டுகளில் முறையே தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு இத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம், இம் மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் செயலில் இருக்கும். இத் திட்டத்தை இப்போது சென்னை மாநகரில் பரந்த அளவில் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தில், கம்பியில்லா தகவல் தொடர்பு அமைப்பு, மேம்படுத்தப் பட்ட ஆம்புலன்ஸ் வசதிகள் ஆகியவற்றை ஏற் படுத்தி மருத்துவத் துறையும், காவல் துறையும், போக்குவரத்துத் துறையும் ஒருங்கு சேர்ந்து பணி யாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

**36.** 1986–87ஆம் ஆண்டிலும் குடும்ப நலத் திட்டம் முழு மூச்சுடன் செயற்படுத்தப்படுகிறது. 1986–87ஆம் ஆண்டில் 5,60,000 கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 1987 பிப்ரவரி வரை 3,97,214 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்தின் ஏனைய முறைகளைச் செயற்படுத்துவதிலும் இதே அளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



### இந்திய முறை மருத்துவம்—ஓமியோபதி

**37.** இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. பதிவு செய்துகொண்டுள்ள, வேலை செய்யத் திறனற்ற பாரம்பரிய சித்த மருத்துவர்களுக்கு அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 3,600-க்குக் குறைவாக இருக்குமானால் முதியோர் உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ. 150 வழங்கும் திட்டத்தை 1986–87-ல் அரசு செயற் படுத்தியுள்ளது. சித்த மருந்தகங்களையும், ஓமியோபதி மருந்தகங்களையும் தொடங்குவது என்ற கொள்கை நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

### குடிநீர் வழங்கல்

**38.** தமிழ்நாட்டில் கிராம—நகர்ப்புறப் பகுதி களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராம நீர் வழங்குத் திட்டத்தின் கீழ், ரூ. 250 கோடி செலவில், 10,900 குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டில், 2,834 குடியிருப்புப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும், ஆண்டுதோறும் 2,225 குடியிருப்புப் பகுதி களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் நிலவும் பாதகமான பருவ நிலையைக் கருதி, நடப்பு ஆண்டில், 1986 டிசம்பர் வரை 5,339 துளைக் கிணறுகள் ஏற்கெனவே தோண்டப்பட்டுள்ளன. 1987ஆம் ஆண்டு பிப்ரவரி–மார்ச் ஆகிய இரு திங்களில் மட்டும் 2000 புதிய துளைக் கிணறுகளைத் தோண்டும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**39.** ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங் களில், ரூ. 15.2 கோடி மதிப்பீட்டுச் செலவில் 4 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் குடிநீர்த் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க, தொழில் நுட்பக் குழு இராமநாதபுரம் மாவட்டத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

**40.** ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சென்னை மாநகரில் நீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றலுக்கு ரூ. 125 கோடி ஒதுக்கீட்டிற்குத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. வடகிழக்குப் பருவமழை போதுமான அளவுக்குப் பெய்யத் தவறிய தால், சென்னை மாநகரில் எழக்கூடிய தண்ணீர் பற்றாக் குறையைச் சமாளிக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலத்தடி நீர் வாயிலிலிருந்து நீர் எடுக்கவும், ஏற்கெனவே உள்ள துளைக் கிணறுகளை புதுப்பித்து, பராமரிக்கவும், ரூ. 163 இலட்சம் செலவிலான செயற்குறிப்புக்கு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஏனைய ஆதாரங்களிலிருந்தும், திருவான்மியூருக்கு தெற்கே கடற்கரையிலுள்ள நீர் ஊற்றிலிருந்தும், நிலத்தடி நீர் எடுத்துச் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 250 மி.லி. இயல்பான



அளவிற்கு நீர் வழங்குவதற்கு மாறாக, நாள் ஒன்றுக்கு 180 மி.லி. நீரைத் தொடர்ந்து வழங்குவதற்கான திட்டங்களையும் அரசு செயல்படுத்தும்.

**41.** மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் உட்பட 16 பெரும் நகரங்கள், 12 நகராட்சிகள், ஒரு நகராட்சி நகரியம், ஒரு ஊராட்சி நகரியம் ஆகியவற்றிற்குப் பாதாள சாக்கடை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், மொத்தம் 29.38 இலட்சம் நகர மக்கள் பயனடைகின்றனர். எஞ்சியுள்ள நகர்ப் பகுதிகளிலும் இது போன்று கழிவு நீர் வசதிகளை அளிப்பதற்கான திட்டங்களை வகுக்க, விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் சென்னை மாநகருக்கு மட்டும் கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காகச் சுமார் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### பொது விநியோக முறை

**42.** மாநிலத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் பொது விநியோக முறையைச் செயற்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 5,049 நியாயவிலைக் கடைகளையும், கூட்டுறவுச் சங்கங்கள், 15,931 நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. குடும்ப அட்டை வைத்திருக்கும் 119.66 இலட்சம் பேர்களின் தேவைகளை இந்த கடைகள் நிறைவேற்றுகின்றன. மாநிலத்தில் இப்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை இருப்பதை இங்கே குறிப்பிடலாம். அரிசி, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், கட்டுப்பாட்டு விலைத் துணி ஆகியவை இக்கடைகளில் நியாயமான விலைக்கு விற்கப்படுகின்றன. குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு அரிசி வழங்குவது குறித்து உதவித் தொகை வகையில், மாநில அரசு பெருந் தொகையைச் செலவிட்டு வருகிறது. நடப்பாண்டில் இந்த உதவித் தொகைக்காக, வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 40 கோடியும் 1987–88-ஆம் ஆண்டில் இது ரூ. 50 கோடியும் ஆகும்.

**43.** மாநிலத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் 9 பகுதிகளில், சிறப்புச் சலுகை விலையில் அரிசியையும் கோதுமையையும் வழங்கும் மத்திய அரசு திட்டத்தையும் அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினால் சுமார் 38 ஆயிரம் பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைகின்றன.

### உணவு-நுகர்வோர் பாதுகாப்பு

**44.** பாதகமான பருவநிலை நிலவியபோதிலும் மத்திய அரசிடம் இருந்து அதிக அளவு உணவு தானியங்கள் வரப்பெற்றதாலும் மாநிலத்தில் கொள் முதல் செய்த இருப்புகளை விவேகமான முறையில் நிர்வகித்தமையாலும் உணவு நிலைமையை நிறைவு தரும் வகையில் மாநில அரசு நிர்வகித்துள்ளது. 1986ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 2.18 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆயினும், நடப்பாண்டு சம்பா பருவத்தில் 1987 பிப்ரவரி முற்பாதி வரையில் 4,96,650 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் காவிரி கழிமுகப் பகுதியில் ஏகபோகக் கொள்முதல் முறை தொடர்ந்து இருந்து வருகிறது. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 35 உற்பத்தி ஊக்கத் தொகையும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

**45.** வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை உருவாக்கவேண்டிய அவசியம் பற்றி மாநில அரசு சிறிது காலமாகவே நாட்டம் செலுத்தி வந்துள்ளது. அண்மையில் நாடாளு மன்றம் நிறைவேற்றிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் பற்றி மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

### வருவாய்

**46.** புதிய 20 அம்சத் திட்டத்தில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அரசு இப்போது செயற்படுத்தி வருகிறது. 31–12–1986 வரை நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரி என அறிவிக்கப்பட்டு, எடுத்துக் கொள்ளப் பட்ட 1,23,479 ஏக்கர் நிலம் 96,950 பேருக்கு வழங்கப்பட்டது. 1986–87ஆம் ஆண்டிற்கு 31–12–1986 அன்றுள்ளபடி, 1,438 பேருக்கு 1,323 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதுபோலவே, 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வீட்டு மனை வழங்கும் பணியும் திறம்படச் செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1986–87 ஆம் ஆண்டிற்கு 1,50,000 வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 1986 நவம்பர் வரையில் 1,55,720 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**47.** 1395 ஆம் விளைச்சல் ஆண்டில் வருவாய்த் துறை அதிகாரிகள் நேரடியாகச் சென்று நிலங்களைப் பார்வையிட்டு, பயிர் விளைச்சல் 50 சதவீதத்திற்கும் குறைவே என மதிப்பிட்டுள்ள பகுதிகளில் நில வரியையும், உள்ளூர் செஸ் வரியையும், உள்ளூர் செஸ் மேல் வரியையும், கூடுதல் தண்ணீர்த் தீர்வையையும், சிறப்புத் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவிட்டது. 1395ஆம் விளைச்சல் ஆண்டில் வசூலாகவேண்டிய கடன் வசூலை அரசு 1396ஆம் விளைச்சல் ஆண்டிற்கு ஒத்திவைத்தது.

### கூட்டுறவு

**48.** மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் தனி ஊக்கம் பெற்றுள்ளது. வேளாண்மைக் கடன், பயிர்த் தொழிலுக்கான குறுகிய காலக் கடன், துணைத் தொழில்களை மேற்கொள்வதற்கான நடுத் தரக் காலக் கடன், வேளாண்மை மேம்பாட்டுப்



பணிகளுக்கான நீண்ட காலக் கடன் போன்றவற்றை வழங்குவதில் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்காற்றியுள்ளன. 1985–86ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய, நடுத்தரக் காலக் கடன், ரூ. 151.02 கோடியாகும். 1986–87ஆம் ஆண்டுக்கு ரூ. 180 கோடி கடன் வழங்குவதென திட்டமிட்டிருக்க, 1986 டிசம்பர் இறுதிவரையில், ரூ. 121.34 கோடிக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1987–88ஆம் ஆண்டில் ரூ. 207 கோடிக்குக் கடன் வழங்கக் கருதப்படுகிறது.

**49.** புன்செய் நில வேளாண்மையை விரைவு படுத்தும் நோக்குடனும், புன்செய் நிலத்தில் பயிரிடும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும், மானவாரிப் பயிர் விளைவிக்க வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 சதவீத சலுகை வட்டிவீதத்தில் கடன் வழங்கிவருகின்றன. இந்த அனைத்து இனங்களிலும் அரசு 7.5 சதவீத வட்டியை உதவித் தொகையாக அளித்து வருகிறது. அவ்வாறே, சிறு தொழிலிலும், குடிசைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர், தொடர்ந்து 4 சதவீத சலுகை வட்டிக்கு உற்பத்திக் கடனைப் பெறுவர்.

**50.** கூட்டுறவு அமைப்பின்கீழ் ஆதிதிராவிடர் களைச் சேர்ப்பதற்குத் தொடர்ந்து அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 1985–86ஆம் ஆண்டிலும், 1986–87ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு ஆண்டும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 10,000 பேர் கூட்டுறவு அமைப்பின்கீழ் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர். அத்துடன், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் ஆதிதிராவிடர்கள் அதிகமாகக் கடன் வாங்குவதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 250 வழங்கும் மற்றொரு திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ், 1985–86இல் 1,000 பேர் கடன் உதவி பெற்றிருக்க, 1986–87இல் 1,250 பேர் கடன் உதவி பெற்றுள்ளனர்.

**51.** உழவர்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து வழங்கிவருகின்றன. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 73.38 கோடி மதிப்புள்ள இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 1986–87ஆம் ஆண்டில், ரூ. 82 கோடி மதிப்புள்ள உரம் வழங்குவதென ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில், 31–12–1986 வரை, ரூ. 70.61 கோடி மதிப்புள்ள உரம் வழங்கப் பட்டுள்ளது. 1987–88ஆம் ஆண்டில் ரூ. 100 கோடி மதிப்புள்ள உரத்தை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

**52.** கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் விளை பொருளை உயரளவு ஆதாயம் கிட்டும் வகையில், விற்பனை செய்ய ஏற்பாடு செய்து கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து உதவி வருகின்றன. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அவர்களுடைய விளைபொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், செய்யும் விற்பனை நடப்பாண்டில், ரூ. 135 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

### வீட்டு வசதி—நகர்ப்பகுதி வளர்ச்சி

**53.** வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும், குடிசைப்பகுதி மேம்பாடு, நகர்ப்பகுதி மேம்பாடு ஆகியவற்றிலும் மாநில அரசு அக்கறை காட்டி வருகிறது. வீட்டுவசதிப் பெருந்திட்டம், 1986–87 முதற்கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. அதைச் செயற்படுத்தும் புதிய அணுகுமுறைபற்றி சட்டப் பேரவையில், ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரையில், ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டுவசதிப் பெருந்திட்டத்தின்கீழும், கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழும் 40,000 வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. பயனீட்டாளர்களுக்கு வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு மட்டுமின்றி, வீட்டு வசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டுக் கழகமும், 1986–87இல், ரூ. 12 கோடி அளவுக்கு நிறுவன நிதியுதவி அளிக்கும். 'இந்திரா ஆவாஸ் யோஜனா' திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர்கள் பழங்குடியினருக்கு 25,504 வீடுகள் கட்ட, 1986–87இல் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், மாநில அரசு, ரூ. 23.66 கோடி ஒதுக்கியிருப்பது, குறிப்பிடத்தக்கதாகும்.

**54.** குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இதுவரை 68,000 குடும்பங்கள். குடிசைப்பகுதி மேம்பாடு விரைவுத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளன. அடுத்த இரண்டாண்டுகளில் மேலும், 13,600 குடும்பங்கள் இத் திட்டத்தின்கீழ் பயனடையும். சென்னை மாநகரில் மட்டுமே வீட்டுவசதிப் பணிகளை மேற்கொண்டிருந்த தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தற்போது 45 நகரங்களில் தம்முடைய பணியை மேற்கொண்டுள்ளது. விரைவில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிற தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கென ரூ. 40 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டுள்ளது ; ஒரு இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடையும்.

**55.** நகர்ப்பகுதி வளர்ச்சியை எடுத்துக் கொண்டோமானால், நகர்ப்பகுதி வளர்ச்சியை ஏற்புடைய முறையில் சீராக இருக்கும் வகையில், அதை முறைப்படுத்த மத்திய அரசு நியமித்துள்ள நகர்மயமாக்கும் தேசியக் குழு வகுத்துள்ள கொள்கையின் அடிப்படையில், மாநில நகர்மயக் கொள்கையை வகுப்பதில், மாநில அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. சிறிய, நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி தொடர்பான மத்திய அரசு

பொறுப்பேற்கும் திட்டம், மேலும் ஒன்பது நகரங்களுக்கு நீட்டிக்கப்பட்டு வருகிறது.

### போக்குவரத்து

**56.** இம் மாநிலத்திலுள்ள 14 போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் பாராட்டத்தக்க வகையில் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள இப்போக்குவரத்துக் கழகங்கள் நிதி வகையிலும், திட்ட வகையிலும் எய்தியுள்ள சாதனையை, மத்திய அரசுத் திட்டக் குழு பாராட்டியுள்ளது. பெரும் பாலான போக்குவரத்துக் கழகங்களின் செயல் பாட்டிலிருந்து ஓரளவு ஆதாயம் கிடைத்த போதிலும், இடுபொருள்களின் விலையேற்றத்தினால், அதே அளவிற்குத் தொடர்ந்து ஆதாயம் ஈட்டுவது இடர்பாடாகவுள்ளது. எனவே, பேருந்துக் கட்டணத்தை சிறிது உயர்த்துவது தவிர்க்க முடியாததாகிறது.

**57.** இம் மாநிலத்திலுள்ள சாலைப் போக்கு வரத்து முறையை மேம்படுத்தும் நோக்குடன், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய அளவிலான மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள் கொண்ட அனைத்துச் சாலை களையும் அரசு பராமரித்து வருகிறது. இத்துடன், கிராமப்புற சாலைகள் திட்டம், புதிய பேருந்து வழித்தடங்களை அரசு மேற்கொள்ளும் திட்டம், கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத் தின்கீழ் கிராமப்புற இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் போன்ற பயன் அளிக்கும் சிறப்புப் பணித் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

**58.** தூத்துக்குடியிலுள்ள முக்கிய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்துச் செல்வதற்கு என்று தனியாக வடிவமைக்கப்பட்ட மூன்று பெரிய அளவி லான சரக்குக் கப்பல்களை, மாநில அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வாங்கியுள்ளது.

### சமூக நலன்

**59.** மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை நல வளர்ச்சிப் பணித் திட்டத்தினால் இப்போது 1,17,000 குழந்தைகளும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் 70,000 பேரும் பயனடைகின்றனர்.

**60.** உடல் ஊனமுற்ற குழந்தைகள் மற்றும் வயது வந்தோருக்கு மறுவாழ்வு அளிக்க அரசு பல பணிகளை செயற்படுத்தி வருகின்றது. முன்னோடித் திட்டமொன்று தொடங்கப்பட்டு அதன் பயனாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 75 இலட்சம் செலவில் மத்திய அரசு உதவியுடன் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூக நலப் பணிகளில் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்க அரசு ஊக்கமளித்து வருகிறது. தரமான இனிப்புப் பண்டங்களைத் தயாரித்து, அரசு நிறுவனங்கள், கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதில், உடல் ஊனமுற்ற பெண்களை வேலைக் கமர்த்தும் திட்டமொன்றை தமிழ்நாடு சமூக நல வாரியம் இந்த ஆண்டு செயற்படுத்தியுள்ளது. உடல் ஊனமுற்ற பெண்களை தொண்டு நிறுவனங் களின் உதவியுடன் வேலைக்கமர்த்தி ஆவின் பால் விற்பனை நிலையங்களைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது.

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலன்

**61.** மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர், பழங் குடியினரின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த, அரசு சிறப்புக் கூறுகள் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடும்பங் களில் 50 சதவீதம், வறுமைக் கோட்டினைத் தாண்டவும், அவர்களுடைய குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் உதவும் எண்ணத்தில், இவ்விரு திட்டங்களும் செயற்படுத்தப் படுகின்றன. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் கல்வி கற்கும் நிலையை உயர்த்த, மாநில அரசு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ்ப் படிப்படியாக ஏராளமான பேருக்கு படிப்புதவித் தொகை அளித்தும், சீருடைகளையும், பாடப் புத்தகங் களையும் வழங்கியும், மாணவரில்லங்களில் தங்கி, உணவு உட்கொள்ள வசதியை அதிகரித்தும் வருகிறது. அரசால் நடத்தப்படும் 765 மாணவ ரில்லங்களில், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் சுமார் 52,000 பேருக்கு இலவசமாகத் தங்கும் வசதியும், உணவு வசதியும் அளிக்கப் படுகின்றன. இவர்களுக்குத் தரமான உணவை அதிக அளவில் வழங்க, இந்த மாணவரில்லங்களுக்கு அளிக்கப்படும் உணவுக் கட்டணத்தையும் இந்த ஆண்டு நாம் அதிகரித்துள்ளோம். அடுத்த ஆண்டு இது போன்று மேலும் 15 மாணவரில்லங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

**62.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தங்கும் வசதியும், உணவு வசதியும் அளிக்க, மாநில அரசு, மாணவரில்லங்களை நடத்தி வருகிறது. தற்போது அத்தகைய மாணவ ரில்லங்கள் 557 உள்ளன. அடுத்த ஆண்டில், மேலும் 15 மாணவரில்லங்கள் தொடங்கக் கருதப்படுகிறது.



ஆதிதிராவிடர் மாணவரில்லங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தை அதிகரித்தது போலவே, இந்த மாணவரில்லங்களிலும் தரமான உணவை அதிகமான அளவில் அளிக்க, இதற்கான உணவுக் கட்டணமும் இந்த ஆண்டு கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் சுமார் 32,000 மாணவர்கள் பயனடைவரென்று எதிர் பார்க்கப் படுகிறது. இந்த இலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுத, இவர்களுக்குச் சிறப்பு பயிற்சி வகுப்புகளையும் அரசு நடத்தி வருகிறது.

### அகதிகள் மறுவாழ்வு

**63.** இலங்கைத் தமிழர்கள் மீது தொடர்ந்து இழைக்கப்பட்டுவரும் வன்முறைகள் குறித்தும், பொருளாதாரத் தடைகளினால் இலங்கைத் தமிழர் பசியால் வாடுவது குறித்தும் இம் மாநில அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பதில், இம் மாநில அரசு, தொடர்ந்து அதிகமான தொகையைச் செலவிட்டு வருகிறது. அத்துடன், அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக அரசு ரூ. 3.62 கோடி செலவிட்டுள்ளது.

### நீதி நிர்வாகம்

**64.** நீதி மன்றங்கள் விரைந்து நீதி வழங்க, உயர்நீதி மன்றத்தின் பரிந்துரைகளின்பேரில் நீதித் துறைக்குத் தேவையான பணியாளர், கட்டிட வசதி உட்பட அனைத்து வசதிகளையும் அரசு அளித்து வருகிறது. உயர்நீதி மன்றத்திற்காக ரூ. 5.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதல் கட்டிடங்களைக் கட்ட, அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. 1986–87-ஆம் ஆண்டில் பின்வரும் உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1) சென்னை மாநகரில் சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் கூடுதலாக ஒரு நீதிமன்றம்

(2) நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள வள்ளியூரில் ஒரு மாவட்ட முனிசிப் நீதிமன்றம்

(3) நாகப்பட்டினத்தில் நீதித் துறை சிறப்பு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்

(4) இராமநாதபுரத்தில் நீதித் துறைக் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்

(5) தென் ஆர்க்காடு மாவட்டம், திட்டக்குடியில் நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம்.

**65.** அரசு வழக்குரைஞர்கள், அரசு உதவி வழக்குரைஞர்கள் ஆகியோர் வழக்கு நடத்தும் பணியை ஒருங்கிணைத்து செம்மைப்படுத்த வழக்குத் தொடர் இயக்ககம் ஒன்று தனியாக இந்த ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### காவல் துறை

**66.** மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காக்க காவல் துறையினரின் திறனைப் பெருக்கவும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த அமைதியான ஒரு சூழ்நிலையை உருவாக்கவும், காவற்படையை நவீனமயமாக்கும் பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயற்படுத்தி வருகிறது. காவல் துறைக்கு, வாக்கி–டாக்கி, மீஉயரலை சாதனங்கள் முதலிய நவீன சாதனங்களை மத்திய நிதி உதவியுடன் வழங்கி, அத்துறையின் அடிப்படை வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. 1986-87ஆம் ஆண்டு ரூ. 1.39 கோடி செலவில், எட்டு இடங்களில், ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படை பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டும்போதும், பாதுகாப்புப் பணியில் இருக்கும்போதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி அளிக்க, காவல் துறையினரின் பயனுக்கு ரூ. 25.72 இலட்சம் செலவில் நோயாளி ஊர்தி போன்ற சிறப்பு போக்குவரத்து வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. காவல்துறைக்குக் கட்டிடங்களும், காவலர்களுக்குக் குடியிருப்புகளும் கட்ட, அரசு, ரூ. 8.57 கோடிக்கு வகை செய்துள்ளது. தூத்துக்குடியில் ரூ. 19.23 இலட்சம் செலவில் தகவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.



### மீன் வளம்

**67.** ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கடல் மற்றும் உள்நாட்டு நீர் நிலைகளில், மீன் உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 5.20 இலட்சம் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு எடுத்த நடவடிக்கைகளின் பயனாக, 1987–88-க்குள்ளாகவே, ஓராண்டின் உற்பத்தி அளவு 4.80 இலட்சம் டன்னாக எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு நீர் நிலைகளில், மீன் வளர்ப்பை மேம்படுத்த அரசு பல்வேறு இடங்களில் மீன்பண்ணை வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. நடப்பாண்டில் பவானிசாகரில் ஒரு மீன்வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது; மணிமுத்தாறில் ஒரு பண்ணை உருவாக்கப்பட்டு வருகிறது. கடலில் மீன் பிடிக்க மாநிலத்திலுள்ள பல்வேறு மீன்பிடி துறைமுகங்களில் அடிப்படை வசதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற வசதிகள் 9 இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 4 இடங்களில், இந்த வசதிகள் உருவாக்கப் படுகின்றன. தொண்டைக்காடு, காரங்காடு, வாணியம்சாவடி, பரங்கிபேட்டை, ஆரியங்காடு ஆகிய இடங்களில் பெரிய, சிறிய அளவில் உப்பங்கழிநீர் மீன் வளர்ப்புப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**68.** மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, மீனவர் குடும்பத்தினருக்கு இலவசமாக வீடுகள்



ஒதுக்கவும், மீனவர் குடியிருப்புகளை முக்கிய சாலை களுடன் இணைக்கவும், அலைத்தடுப்புச் சுவர் கட்டவும், புயலிலிருந்து பாதுகாத்துக்கொள்ள புகலிடம் கட்டவும் வகைசெய்கின்ற திட்டங்களை, அரசு நிறைவேற்றி வருகிறது. மீனவர்களுக்காக, 10,035 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீனவர் தொகுதிக் காப்புறுதித் திட்டமும் செயற்படுத்தப் பட்டுள்ளது. மீனவர்கள் இறந்துவிட்டாலும், நிலையாக ஏலாமையுற்றாலும் அவர்களுடைய குடும்பத்தினர் இத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவர். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், கூட்டுத் துறையில், தமிழ்நாடு மரைன் பிளாஸ்ட் என்னும் நிறுவனத்தைத் தொடங்கி யுள்ளது. நுரைவளம் அதிகமாக உள்ள கோரமண்டலக் கடற்கரையில், கடலில் சென்று மீன் பிடிப்பதற்குப் பயன்படும் சிறப்பு வகைப் படகுகள் இங்கு கட்டப் படும். ரூ. 70 இலட்சம் செலவில், 54 டன் திறன் கொண்ட வலை தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும் இக்கழகம் தொடங்கியுள்ளது.

### ஊரக வளர்ச்சி

**69.** மாநில அரசு, வறுமை ஒழிப்புத் திட்டங் களை முனைப்புடனும் வெற்றிகரமாகவும் செயற் படுத்திவருகிறது. 31–12–1986 வரையில், ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய கிராமப் புற வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற நில மற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் எய்தியுள்ள சாதனைகள் குறிப்பிடத்தக்கதாகவுள்ளன. ஒருங் கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 80,000 புதிய குடும்பங்களுக்கு உதவியளிப்பதென ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 31–12–1986 வரையில், 58,714 குடும்பங்களுக்கு உதவியளிக்கப் பட்டுள்ளது. இதற்கான செலவு, 1986–87 நிதி யாண்டிற்கான ஒருமொத்த நிதி ஒதுக்கத்தில், 68 சத வீதம் ஆகும். ஏற்கெனவே நிதியுதவி பெற்று, இரண்டாவது முறையாக நிதியுதவி தேவைப்படுகிற குடும்பங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு இலக்கு 1,51,000 குடும்பங்களாக இருக்க, 31–12–1986 வரையில், 1,04,743 குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிகமான எண்ணிக்கையில் ஆதிதிராவிடர்களுக்கும், பழங் குடியினருக்கும் மகளிருக்கும் நிதியுதவி வழங்க தனி முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. 31–12–1986 வரையில், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில், 45 சதவீதம் பேர் ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் ஆவர் ; 33 சத வீதம் பேர் மகளிராவர்.

**70.** இதுபோலவே, 1986–87இல், 263 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்குவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 1986 டிசம்பர் வரையில், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 229.19 இலட்சம் உழைப்பு நாட்களை அரசால் உருவாக்க முடிந்தது. இக்கால அளவில் ஏற்பட்ட செலவு 1986–87ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கத்தில் 77 சதவீதமாகும். 1986–87இல் 242 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்க, கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், 31–12–1986 வரை யில், 198.04 இலட்சம் உழைப்பு நாட்கள் உரு வாக்கப்பட்டுள்ளன. ஆண்டு நிதி ஒதுக்கீட்டில், 82 சதவீதம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

### சமூகக் காடுகள்

**71.** சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பின் உதவியுடன், சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தை, இந்த அரசு, தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. அடுத்த ஆண்டு, 41,000 எக்டேர் பரப்பில், காடு வளர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில், ஒதுக்கக்காடுகள் நீங்கலாகக் காடு வளர்க்கப்படும் 20,000 எக்டேர் பரப்பும் அடங்கும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் வாயில்களை மேம்படுத்தவும், ஒதுக்கக்காடுகளில் ஆண்டுதோறும் சுமார் 20,000 எக்டேர் பரப்பில், காடு வளர்க்கப்பட்டு வருகிறது. மரம் நடவும், இயற்கைச் சூழலைப் பாது காக்கவும், பொது நிறுவனங்களுக்கும் தனியார் அமைப் புகளுக்கும் செடிகள் வழங்கப்பட்டுள்ளன. 1986–87இல் ஜனவரி மாதம் வரை, சுமார் ரூ. 3.73 கோடி மதிப்புள்ள செடிகள் வழங்கப்பட்டுள்ளன.



### அறநிலையத் துறை

**72.** நிதியுதவி தேவைப்படும் கோயில் நிருவாகத் தினருக்கு உதவ, அரசு 1985–86இல், அன்றாட வழிபாடுகள் நடைபெறுவதற்கு உதவித் தொகையாக ரூ. 35 இலட்சத்தை வழங்கியுள்ளது. நடப்பாண்டில் மாநிலத்தில் 83 கோயில்களுக்கு உதவித் தொகை வழங்கிய வகையில், இது ரூ. 45 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**73.** துணை மற்றும் உதவி ஆணையர் பொறுப்பிலுள்ள கோயில்களின் பணியாளர்களுக்கு, 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் திருத்த ஊதிய வீதத்தை அரசு அறிவித்தது. மேலும், 1 முதல் 4 வகையின் கீழ் வரும் கோயில் களின் பணியாளர்களுக்கு, ரூ. 200 கருணைத் தொகையையும் அரசு அறிவித்துள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




பத்தாண்டுகளில் பலரும்
பாராட்டும் வண்ணம்
புரட்சித் தலைவர்

# எம்.ஜி.ஆர்

ஆட்சியில்

## தமிழகத்தில் நவீனமயமான தொழிற் புரட்சி !

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற்சாலை திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்
- ரூ. 5½ கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் திட்டம்
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்சாலை
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் திட்டம்
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்திட்டம்
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் திட்டம்.

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை,
சென்னை-600 002.

டிட்கோ

